TIME Travel & TOURS
K. SUTHAKARAN
(Travel Consultant)
136 Kenton Road * Harrow * Middlesex Ha3 8Az
Tel: 0181-909 9995
Fax: 0181-909 9997

France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Suisse: 2.50SFrs.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 2 17 - 23 ஒக்டோபர் 1996 முழக்கம் : 92

TIME Travel & TOURS
K. SUTHAKARAN
(Travel Consultant)
136 Kenton Road * Harrow * Middlesex Ha3 8Az
Tel: 0181-909 9995
Fax: 0181-909 9997

# கிளிநொச்சிப் பகுதியில் இருந்து இராணுவத்தை விரட்டியடிப்போம்

## புலிகள் அறிவிப்பு

எமது மண்ணை ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா இராணுவத்தை ஒரு கணமேனும் நிம்மதியாக இருக்க விடமாட்டோம். எமது மக்களை அவர்களது சொந்த இடத்திலிருந்து அகதிகளாக்கிவிட்டு கிளிநொச்சியை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினரை விரைவில் விரட்டியடிப்போம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் வன்னியில் அறிவித்துள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

. விடுதலைப் புலிகளின் இந்த அறிவிப்பானது, பாதுகாப்பு ஆய்வாளர்களின் கவனத்தை திருப்பியுள்ளதுடன் கிளிநொச்சி யுத்தத்தின் மூலம் அரச சொல்வதுபோல பெருமளவு புலிகள் கொல்லப்படவோ, அன்றி காயப்படவோ இல்லை எனவும், முன்னரை விட தீவிரமான மனோநிலையில் புலிகள் இருப்பதால் கிளிநொச்சியில் முல்லைத்தீவு முகாமில் பெற்றது போன்ற ஒரு பாடத்தினை விரைவில் சிறீலங்கா பெறப் போகிறதெ, னவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அச்சமடைந்த அரசு பூநகரி இராணுவ முகாமினை மூடி அங்கிருந்த படையினரை கிளிநொச்சிக்கு அனுப்பியுள்ளது. அத்துடன் பூவரசங்குளத்தில் அமைந்திருந்த முகாமும் புலிகளின் தாக்குதல் அச்சம் காரணமாக பலமைல்கள் உள்நோக்கி நகர்த்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் வன்னி அறிவிப்பினைத் தொடர்ந்து மக்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# புலிகள் படை பலத்தை இன்னும் நவீன மயப்படுத்துகிறார்களாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது இராணுவத்தை பலம்மிக்க பாரம்பரிய இராணுவமாக மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர். இந்த வகையில் அண்மையில் கம்போடியாவில் வைத்து SAM ரக விமான எதிர்ப்பு ஏவுகணைத் தொகுதியை வாங்கியுள்ளனர். இவையே இதுவரை விடுதலைப் புலிகளால் வாங்கப்பட்ட அதிக விலை கூடிய பொருட்களாகும். இதே போன்றதொரு தொகுதி முன்னர் பேச்சுவார்த்தை நடந்த காலத்திலும் கொண்டுவரப் பட்டிருந்ததாக சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமான எதிர்ப்பு, மற்றும் கடற் புலிகளின் பலத்தினை அதிகரிப்பதாலேயே வடக்கில் நிலைகொண்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# சந்திரிகாவால் எனக்கு ஆபத்து

## பாராளுமன்ற உறுப்பினர் அறிக்கை

இது எனது கடைசி அறிக்கையாகவும் இருக்கலாம். சந்திரிகாவின் உத்தரவின் பேரில் அரச பயங்கரவாதிகள் என்னைக் கொல்ல முயற்சி எடுத்து வருகின்றனர். இந்த ஆட்சியில் மனித உரிமைகள் என்ற சொல்லிற்கே இடமில்லை. வாழ்வின் மிக

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# நாசகார ஆயுதங்களை இஸ்ரேலிடமிருந்து சிறீலங்கா கொள்வனவு செய்துள்ளது

இஸ்ரேலிய அரசினால் புதிதாக தயாரிக்கப்பட்ட அதி சக்தி வாய்ந்த நாசகாரக் குண்டுகளை அமெரிக்காவின் ஆலோசனையின் பேரில் சிறீலங்காவின் விமானப் படை பெற்றுள்ளது. இஸ்ரேலிய அரசிடம் சிறீலங்கா செய்துகொண்ட நாசகார ஆயுதக் கொள்வனவின் முதற் தொகுதியான இந்த விசேட குண்டுகள் கொழும்பிற்கு ஏற்கனவே வந்து சேர்ந்துள்ளன.

நேர்த்தியான குண்டுகள் (SMART BOMBS) என அழைக்கப்படும் இவை நாசகார குண்டுகள் பிரிவினுள் அடங்குகின்றன. குடிசார் யுத்தம் நடக்கும் பல நாடுகளில் இவ்வகையான குண்டுகள் பாவிப்பதை சர்வதேச சமூகம் எதிர்த்து வந்தபோதிலும் சிறீலங்காவுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன. இக் குண்டுகளினால் முல்லைத்தீவு காட்டுப் பிரதேசத்திலுள் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# கடற்படைக்கு கப்பல் கொள்வனவில் முப்பது கோடி ரூபா மோசடி?

(கொழும்பு)

சிறீலங்கா கடற்படைக்கு கப்பல்களை கொள்வனவு செய்வதில் 30 கோடி ரூபா மோசடி இடம்பெற்றுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

கடற்படையினரின் தேவைக்கென அதிவேக கப்பல்கள் இரண்டை வாங்குவதற்கு கேள்விப் பத்திரம் கோரப்பட்ட போது ஒரு உள்ளூர் நிறுவனமும், ஐந்து வெளிநாட்டு நிறுவனங்களும் தமது விலைப் பட்டியல்களை அனுப்பி வைத்தனவாம்.

அவற்றில் வெளிநாட்டு நிறுவனங்களின் விலையை விட உள்நாட்டு நிறுவனமான கொழும்பு டொக்யாட் நிறுவனத்தின் விலை குறைவாக இருந்ததாம். ஆனால் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சோ

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# சிங்கள மக்களைத் திசை திருப்ப தலைவர் பிரபாகரன் மீது வழக்கு

(கொழும்பு)

முல்லைத் தீவு, மற்றும் கிளிநொச்சியில் நடந்த சத்ஜய இராணுவ நடவடிக்கைகளில் படையினருக்கு ஏற்பட்ட கடுமையான இழப்புக்களைத் தொடர்ந்து மூடிமறைக்க முடியாத நிலையில், கடந்த வாரம் சிறீலங்கா அரசாங்கம் பத்திரிகைத் தணிக்கையை நீக்கியது.

அதன் பின் ஆயிரக்கணக்கான படையினர் இறந்தது, காயப்பட்டது தொடர்பான செய்திகள் வெளிவர, வெளிவர சிங்கள மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக கொதித்தெழ ஆரம்பித்துள்ளனர். இதனால் பெரும் நெருக்கடிக்குள்ளான அரசாங்கம், தமிழீழ மக்களின் தேசியத் தலைவர் பிரபாகரன் மீதும், விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் மீதும், கடந்த

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# பிச்சைக்காரர்களுக்கு ஆபத்து

கொழும்புக்குள் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பிச்சைக்காரர்கள் வேடத்தில் அரசாங்கத்தின் முக்கிய இடங்களை உளவு பார்த்து

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

ஏசியன் என்ரபிறைசஸ்

பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, நாலுமுழ வேட்டி, கிப்ஸ் சாரம், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், திருமணத்திற்கான அனைத்துப் பொருட்களும் கூறைச்சேலை, பாவாடை, சட்டை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எல்லா நிறங்களிலுமான சட்டைத்துணிகள்

* தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச்சீட்டும் வழங்கப்படும் *

ASIAN ENTERPRISE

Tel: 01/291 46 52
Fax: 01/291 46 37

Hohl.Str 78,
8004 Zurich.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி. பாறுவதி வல்லிபுரம்**

(மட்டுவில், சாவகச்சேரி)

மறைவு: 27.09.94

*ஆண்டுபல சென்றாலும்*
*ஆறுமோ எங்கள் துயர்*
*பாசத்தை பொழிந்து அன்பாக வளர்த்து*
*நேசமுடன் அறிவைப் பொழிந்து*
*எங்களை உருவாக்கிய*
*எம் அருமைத்தாயே!*
*உங்கள் பாசத்திற்கு பரிகாரம்*
*கடலளவு என்றாலும்*
*இறுதியில் கவிதையாக*
*சமர்ப்பிக்கிறோம்.*

**தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.**

கணவர்: ஆறுமுகம் வல்லிபுரம்

பிள்ளைகள்: வேலாயுதம், சந்திரமலர், ஈஸ்வரி (இலங்கை), சாம்பசிவம், சர்வானந்தன், துரைசிங்கம் (சுவிஸ்)

மருமக்கள்: வேலுப்பிள்ளை (மதுவரித் திணைக்களம் - யாழ்ப்பாணம்), தர்மகுலசிங்கம், திரவியம் (இலங்கை), கோகிலராணி, சசிகலா, நாகநந்தினி (சுவிஸ்)

மற்றும் சிவசுப்பிரமணியம் (சின்னத்துரை)

*தகவல்: குடும்பத்தினர்*

## மரண அறிவித்தல்

தோற்றம்: 04.04.41



மறைவு: 08.10.96

**பொன்னையா சரவணமுத்து (முத்தண்ணை)**

(நில அளவைப்பகுதி உத்தியோகத்தர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், புத்தூர் கிழக்கை வதிவிடமாகவும், தற்போது ஜேர்மனி காஸ்ரொப் (Castrop) இல் வசித்தவருமான பொன்னையா சரவணமுத்து 08.10.96 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜய சிறி (ஜேர்மனி), யமுனா (ஜேர்மனி), சுசிதா (இலங்கை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பிரபாகரன் (ஜேர்மனி), சிவபாலராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசானாவின் அன்புப் பேரனும், நடராஜா, செல்லம்மா, பாக்கியம், கனகம்மா, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள்
Waldfriedhoh - Bladenhorst (HBF ற்கு அருகாமையில்), 44579 Castrop - Rauxel
என்னும் முகவரியில் 17.10.96 வியாழக்கிழமை
காலை 10.00 – 12.00 மணிக்கு நடைபெறும்.

இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் – பிரபாகரன் சிவபாலராஜா (ஜேர்மனி)
தொடர்புகளுக்கு: 02305 86840 / 02361 891507

## வீரமரணம்



**மேஜர் கஜாழினி / தயாழினி**

***(கோமதி அரியராஜசிங்கம்)***

(மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை)

**விடுதலைக்கு மழலையாய்: 27.03.1975**
**மண்ணிற்கு வித்தாய்: 27.09.96**

மயிலிட்டி தெற்கு தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற அரியராஜசிங்கம், தவமணி ஆகியோரின் அன்புப் புதல்வியும், மாலதி (பாரிஸ்), பாமதி (தமிழீழம்), சபேசன் (பாரிஸ்), வளர்மதி (தமிழீழம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமான கோமதி (மேஜர் கஜாழினி / தயாழினி) கடந்த 27.09.1996 அன்று நடந்த கிளிநொச்சிச் சமரில் வீரமரணமடைந்துவிட்டார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:* – மாலதி (பாரிஸ்), சபேசன் (பாரிஸ்)
தொலைபேசி: 01 49 34 06 27.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# 90ம் நாள் நினைவாஞ்சலி

18.07.1996 முல்லை மண் மீட்பில் தன்னைத் தாயகத்திற்கு அர்ப்பணித்தவரும், யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மாணவியுமான

## செல்வி. சுபகௌரி சிவசுப்பிரமணியம் (மேஜர் கண்ணகி)

### அவர்களின் தொண்ணூறாம் நாள் நினைவாஞ்சலி (15.10.1996)



தாயின் மடியில்: 08.04.1974

தாய்மண் மீட்பில்: 18.07.1996

எம்முயிரில் கலந்தவளே, எம்மிதயம் நிறைந்தவளே,
உன் உடலைச் சிதறவிட்டு உலகை விட்டே போனதென்ன?
தொட்டிலிலே நீ கிடக்க உன் அம்மா சொர்க்கபுரி போனானே!
கட்டியணைத்தெடுத்து உனைக் கனிவாக நாம் வளர்த்தோம்
மடிமீது கிடத்தியுந்தன் மழலையினை நாம் இரசித்தோம், நீ
துள்ளி விளையாட உன் சுவட்டழகைப் பார்த்திருந்தோம்
வேம்படியில் உனைச் சேர்த்து கல்வியில் மேம்படவே செய்தோமே
சிரித்த முகத்தோடு நீ சிந்துகின்ற வார்த்தைகள் தான்
முத்தோ இரத்தினமே என் அம்மா முழு வைரக் களஞ்சியமோ
நகைச்சுவையைச் சிந்திவிட்டு நகைக்காமல் நீ இருப்பாய்
சிலந்தியைக் கண்டவுடன் சிலுசிலுத்து நடுங்கி என்னை
அணைத்திருந்து அச்சமுடன் அழுவதைத்தான் மறப்பேனா
பெரியவளாய் நீ ஆனாய் பிரிந்தேனே உன்னயடி
திருமணச் சிறைக்குள்ளே நான் சிக்கியதால் வந்தவினை
உயிரான உனைப்பிரிந்து உடலோடு நான் இங்கு வந்தேன்
தாய் மண்ணின் மானத்தைத் தான் காக்க புறப்பட்டாய்
ஆறு வருடங்கள் அம்மா நீ எனைப் பிரிந்தே
முல்லை மண் மீட்பினிலே நீ முடிந்து விட்டாய் எனத்
தம்பியவன் சொல்லியழ என் தலைவெடிக்கவில்லையம்மா
அன்புச் சுபா உன்பிரிவை ஆற்ற என்னால் முடியவில்லை
எத்தனை பிறவிதான் எடுத்தெடுத்து இளைத்திடினும்
அத்தனை பிறவியிலும் ஆண்டவனை நான் கேட்பேன்
என் சுபாவை என்னிடமே கொண்டுவந்து சேர்த்துவிடு
என் உயிரே பொன் மலரே ஏன் பிரிந்தாய் என்னை விட்டு
சதை கரைந்து நாளும் இங்கே சாகத்தான் நேரிடினும்
சிதையில் எரிந்திடினும் உன் சிரித்த முகம் மறப்பேனா
கண்ணகியாய் நீ மாறி கயவர்களை அழித்தாலும்
என்னை நீ தேற்றுவதற்கு என்ன வழி செய்து வைத்தாய்
எத்தனையோ சுபாக்கள் இங்கே உதிர்ந்தாரோ தாய்மண்ணுக்காய்
அத்தனை சுபாக்களுடனும் நானும் ஒரு சுபா தானே
கூறுகின்றாய் நீயுமடி வேறுபாடு காட்டவில்லை
உன் ஆத்மா சாந்திக்காய் எல்லோரும் வேண்டியழ
நான் மட்டும் வேண்டவில்லை நான் மட்டும் வேண்டவில்லை
என் ஆத்மா தனில் தானே உன் ஆத்மா கலந்ததடி
நான் இறந்த பின்னால் தான் உன் ஆத்மா சாந்தி பெறும்
தாய்மண்ணின் மானமதை காப்பதற்குத் தன்னுயிரை
எடுத்தெறிந்த மாவீரர் அத்தனை பேரினதும்
ஆத்மாக்கள் சாந்திபெற அம்மா நான் வேண்டுகின்றேன்

என்றும் உன் நினைவால் துடி துடிக்கும்
அத்தை (இலங்கை)
அண்ணா அண்ணி (பாஹ்றெய்ன்)
பெரியமச்சாள் குடும்பம் (டென்மார்க்)
குஞ்சு மச்சாள் குடும்பம் (சுவிஸ்)
சிவமச்சாள் குடும்பம் (இலங்கை)
லதா மச்சாள் குடும்பம் (இலங்கை)

*"சிவநிலையம்", வேலணை 5*
தகவல்: இராஜலிங்கம்
சுவிஸ்
தொ.பே: 2425239 *(சூரிச்)*

# ஜே. ஆர். - பண்டாரநாயக்கா

ஜே.ஆருக்கு 90 வயதாகிற்று கடந்த மாதம். சிறீலங்காவின் முக்கிய சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்தும் இதை யொட்டி அவருடனான பேட்டிகளையும், கட்டுரைகளையும் அவரது வாழ்க்கை பற்றிய படங்களையும் வெளியிட்டன.

இனப் பிரச்சினை 1950-களிலிருந்து கூர்மையடைந்து ஆயுதப் போராட்டமாக வெடித்ததற்கு ஜே.ஆரின் சிங்கள பேரினவாத நிலைப்பாடும் ஒரு முக்கிய காரணி என்பது தெரிந்த விடயமே.

ஜே.ஆரை ஒரு பெரும் தேசிய அரசியல் வாதியாக பலரும் கண்டு எழுதுகின்ற இந்த நேரத்தில் நாம் அவரது இனவாதத்தின் உளவியலை சற்று மீட்டுப் பார்ப்பது இனப்பிரச்சினையின் இருள் படர்ந்த மூலை முடுக்குகள் சிலவற்றுள் ஒளி பாய்ச்சுவது போலாகும்.

1956-ல் 24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவருவதாகக் கூறி சிங்களப் பேரினவாத அலையில் ஆட்சிக்கு வந்தார் பண்டாரநாயக்கா. களனித் தொகுதியில் தோற்



றுப் போனார் ஜே.ஆர்., ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்கா 1957 யூலையில் தமிழரசுக் கட்சியுடன் மாநில சுயாட்சிக்கான ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டார். ஆனால் பண்டா உருவாக்கிய சிங்கள இனவாத அலையே அதற்கெதிராக திரும்புகிறது. ஒப்பந்தத்திற்கு கடும் எதிர்ப்பு தோற்றுப் போயிருந்த ஜே.ஆரிடமிருந்தே கிளம்பிற்று. 2500 வருடங்களாக தனது மொழியையும், மதத்தையும் மிகக் கரிசனையுடன் காத்துவரும் சிங்கள இனம், தன்னுடைய பிறப்புரிமையைக் காக்க இம்மியளவேனும் விட்டுக் கொடுக்காமல் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது எனக் கூக்குரலிட்ட ஜே.ஆர். சிங்கள இனத் துவேசத்தைக் கிளறிவிட்டு அந்தப் பிரபல பாதயாத்திரையிலும் [05.10.1957] ஈடுபட்டார்.

இந்தக் கால கட்டத்தில் எஸ்.பி. அமரசிங்கம் என்பவர் வெளியிட்டு வந்த டிரிபியூன் என்ற பத்திரிகையில் ஆய்வறிஞர் ஜேம்ஸ் ரி. ரத்னம், பண்டாரநாயக்கா ஒரு தமிழ் பரம்பரையில் தோன்றியவர் என ஆதாரங்களுடன் நிறுவி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தார்.

15ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழகத்திலிருந்து இலங்கை வந்த நவகொமுவ தேவாலயத்தின் முதலாவது பூசாரியாக விளங்கிய நீலப் பெருமாள் என்பவரது நேரடி ஆண்சந்ததியிற் தோன்றியவரே பண்டாரநாயக்கா என்று அவரது குடும்ப ஆவணங்களையும், ஒல்லாந்தர் காலப் பதிவுகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுதியிருந்தார் ரத்னம்.

பண்டாரநாயக்கா குடும்பத்தின் பரம்பரைப்பெயர் கழுகாப்புகே என்பதாகும். இது நீலப்பெருமாள்கே அதாவது நீலப்பெருமாளின் வீட்டவர் எனப் பொருள்படும். இக் குடும்பப் பெயரையே பண்டாரநாயக்கா பரம்பரையினர் முற்காலத்தில் பயன்படுத்தி வந்தனர். [கே- சிங்களத்தில் வீடு எனப்படும். குடும்பப் பெயருடன் 'கே' யையும் சேர்த்து பாவிக்கும் வழக்கம் ஒன்று சிங்கள மக்கள் மத்தியில் வழங்கி வருகிறது.] தாம் நீலப் பெருமாளின் சந்ததி எனக் கூறிப் பெருமையுற்றனர்.

## சிங்கள இனவாதிகளான இரண்டு தமிழர்கள்

1760 இல் பழைய அரச பிரதானிகள் ஒல்லாந்தருக்கு எதிராகக் கலகத்தில் இறங்கி கண்டிக்கு ஓடிவிட்ட பின் தமக்கு விசுவாசிகளாக இருந்த சில உள்ளூர் காரர்களை, ஒல்லாந்தர் மேற்குக் கரையோர நிர்வாகத்தில் அமர்த்தினர். இதில் நீலப்பெருமாளின் மகன் வழிவாரிசான தொன் பிரான்சிஸ்கோ டயஸ் விஜேதுங்க பண்டாரநாயக்கா [பிறப்பு 1720 அளவில்] என்பவர் ஹேவகம் கோறளைக்கு முதலியாராக நியமனமானார். இவரது மகன் டானியல் பண்டாரநாயக்கா. இவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள்.

டானியல் ஞானஸ்நானம் பெற்றது 16.02.1748இல். இவரது மகன் தொன்சொலமன் பண்டாரநாயக்கா. இவர் டச் கிழக்கிந்தியக் கம்பனியின் படையில் ஒரு லெப்டினன்ராக இருந்த ஜான் கிறிஸ்டோபல் ஸ்கார்ப் என்னும் ஒரு ஜேர்மன் நாட்டவரது மகளான சூசான்னா என்பவரது பேத்தியை மணமுடித்தார். இந்த ஜேர்மன் நாட்டவருடைய குடும்ப இலச்சினையில் [Coat of Arms] காணப்பட்ட 'சேபர்' எனும் ஒருவகை வாளைத் தூக்கிப் பிடித்த ஒரு வலது கை, பண்டாரநாயக்கா பரம்பரையின் ஐரோப்பிய பாணியிலான குடும்ப இலச்சினையில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

தொன் சொலமன் பண்டாரநாயக்கா பிரிட்டிஷாருக்கு மிகுந்த விசுவாசியாக நீண்ட காலம் வாழ்ந்தார். 1818ல் பிரிட்டிஷாருக்கு எதிராக கண்டியில் கிளர்ச்சி வெடித்த போது அதை அடக்க தமக்கு பெரும் உதவி செய்தவர் எனப் பாராட்டி அப்போதைய பிரிட்டிஷ் ஆளுனர் பிரவுன்றிக், தொன் சொலமனுக்கு ஒரு பதக்கம் வழங்கினார். தொன் சொலமன் பண்டாரநாயக்காவின் மகன் தொன் கிறிஸ்டபல் ஹென்றிக்கஸ் டயஸ் பண்டாரநாயக்கா. இவர் மணமுடித்தது அன்னா புளொரென்டீனா பிலிப்ஸ் என்னும் பெண்ணை. ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவக் கல்விகற்று பாதிரியாராகுவதற்கென ஒல்லாந்து சென்று வந்த பிலிப்ஸ் என்பவரின் மிக விசுவாசமான கிறிஸ்துவக் குடும்பத்தின் வழித்தோன்றலே இப் பெண்மணி. ஏற்கெனவே திருமணவலையில் இவர் தொன்சொலமனுக்கு உறவுக்காரர்.

பயபக்தியான கிறிஸ்தவர்களாயிருந்த தொன் கிறிஸ்டபல் பண்டாரநாயக்காவிற்கும், அன்னா புளோரன்டினாவிற்கும் பிறந்தவரே தொன் சொலமன் டயஸ் அபயவிக்ரம ஜயத்திலக்க செனிவரத்தின ரஜகுமாரண கடுகேரளு பண்டாரநாயக்கா. தான் ஒரு பெரும் ராஜ பரம்பரை எனக் காட்டவே இவ்வாறு ஒரு நீண்ட பெயரை அவர் சூட்டிக் கொண்டார் எனத் தெரிகிறது. இவரும் பயபக்தியான கிறிஸ்தவர். இவரது புத்திரர்தான் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா.

இவ் வரலாறுகளை மிக விரிவாக ஆராயப்புகுந்த ஜேம்ஸ் ரத்தினம் சுட்டிக்காட்ட முற்பட்டது என்னவெனில், தூய சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் பிதாமகராகவும், பேரினவாதத்தை தமிழருக்கு எதிராக தட்டி எழுப்பிக் கொண்டிருந்தவருமான பண்டாவில் ஓடுவது சுத்தத் தமிழரான நீலப்பெருமாளின் இரத்தமும் சுத்த ஜேர்மன் காரரான ஸ்கார்பின் இரத்தமும் தூய கிறிஸ்தவர்களான பிலிப்ஸ் குடும்ப இரத்தமுமே என்பதாகும். அத்துடன் பண்டா பரம்பரையின் அனைத்து மூலவர்களும், அவர்களுடன் திருமண உறவு கொண்ட அனைத்துக் குடும்பங்களும் சிங்கள மக்களின் தேசிய நலனுக்கெதிராக ஒல்லாந்தருக்கும் பின்னர் பிரிட்டிஷாருக்கும் மிகுந்த ராஜ விசுவாசிகளாகவும், எட்டப்பர்களாகவும் இருந்து வந்தவர்களே என்பதையும் ரத்னம் சுட்டிக்காட்டுவார்.

இந் நிலையில் தானே சிங்கள பௌத்த தேசிய உணர்வின் தூய வழித்தோன்றல் என பண்டா எங்ஙனம் வாய் கூசாமல் பேச முடியும் என்பதே அவரது ஆய்வில் தொக்கி நின்ற கேள்வி.

> தூய சிங்கள பௌத்த
> தேசிய வாதத்தின்
> பிதாமகராகவும்,
> பேரினவாதத்தை
> தமிழருக்கு எதிராக தட்டி
> எழுப்பிக்
> கொண்டிருந்தவருமான
> பண்டாவில் ஓடுவது
> சுத்தத் தமிழரான
> நீலப்பெருமாளின்
> இரத்தமும் சுத்த ஜேர்மன்
> காரரான ஸ்கார்பின்
> இரத்தமும் தூய
> கிறிஸ்தவர்களான
> பிலிப்ஸ் குடும்ப
> இரத்தமுமே.

ரத்தினத்தின் கட்டுரையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார் ஜே.ஆர்.

ஐ.தே.கவின் அதிகார பூர்வமான சியரட்டவில் ரத்தினத்தின் தகவல்களைக் கொண்டு பண்டாவின் மீது தாக்குதல் தொடுத்தார் அவர். பண்டா தமிழ்ப் பரம்பரை என்பதாலேயே சிங்கள இனத்தை விற்க முனைந்து விட்டார். தமிழருடன் மாநில சுயாட்சி பற்றிப் பேசி சிங்கள பௌத்த பாரம்பரியத்தையே குழி தோண்டிப் புதைக்க முற்படுகிறார் என்றெல்லாம் கடுமையாக எழுதிற்று சியரட்ட. பண்டா தூய சிங்கள பௌத்தர் அல்ல, தமிழர். ஆனால் நானே தூய சிங்கள பௌத்த வம்சத்தவன். எனவே எனது வழிநடத்தலின் கீழேயே தூய சிங்கள பௌத்தர் அணிதிரளவேண்டும் என்ற வகையில் அமைந்தன ஜே.ஆரின் பேச்சும், எழுத்தும்.

இதைக் கண்டு ஆத்திரமுற்ற ஜேம்ஸ் ரத்தினம் ஜே.ஆரின் பரம்பரையைப்பற்றிப் பதிலடியாக ஒரு ஆய்வை வரைந்தார். பண்டாவை தமிழ்ப் பரம்பரையினர் எனத் தாக்குவதற்கு ஜே.ஆருக்கு எந்த அருகதையுமில்லை எனவும், ஏனெனில், அவர் 2500 வருடப் பழமைவாய்ந்த தூய ஆரிய சிங்கள பௌத்த சந்ததியில் தோன்றியவரல்ல எனவும், 18ம் நூற்றாண்டில் தமிழகத்திலிருந்து இலங்கை வந்து வெல்கம எனும் கிராமத்தில் குடியேறிய ஒரு தமிழரின் மகனான தம்பி முதலியார் என்பவரின் கொள்ளுப் பேரனே ஜே.ஆர் எனவும் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவினார் ஜேம்ஸ் ரத்னம். (Tambi Mudaliyar's Legacy. Tribun 30.08.1957) ஜே.ஆரின் கொள்ளுப் பாட்டனாரான தம்பி முதலியாரின் தந்தை ஆச்சாரி வகுப்பைச் சேர்ந்த சுத்தத் தமிழர்.

தம்பி முதலியார் மிகச் சிறு குழந்தையாக இருக்கையிலேயே இந்தத் தமிழ் ஆச்சாரி இறந்து போய்விட்டார். இதனால் இளமையில் வறுமையில் வாடிய இப் பையன் 14 வயதில் கொழும்பில் ஒல்லாந்தப் படையதிகாரியாக இருந்த கேணல்டிரைபேக் என்பவரது வீட்டில் வேலைக்குச் சேர்ந்தான். பின்பு இப் பையன் ஒல்லாந்தரின் உள்ளூர்க் காலாட்படையில் ஒரு ஆராச்சியாக நியமிக்கப்பட்டான். ஒல்லாந்தருக்கு எதிராக பிரிட்டிஷார் கொழும்பை நோக்கிப் படையெடுத்த பொழுது தம்பி முதலியாரை ஒரு ஒற்றனாக பிரிட்டிஷ் பகுதிக்குள் அனுப்பினர் ஒல்லாந்தர். ஆனால் பிரிட்டிஷார் தம்பிமுதலியாரைப் பிடித்து விட்டனர். முதலியாருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பிரிட்டிஷாருக்கு ஒல்லாந்தரைப் பற்றி உளவு பார்த்துத் தருவதாக தம்பி முதலியார் மன்றாடியதன் பேரில் அவர் விடுவிக்கப் பட்டார். இதன் பின் பிரிட்டிஷாரின் சிறந்த ஒற்றனாக செயல்பட தம்பி முதலியார் சிங்கள பிரதானிகளின் பாணியில் தொன் ஏட்றியன் விஜசிங்க ஜெயவர்த்தனா என தனக்குப் பெயர் சூட்டிக்கொண்டார். ஒல்லாந்த் மொழி பேசியவர் இப்போது ஆங்கிலம் கற்றுக் கொண்டார். ஒல்லாந்த திருச்சபையிலிருந்து அங்கிலிக்கன் சபைக்கு மதமும் மாறிக் கொண்டார்.

15.05.1950 அன்று டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகையில் வின்சன் டி சில்வா, தம்பி முதலியாரைப்பற்றி வருமாறு எழுதினார். 'பிரிட்டிஷாருக்கு என்றும் இவரைப்போல் ஒரு விசுவாசி இருந்தது கிடையாது. அது போல சிங்களவருக்கு இது போன்ற ஒரு பச்சைத் துரோகியும் இருந்தது கிடையாது. பிலிமத்தலாவ, எகலப்பொல போன்ற துரோகிகள் தவறான வழியில் மீண்டும் சிங்கள ஆட்சியை நிலைநாட்டுவதற்காகவே முயற்சித்தனர். ஆனால் ஏட்றியன் ஜெயவர்த்தனா [தம்பிமுதலியார்] பிழைப்புக்காக துரோகத்தில் ஈடுபட்ட ஒரு நபராவார். தம்பி முதலியாரின் மகன் ஜேம்ஸ் அல்பிரட் ஜெயவர்த்தனா. இவரது மகன் யூறின் வில்பிரட் ஜயவர்த்தனா. இவர்கள் அனைவரும் கடும் கிறிஸ்தவர்கள். யூறின் வில்பிரட்டின் மகனே ஜே.ஆர் ஜெயவர்த்தனா, அரசியலில் இறங்கும் வரை இவரும் கிறிஸ்தவரே.

தம்பி முதலியாரின் வாழ்க்கை எல்லா இலங்கையருக்கும் ஒரு பாடம். குறிப்பாக தன்னையே இறுதியில் எரித்துவிடும் என அறியாமல் இப்போது நெருப்புடன் விளையாடப் போவதாகப் பயமுறுத்தும் முதலியாரின் கொள்ளுப் பேரனான ஜே. ஆருக்கு அது ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும்.

"...இலங்கையில் இருக்கும் மனிதர்களுக்குள் ஜெயவர்த்தனாவே தமிழருக்கு எதிராக ஜிகாத் [புனித யுத்தம்] நடத்துவேன் எனக் கூறுவது என்ன கேலிக் கூத்து" என எழுதினார் ஜேம்ஸ் ரத்னம்.

இலங்கை நாளை ஏதோ காரணத்தால் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தால் அங்கு நபிகள் நாயகத்தின் புதல்



வர்களுள் ஒருவராக ஜூனியஸ் றிச்சட் ஜயவர்த்தனா இருப்பதும் ஒன்றும் அதிசயிக்கத் தக்கதல்ல. அப்படியான அரசியல்வாதிக்கு 'தான்' என்பதே எல்லாம். நாடு என்பது துச்சம். இப்படியானவர்கள் ஆபத்தானவர்கள். கடவுள்தான் எமது நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என தமது ஆய்வை முடிக்கிறார் ஜேம்ஸ்ரத்னம்.

"எங்கே நமது தமிழ் மூலம் தெரிந்துவிடுமோ என்ற மனச்சஞ்சலமும்", "என்னில் தமிழ்க் கலப்பு உள்ளது" என்ற அக அரிப்பால் ஏற்படுகின்ற ஒரு வகை இரண்டக ஆழ் உளச்சிக்கலும் தென்னிலங்கை வாழ் அரசியல்வாதிகள், அறிஞர்கள், இனவாதிகள் எனப் பலரை கடும் தூய சிங்கள பௌத்த பேரினவாதிகளாக மாற்றினவோ என இவையும் இது போன்ற வேறும் சில வரலாறுகளும் எண்ணத் தூண்டுகின்றன.

உதாரணமாக இன்று மிக முரட்டுத் தனமான சிங்கள இனவாதத்தை உமிழ்ந்து கொண்டிருக்கும் கலாநிதி நளின் த சில்வாவைக் குறிப்பிடலாம். இவரது குடும்பத்தவர் தமிழகத்தின் தென்கிழக்கு, மற்றும் கிழக்குக் கரைப்பகுதியிலிருந்து 18-ம் அல்லது 19-ம் நூற்றாண்டில் இலங்கையில் வந்து குடியேறிய பட்டணவர் வகுப்பைச் சேர்ந்த தமிழர். இதை அவரிடம் ஒருமுறை நான் கேட்ட போது மிகச் சங்கடப்பட்டார். ஆனால் சமாளித்துவிட்டார்.

இன்றைய நிலையில் நாம் இப்படியாக சிங்களப் பேரினவாதத்தின் சில உளவியல் உட்கிடைகளையும் ஆராய்வது பிரச்சினையைச் சற்று ஆழமாகப் புரிந்து கொள்ள உதவும்.

— டி. சிவராம்

*நன்றி: சரிநிகர்*

# டெல்லியில் டெங்கு காய்ச்சலால் 120-ற்கு மேற்பட்டோர் பலி

(டெல்லி) வேகமாகப் பரவிவரும் டெங்கு காய்ச்சலால் இதுவரை 120 பேர் பலியாகி விட்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது. எனினும் சுதந்திரமான தகவல்களின்படி இவ் இறப்பு எண்ணிக்கை மிக அதிகம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மக்கள் மிகவும் நெருக்கடியாக உள்ள டெல்லியில் இக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகிறது என்றும், இக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட கிராமப் புறமக்கள் வைத்தியசாலைகளுக்கு செல்லரமல் கிராமங்களிலும் பல மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிகின்றன.

நுளம்பு மூலம் பரவும் இந நோய், மழைக்காலம் ஆரம்பமாகி உள்ளதால் இன்னும் அதிகரிக்கும் என்ற அச்சம் பரவலாக நிலவி வருகின்றது.

# ஜெயலலிதாவை விசாரிக்க தனி நீதிமன்றம் வேண்டும்

## ஆர். எம். வீரப்பன்

"ஜெயலலிதாவின் ஊழல்கள் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. கருணாநிதிக்கு ஒரு வேண்டுகோள். தனி



நீதிமன்றம் அமைக்க வேண்டும். அதுவும் மக்கள் முன் அமையும், மக்கள் நீதி மன்றமாக அது அமையவேண்டும்.

விசாரணைக்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் வேண்டுமானால் செய்து கொள்ளுங்கள். ஆனால் அடித்த கொள்ளைகள், செய்த ஊழல்கள் குறித்து விசாரணை மக்கள் முன்பாகவே நடக்க வேண்டும். அதை மக்கள் பார்க்க வேண்டும். இனி இப்படிப்பட்ட தீயவர்களை, கைகேயியை மக்கள் தேர்ந்தெடுத்து விடக்கூடாது."

இவ்வாறு சென்னை மேயர் தேர்தலில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் மு.க.ஸ்டாலினை ஆதரித்து இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் முன்னாள் தமிழக அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் தெரிவித்தார்.

அவருக்கு எதுவுமே தெரியாது, தெரியாது என்று கூறுகிறார். இப்படி எதுவும் தெரியாத முட்டாள்தனமான பெண்மணி நமக்கு முதல்வராக இருந்து அவரிடம் நாங்கள் பணி செய்ததை நினைத்து வருத்தமாக இருக்கிறது. நாங்கள் செய்த பாவத்திற்கு பிராயசித்தம் செய்வது அவரை அரசியலிலிருந்து அப்புறப் படுத்துவதுதான். இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

# நரசிம்மராவ் கைதாகி பிணையில் விடுதலை

முன்னாள் இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்மராவின் முன் பிணைமனு நிராகரிக்கப் பட்ட நிலையில் அவர் கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப் பட்டு வந்தது. செயின்ட் கிட்ஸ் மோசடி வழக்கில் கடந்த புதன் கிழமை 09.10.96 அன்று நள்ளிரவு அவரது வீட்டிற்குச் சென்ற சி.பி.ஐ அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர். ஆனால் அவர் உடனடியாகவே பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

நரசிம்மராவின் முன்பிணை மனுவை நிராகரித்து தீர்ப்புக்



கூறிய நீதிபதி, தான் அவரது முன் பிணையின் மனுவை தள்ளுபடி செய்வதாகவும் வேண்டுமானால் அவர் மெட்ரோபாலிடன் நீதிபதி பிரேம்குமாரிடமே பிணை மனு தாக்கல் செய்யலாம், அதே சமயம் கடந்த 14ம் திகதிக்கு முன்னர் கைது செய்யப் பட்டால் 25 ஆயிரம் ரூபா சொந்தப் பிணையிலும் அதே தொகைக்கு காப்புறுதியின் பேரிலும் சிறைக்கு செல்லாமலும் தவிர்க்கலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

கடந்த புதன்கிழமை இரவு நரசிம்மராவின் வீட்டிற்குச் சென்ற சி.பி.ஐ சுப்பிரண்டன் உமேஷ் சிறிது நேரத்தில் திரும்பி வந்தார். நிருபர்கள் அவரைச் சந்தித்தபோது தான் உயர் அதிகாரிகளைப் பார்க்கப் போகிறேன் எனக் கூறிவிட்டார்.

நரசிம்மரால் வீட்டிலிருந்து வந்த அவரது சட்டத்தரணி கூறும்போது சி.பி.ஐ அதிகாரிகள் வந்து நரசிம்மராவை கைது செய்தனர். ஆனால் நான் 25 ஆயிரம் ரூபாவிற்கான ஜாமீன் பத்திரத்தை காட்டியதால் உடனடியாக அவரை விடுதலை செய்துவிட்டனர் என்று தெரிவித்த அவர், அதே தொகைக்கு பிரணாப் முகர்ஜியின் மனைவி காப்புறுதி அளித்ததையும் தெரிவித்தார்.

இந்திய அரசியல் வரலாற்றில் பிரதமராக இருந்த ஒருவர் ஊழல் வழக்கில் கைதான முதல் சம்பவம் இதுவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுக்ராம் முன்பிணை மனு

முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் சுக்ராமின் ஜாமீன் மனு மீதான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. சுக்கிராமின் வீடுகளிலிருந்து பணம் கைப்பற்றப் பட்ட வழக்கில், ஜாமீன் மனு மீதான விசாரணை டெல்லி உயர் நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நீதிமன்றம் விதிக்கும் எந்த தீர்ப்புக்கும் கட்டுப்படத் தயாராக உள்ளதால் சுக்கிராமுக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என்று [illegible] ரனி [illegible] மாத்தூர்



கேட்டுக் கொண்டார்.

சுக்கிராமின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட டைரிகளில் உள்ள சில ரகசியக் குறிப்புக்களை சி.பி.ஐ கண்டுபிடித்து வருகிறது. இந்த நிலையில் சுக்ராமை ஜாமீனில் விடுவித்தால் அவர் சாட்சியங்களைக் கலைக்கக்கூடும் என்று கூறி சி.பி.ஐ சட்டத்தரணி கேட்டுக் கொண்டார். இவ் மனுமீதான தீர்ப்பு கடந்த வாரம் வரை வழங்கப்படவில்லை.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

# கிளிநொச்சி யுத்தமும்.......

மேலும் காயமடைந்தோரின் தொகை மிக அதிகமாக இருப்பதை சிறீலங்கா அரசின் இரத்ததான வேண்டுகோளே உணர்த்துகின்ற அதே வேளை, இவ்வளவு தொகையில் படையினர் காயமடைந்ததற்கு காரணம் என்ன என்பதைப் பார்த்தால் விடுதலைப் புலிகளின் மோட்டார் தாக்குதல்களே ஆகும்.

கிளிநொச்சி யுத்தம் முல்லைத் தீவு யுத்தம் உட்பட மற்றும் பல சமீபகால மோதல்களில் புலிகள் அதிகமான அளவில் மோட்டார் தாக்குதல்களை மேற்கொள்வது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதில் பெரும்பாலும் புலிகளின் விஞ்ஞான ஆய்வுப் பகுதியால் உள்ளூரில் செய்யப்பட்ட, உலக ஆயுதத் தொழிற்சாலையினால் செய்யப்படுபவற்றுடன் ஒப்பிடும் வகையிலான மோட்டார் மற்றும் எறிகணைகளே பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் நன்கு பயிற்சி பெற்ற புலிகளின் மோட்டார் படையணியின் குறிதவறாத தாக்குதல்களையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதற்கு உதாரணமாக முல்லைத்தீவு யுத்தத்தின் போது விசேட இராணுவத்தினரை ஏற்றிய படி தரையிறங்க வந்த கப்பலின் மேல் புலிகள் நடாத்திய மோட்டார் தாக்குதலைக் குறிப்பிடலாம். இத் தாக்குதலில் கப்பலின் உள்ளே எறிகணை விழுந்து வெடித்து பல இராணுவத்தினர் இறந்து பலர் காயமடைந்ததும் மேலும் கிளிநொச்சி சமரைத் தொடர்ந்து காயமடைந்த படையினருக்கு இரத்தம் வழங்க முன் வருமாறு சிறீலங்கா அரசு பொது மக்களைக் கேட்டதும் புலிகளின் மோட்டார் அணியின் குறி தவறாமல் இலக்குகளைத் தாக்கும் தன்மையையே எடுத்துக் காட்டுகின்றது.

பரந்த அளவிலான மோட்டார் தாக்குதல்கள் அரச படையினரை நிலை குலையச் செய்யும் அதே வேளை பெருமளவு உயிர்ச்சேதத்தை புலிகள் பக்கம் வராமல் தடுக்கின்றன.

மொத்தத்தில் பெருமளவிலான மோட்டார் தாக்குதல்கள் மற்றும் கிளிநொச்சியில் பின்வாங்கியமை என்பன புலிகள் தம்வீரர் உயிர்களுக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கின்றார்கள் என்பதையே காண்பிக்கின்றது. ஆனால் புலிகள் 'ஓயாத அலைகள்' என்று பெயர் சூட்டி வெற்றியீட்டிய முல்லைத்தீவு இராணுவத் தளம் மீதான தாக்குதல் சிறீலங்கா அரசும் சில வெளிநாட்டு ராஜதந்திரிகளும் தவறாக மொழி பெயர்த்து மனித அலை யுக்தி என வர்ணிப்பது புலிகளின் யுத்த திறனை அவமதிக்கும் செயலாகும்.

மனித அலை யுக்தி என்பது 1400–1500 களில் பீரங்கிகள் வைத்திருந்த நாடுகளின் சிறிய படைகளோடு, பீரங்கியற்ற பெரிய படைகளைக் கொண்ட நாடுகள் யுத்தம் புரிந்தபோது பீரங்கிகளை மௌனமாக்க அலைஅலையாக மனிதர்களை பெரியபடைகள் உபயோகித்தமையாகும். 1950– 53 இல் கொரிய யுத்தத்தின் போது அமெரிக்க – தென்கொரிய நாடுகளுக்கு எதிராக ஆட்பலத்தைக் கணிசமாகக் கொண்ட சீனா – வடகொரிய நாடுகளின் தாக்குதல்கள் சிலவற்றையும் சில இராணுவ ஆய்வாளர் மனித அலை யுக்திக்கு உதாரணமாகக் கூறுவர்.

இப்படியாக சில உதாரணங்களை பார்க்கும் போது எப்போதும் ஆட்பலம் கூடிய படையே மனித அலை தந்திரத்தை [?] கடைப்பிடித்ததை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந் நிலையில் சிறீலங்கா இராணுவத்தினருடன் ஒப்பிடுகையில் பத்தில் ஒரு பங்கையே உடைய புலிகள் இத் தந்திரத்தை உபயோகித்தார்கள் என்பது நகைப்புக்கிடமானதாகும் இதில் வருந்தக் கூடிய விடயமென்னவெனில் சில வெளிநாட்டு பத்திரிகைகளும் இச் செய்தியையே உண்மைச் செய்தியாக பிரசுரிப்பதாகும். இதற்கு உதாரணமாக பிரித்தானிய அகதிகள் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் சிறீலங்கா பார்வை 30.09.96 இல் புலிகள் மனித அலையுக்தியை கிளிநொச்சியிலும் பயன்படுத்தியதாக எழுதியதைக் குறிப்பிடலாம்.

எலக்றிசிற்றி, பைப் லைனிங், மாபிள் பதித்தல், பேப்பர் ஒட்டுதல், பெயின்ரிங், P.V.C யன்னல்கள் மற்றும் கட்டட வேலைகள், தச்சு வேலைகள் அனைத்திற்கும்,

பகீ என்ரபிறைஸ்

உங்கள் வீடுகளுக்கான இன்சூரன்ஸ், கடன் ஏற்பாடுகளுக்கு தேவையான Devis வழங்கப்படும்

Devis 200Frs - Deplacement 150Frs

புதிய தொலைபேசி இலக்கம்: 48 48 39 64 / 09.27.32.00

# முல்லைப் பெருஞ்சமர்

## கொழும்புப் பத்திரிகைகள் வெளியிடும் உண்மைகள்

யுத்த செய்திகள் மற்றும் இராணுவம் சம்பந்தமான செய்திகளுக்கு இருந்து வந்த தணிக்கையை கடந்தவாரம் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு நீக்கியதைத் தொடர்ந்து இதுவரை வெளிவராத பல செய்திகளை கொழும்புப் பத்திரிகைகள் வெளியிடத் தொடங்கியுள்ளன.

கடந்த யூலை 18ம் திகதி முல்லைத்தீவு படைத்தளம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட செய்திகளை கொழும்புப் பத்திரிகை ஒன்று முற்றாக வெளியிட்டுள்ளது.

யூலை 18ம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப் புலிகள் 48 மணிநேரத்தில் சிங்க ரெஜிமெண்டைச் சேர்ந்த 9 பிரிவுகளையும், விஜயபாகு ரெஜிமெண்டைச் சேர்ந்த 6 பிரிவுகளையும் கொண்ட இராணுவப் பிரிவுகளை முற்றாக அழித்தனர். இதில் 1360 இராணுவத்தினர், கடற்படையினர், பொலிசார் மற்றும் இராணுவத்திற்கு வேலை செய்யும் பொது மக்களும் அடங்குகின்றனர். இதேவேளை உதவிக்கு வந்த படையினரில் 23 பேரும், விசேட படையினரில் 37 பேரும் 34 மாலுமிகளும் கொல்லப்பட்டனர்.

மொத்தமாக 1454 பேர் இறந்துள்ளனர். இது யுத்தத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பாகவும், அரசுக்கு ஏற்பட்ட பாரிய தோல்வியாகவும் கருதப்படுகிறது. இம் முகாமிலிருந்த படையினரில் ஆக 4 படையினரே 40 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வெலி ஓயா முகாமை அடைந்து தப்பியவர்களாவர். இத் தாக்குதலில் 460 புலிகள் இறந்ததாக பாதுகாப்பு அமைச்சுக் கூறினாலும் தமது தரப்பில் 241 போராளிகளே இறந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர்.

ஒரு வழியாக படைத்தளத்தை அடைய இரண்டு பிரிகேட் படையணிகளும், இறந்து கிடந்த பழுதடைந்த நிலையிலிருந்த இராணுவத்தினராலேயே வரவேற்கப் பட்டனர். ஒன்றுமே இல்லாத நிலையில், கட்டடங்கள் தரைமட்டமாக்கப் பட்ட நிலையில், விடுதலைப் புலிகளின் குண்டு மழைக்கு மத்தியில் கடற்கரைக்கு பின்வாங்கி கடற்படைக் கப்பல்கள் மூலம் முல்லைத்தீவை விட்டு பின்வாங்கினார்கள்.

இத் தாக்குதல் கட்டுரையை திகதி வாரியாக தெரிவித்திருக்கும் பத்திரிகை இக் கட்டுரை யூலை மாதமே எழுதப்பட்ட போதிலும் அதனைப் பிரசுரிக்க முடியாத நிலையில் தற்போது அதைப் பிரசுரிப்பதாகக் கூறியுள்ளது.

**யூலை 18**

விடுதலைப் புலிகளின் 3000ற்கும் அதிகமான போராளிகள் அதிகாலை 1.30 மணிக்கு பாதுகாப்பு வலையங்களை ஊடறுத்து உட்புகுந்து தாக்குதலை ஆரம்பித்தனர்.

படையினர் இரண்டாகப் பிரிந்து விடுதலைப் புலிகளின் தோட்டா மழைக்கு மத்தியில் முகாமைப் பாதுகாக்க முனைந்தனர். சில மணி நேரத்துக்குள் கடற்படையின் அதிவேகப் படகுகளும், பீரங்கிப்படகுகளும் இப் பகுதியை அடைந்தபோது நூற்றுக்கணக்கான கடற் புலிகளின் படகுகளால் துரத்தியடிக்கப் பட்டன. அத்துடன் கரையில் இருந்து ஏவப்பட்ட இயந்திரத்துப்பாக்கி வேட்டுக்களும், மோட்டார்த் தாக்குதல்களும் படையினர் மேல் சேதத்தை ஏற்படுத்தின. இதன் போது ஒரு டோறா தாக்குதல் கலமும் சேதமாகி ஒரு மாலுமி கொல்லப் பட்டார். வாழைச்சேனைக் காட்டுப்பகுதியில் நிலைகொண்டிருந்த விசேட படைப்பிரிவைச் சேர்ந்த 220 படையினர் அங்கிருந்து உலங்கு வானூர்திகள் மூலம் முல்லைத்தீவுக்கு தெற்கே அளம்பிலில் இறக்கப் பட்டனர். அதிசயிக்கத்தக்க வகையில் புலிகளின் படையணிகள் இறக்கப்பட்ட படையினரின் நகர்வைத் தடைசெய்யும் நோக்கில் துரிதமாக நகர்ந்தன. இதே வேளை இப் பகுதியில் இரண்டாவது தடவையாக உலங்கு வானூர்திகள் இறங்கியபோது, பலத்த எதிர்த் தாக்குதல்களை சந்தித்தன. விமான எதிர்ப்புத் தாக்குதல்களின் காரணமாக படையினரை இறக்கமுடியாத நிலையில் அவை பின்வாங்கியன். இதன்போது இரண்டு MI-17 ரக உலங்கு வானூர்திகள் சேதமாக்கப்பட்டன.

* 48 மணிநேரத்திற்குள் தளம் கைப்பற்றப்பட்டு அங்கிருந்த 1360 படையினர் கொல்லப்பட்டனர்
* ஒரு வழியாக தளத்தையடைந்த படையினரை பழுதடைந்த இராணுவ உடல்களே வரவேற்றன
* படையினரைக் கரையிலேயே விட்டுவிட்டு கலம் புறப்பட்டதால் கரையில் நின்ற அத்தனை படையினரும் கொல்லப்பட்டனர்.

**யூலை 19**

இறக்கப்பட்ட விசேட படையினர் முன்னேற முயல்கையில் விடுதலைப் புலிகளால் ஒரு பலமான எதிர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அப் பிரிவின் தளபதி லெப். கேணல் பஸ்லி லாபீர் உட்பட 36 படையினர் இறந்தனர். இதேவேளை மிகுந்த முயற்சியின் பின் உலங்குவானூர்திகள் அப் பகுதியில் இறங்கி காயப்பட்ட 58 படையினரை கொண்டு சென்றன. இதன் போதும் ஒரு MI-17 சேதப்படுத்தப் பட்டது. இச் சமயம் கொழும்பிலிருந்து முல்லைத்தீவு தளத்தின் பொறுப்பாளராக இருந்த பிரிகேடியர் கிளன்சி பெர்னாண்டோ விசேட படையினருடன் கொண்டு செல்லப்பட்டு இறக்கப்பட்ட போது படுகாயமடைந்து பின் அங்கிருந்து அகற்றப்பட்டார்.

### தற்கொலைத் தாக்குதல்

கரும்புலிகளின் படகொன்று கட்டளைக் கப்பல், ரணவிருவினைத் தாக்கியதில் அதிலிருந்த 34 மாலுமிகளும் கொல்லப் பட்டு கப்பலும் மூழ்கடிக்கப் பட்டது. இதேவேளை கடற்படைக்கும் நூற்றுக் கணக்கான கடற்புலிப் படகுகளுக்கும் இடையே மோதல்கள் நடந்தன. முல்லைத் தளத்தின் பதில் பொறுப்பாளராக இருந்த மேஜர் அலிபா கொல்லப்பட்டார்.

**யூலை 20**

அதிகாலை படைத்தளத்தை முற்றாக கைப்பற்றும் நோக்கில் விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதலை ஆரம்பித்தனர். அதுவரை இருந்துவந்த சிறிய அளவிலான தொலைத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இதே வேளை 250 விசேட படையினர் முதற்குழுவுடன் இணைந்து கொண்டனர். ஆனால் அதன் பொறுப்பாளர் லெப்.கேணல் ராஜ்விஜேசிறி படுகாயமடைந்தார். புல்மோட்டையில் இறக்கப்பட்ட MI-17 உலங்கு வானூர்தி ஒன்று சேதமாகியது. இன்னமும் படையினர் முல்லைத்தீவில் உள்ளனர் என்ற நினைப்பில் விமானங்கள் மூலம் அங்கு உணவு, தோட்டாக்கள், மருந்து போன்றவை போடப்பட்டன.

**யூலை 21**

உதவிப் படைகளில் இரண்டு பிரிவுகளாலும் முல்லைத்தீவை அடைய முடியவில்லை. அவை ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளைக் கொண்ட அணிகளால் சுற்றிவளைக்கப் பட்டிருந்தன. இம் முற்றுகையை உடைப்பதற்காக மற்றைய முகாங்களிலிருந்து எதிகணைத் தாக்குதல்களை நடத்த வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் படைகளை தாக்குதல்களை நிறுத்தி கடற்கரையை நோக்கி நகர்த்தி கரையோரப் பகுதிகளைப் பாதுகாக்க உத்தரவிடப்பட்டது. இதற்கு எறிகணைத் தாக்குதல்கள் உதவின. ஒரு கடற்படைத் தரையிறங்கு கலம் 400 இராணுவத்துடன் கரையிறங்கியது. அதனுடன் வந்த மற்றைய இரண்டு கலங்கள் மோட்டார்த் தாக்குதல்களை சமாளிக்க முடியாத நிலையில் பின்வாங்கிவிட்டன.

**யூலை 23**

மேலும் 800 படையினர் தரையிறங்கு கலங்கள் மூலம் இறக்கப்பட்டனர். ஒரு கலம் தாக்கப்பட்டதில் 22 படையினர் கொல்லப்பட்டு 28 பேர் காயமடைந்தனர்.

**யூலை 24**

மேலும் சில உதவிப் படையினர் கரையில் இறங்கப்பட்டனர். இப்போது இறங்கிய படையினரின் எண்ணிக்கை 2,500 ஆக அதிகரித்தது. இப் படையினர் சிறிய எதிர்ப்பின் மத்தியில் தளத்தை நோக்கி நகர ஆரம்பித்தனர், த்ளத்தை அடைந்த போது அங்கு எதனையுமே காணவில்லை. ஆனால் வெளிப் பகுதியிலிருந்து புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

**யூலை 26**

படையினர் முல்லைத்தீவில் இருந்து பின்வாங்கத் தொடங்கினார்கள். இதன்போது ஒரு தரையிறங்கு கலம் விடுதலைப் புலிகளின் மோட்டார் தாக்குதலுக்கு உள்ளாகியதில் ஒரு படையினர் கொல்லப்பட்டு 74 பேர் காயமடைந்தனர்.

தரையிறங்கு கலத்தின் கப்டன் பீதியடைந்ததன் காரணமாக ஒரு பகுதி படையினரைக் கரையிலேயே விட்டு விட்டு கலம் புறப்பட்டதால் கரையில் நின்ற அத்தனை படையினரும் கொல்லப் பட்டனர்.

(தமிழில் மாந்தன்)

தமிழீழ ஆவணக்காப்பகம் tamileelamarchive




# அமைச்சர் ரத்வத்தையின் தொலை நோக்கில் ஏற்பட்ட தவறு என்ன?

ஐப்பசிமாத "ஹொட் ஸ்பிரிங்" (Hot spring) சஞ்சிகையில் முன்னாள் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் வசந்தராஜா எழுதிய கட்டுரை ஒன்றின் தமிழ் சுருக்கம்.

முல்லைத்தீவில் 1200 இராணுவத்தினருக்கு மேல் கொன்று ஒரு மரபுப் போரில் மாபெரும் தோல்வியை அரச படைகளுக்கு விடுதலைப் புலிகள் கொடுத்தனர். மிகச் சுலபமாக புலிகள் பெற்ற இவ் வெற்றி 13 வருட போர்ச் சரித்திரத்திலேயே ஒரு திருப்பு முனையாகும். புலிகளின் இத் தாக்குதலை சில மேற்கத்தியப் பத்திரிகையாளர்கள், வியட்நாமில் வியட்கொங் கெரில்லாக்கள் நடத்திய "டெற்" (Tet offensive) தாக்குதலுக்கு நிகராகப் பார்க்கின்றனர். ஒரு பத்திரிகையாளர்கள் சுதந்திரகாலத்துக்குப் பின் தென்னாசியாவிலேயே எந்தவொரு நாட்டின் மரபுவழி இராணுவமும் பெறாத படுதோல்வியை முல்லைத்தீவில் இலங்கை இராணுவம் பெற்றுளதாகக் குறிப்பிட்டார்.



புலிகளின் இத் தாக்குதலை சில மேற்கத்தியப் பத்திரிகையாளர்கள், வியட்நாமில் வியட்கொங் கெரில்லாக்கள் நடத்திய ''டெற்'' (Tet offensive) தாக்குதலுக்கு நிகராகப் பார்க்கின்றனர்.

இதில் ஆச்சரியப்பட வேண்டிய விடயம், யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகள் பின்வாங்கிய பின் இப்படி ஒரு பிரமாண்டத் தாக்குதலைத் தொடுப்பார்கள் எனச் சிறிதளவு கூட நினைத்திருக்க மாட்டார்கள். முல்லைத்தீவு புலிகளினால் கைப்பற்றப் பட்டதானது ஒரு பெரும் அதிர்ச்சியான செய்தியாகவே வந்தது. சிறீலங்கா அரசு அதன் இராணுவத் தலைவர்கள் மேற்கத்தைய நாடுகளின் ஆலோசகர்கள், பத்திரிகையாளர்கள் எல்லோருமே யாழ்ப்பாணப் பின்வாங்கலுடன் புலிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்டதாக எண்ணிக் கொண்டு இருக்கையில் புலிகளின் முல்லைத்தீவுத் தாக்குதலால் அதிர்ந்து போயுள்ளனர்.

பூநகரித் தாக்குதல் போன்றவற்றை இனிப் புலிகளால் நடத்த முடியாது என சமீபத்தில்தான் இராணுவத் தளபதி ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார். அதே வேளை ஜெனரல் அநுருத்த ரத்வத்த, புலிகள் அழிந்துவிட்ட சக்தி, வன்னிப் பகுதியையும் கிழக்கையும் அவர்களிடமிருந்து பிரிப்பது சிறிது நேரத்தில் நடக்கக்கூடியவை என்று குறிப்பிட்டார். அவர் தீர்க்க தரிசனம் எங்கே தவறியது?

போர் முடிந்து விடும் அரசியல் தீர்வொன்றைத் தருவோம் என்று அரசு உலகத்தை நம்ப வைக்க முயற்சித்து, அதேவேளை தமிழ் மக்களையும் பிரபாகரனிடம் இருந்து பிரித்து விட முயற்சித்தது. அரசாங்கத்தினதும், படைகளினதும், பிரதான நோக்கம் யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளை அழித்து விட்டு, அந்த வெற்றியைத் தெற்கிலே பிரகடனப் படுத்திவிட்டு அதன் பின், ஆரம்பத்திலேயே சிதைந்து இன்று ஒன்றுமில்லாததாகிவிட்ட தீர்வுத் திட்டத்தை அமுலாக்கலாம். அப்போது கொழும்பில் உள்ள தமிழ் குழுக்கள் கூட வாயடைத்துப் போவர். தாம் விரும்பும் விதத்தில் சிங்கள பேரினவாத அபிலாசைகளுக்கு குந்தகம் வராத வகையில் ஏதோ ஒரு திட்டத்தை அமுல் படுத்தி உலகை ஏமாற்றலாம் என்பதே.

முன்னைய இராணுவத் தலைமை போலல்லாது ஜெனரல் ரத்வத்தை மிகப் பெறுமதியான இராணுவ உபகரணங்கள் மூலம் விடுதலைப் புலிகளை அழித்துவிடத் திட்டமிட்டார். இப்படிச் செய்வதால், தமிழ் மக்களின் விசுவாசத்தைப் பெறுவதுடன், கொழும்பிலுள்ள அரச வால்பிடி துரோகத் தமிழ்க் குழுக்கள் மூலம் சிங்கள ஏகாதிபத்தியத்துக்குக் கட்டுப்பட்ட ஒரு நிர்வாகத்தை நடத்தலாம் எனவும் அவர் கனவுகண்டார். அதற்கான இராணுவ நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்ட போது, யாழ் மக்கள் தம் பிரதேசங்களை விட்டு விட்டு விடுதலைப் புலிகளுடன் வன்னிப் பிரதேசங்களில் போய் சேர்ந்து கொண்டது ரத்வத்தையின் கனவைச் சிதறடித்து விட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகள் பின்வாங்கியது, தோல்வி அல்ல. பின்வாங்கல்தான் சரியான வார்த்தை. அது ஒரு தந்திரோபாய நடவடிக்கை. அனுபவ ரீதியாக தாம் பெற்ற பாடத்தைக் கருத்தில் கொண்ட புலிகள், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகள் வீழ்ந்ததும் தம் மக்களை தமது பழைய இடங்களுக்கு திரும்பும்படி அறிவுறுத்தியதுடன், பெருமளவு வீரர்களை வன்னிப் பகுதிக்கு அழைத்துக் கொண்டு, அடிக்கடி இராணுவ நிலைகள் மீது கெரில்லாத் தாக்குதல்கள் நடத்தக்கூடிய அளவுக்கு தமது வீரர்களையும் அங்கே விட்டு விட்டு சென்றனர்.

விடுதலைப் புலிகளின் பின்வாங்கல் தந்திரோபாயத்தைப் புரிந்து கொள்ளாது, அவர்களது பின்வாங்கலால் உற்சாகப்பட்ட படையினர் புலிகள் வசமுள்ள ஏனைய பகுதிகளைக் கைப்பற்றி தமது நிர்வாகப் பகுதியை விஸ்தரிக்க முயன்றனர். வடக்கிலே தாம் பெரிதும் வெற்றி பெற்றுவிட்டோம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் வெற்றி மயக்கத்திலிருந்த அரசு, தவறான, அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையுடன் செயல்பட்டது.

யுத்தத்திற்குப் பொறுப்பான பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை, 60 வீத விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டனர் என்றும், கிழக்கு மாகாணத்தில் புலிகளை அழித்தொழிக்க ஐந்து நாட்களே எடுக்கும் என்று ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உறுதியளித்தார். அதன் பின் வன்னிப் பிரதேசத்தில் உள்ள புலிகளை ஆறு மாதங்களில் அழித்துவிடலாம் என்றும் அவர் கூறினார். அதற்கு முன்னோடியாக வெளிநாடுகளிலிருந்த புலிகளுக்கு கிடைக்கும் பண வருவாயை நிறுத்த வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றிவந்த கப்பல்கள் இந்தியக் கடற்படையின் உதவியால் கடலில் மூழ்கடிக்கப் பட்டது. மாறிய புதிய இந்திய மத்திய அரசு இவ் விடயங்களில் என்ன போக்கை கடைப்பிடிக்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டு புலிகளை பெருமளவில் அழித்துவிட்டோம் என்ற சிறீலங்கா அரசின் பிரச்சாரம், தமிழ்ப் பெயரைக் கொண்ட வெளியுறவுத்துறை அமைச்சர் கதிர்காமருக்கு மேற்குலக அரசுகளுடன் பேசி அங்குள்ள விடுதலைப் புலி அலுவலகங்களை தடை செய்யும் வேண்டுகோளை வலியுறுத்த நல்லதொரு வாய்ப்பாகி விட்டது. அதன்விளைவே விடுதலைப் போராட்டத்திற்கு பெருமளவு நிதி உதவி செய்யும் சுவிஸ், கனடா நாட்டுப் புலிப் பிரதிநிதிகள் கைதான அம்சமாகும்.

கதிர்காமரின் இந்தப் பிரசாரத்தின் பலனை அடைவதற்காகவே, யுத்தப் பிரதேசத்தில் பத்திரிகையாளர்கள் போய் செய்தி சேகரிக்காமல் தடை செய்தது டன், பத்திரிகை செய்தித் தணிக்கையும் அமுல்படுத்தப்படுகிறது. விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாதக் கூட்டம் என்ற அரச பிரச்சாரத்துக்கு இது வசதியாக உள்ளது. தமிழர் போராட்டத்தை நசுக்கி, அதை சர்வதேச சமுதாயத்தை நம்ப வைக்கும் முயற்சிகள் பலமடைந்து வருகின்றன. ஆனால் சந்தர்ப்பவாத அரசியல் நோக்கம் கொண்ட தென்னிலங்கை அரசியல் வாதிகளின் பிரிவினைகளால், அரசாங்கத்தின் முயற்சிகள் அதிகளவு வெற்றி பெறவில்லை.



விடுதலைப் புலிகளை அழித்தொழித்துவிட்டு, தான் நினைத்த விதத்தில் ஒரு தீர்வுத் திட்டத்தை தரலாம் என்ற சந்திரிகாவின் கனவு இறந்துவிட்டது. புலிகள் அழிக்கப்பட்ட நிலையில் கொழும்பு தமிழ் துரோகக் குழுக்களை அரவணைக்கத் தேவையில்லை. அலட்சியப் படுத்தலாம் என்ற சந்திரிகாவின் திட்டமும் முல்லைத்தீவுப் போரால் சரிந்துவிட்டது.

கேள்வி என்ன வென்றால், இவர்கள் கனவுகள், திட்டங்களை எல்லாம் பொடிப் பொடியாக்கும் வகையில், யாழ்ப்பாணத்தில் தோற்கடிக்கப்பட்டதாக பிரச்சாரப் படுத்தப்பட்ட விடுதலைப் புலிகள் மிகக் குறுகிய காலத்தில் எப்படி முல்லைத்தீவில் சிறீலங்கா இராணுவத்தை அழித்து, வெற்றி கொண்டு மாபெரும் வியக்கத்தக்க சாதனையை நிலைநாட்டினார்கள் என்பதே இதற்கு மிகச் சுலபமான விடை உண்டு. அது அரச படைகளிடம் இல்லாத, தேசியப் போராட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆத்மார்த்த ஈடுபாடே.

தேசிய விடுதலைப் போரில் புலிகள் தம்மை ஆழமாக இணைந்துள்ளனர். இதைச் சரியாகப் புரிவதானால், சிறீலங்கா இராணுவத்திலிருந்து பெருந் தொகையானோர் ஓடி ஒளிந்து விடுவதும், விடுதலைப் புலிகள் படையில் புதிது புதிதாகப் பலர் சேர்வதும் தெளிவுபடுத்தும். இதை இராணுவ ஆய்வாளர்கள் புரிந்துகொள்வதில்லை.

தமிழில்
**சர்க்கரவர்த்தி**


## தமிழில் சாரதிப் பயிற்சி

பிரெஞ்சு தெரிய வேண்டியதில்லை! தமிழிலேயே படித்து தமிழிலேயே கோட் பாஸ் செய்து **பிரெஞ்சு சாரதிப் பத்திரம்** (permis de conduire) பெறலாம்! இலங்கைப் புத்தகம் இருந்தால் இன்னும் எளிது! உங்கள் பெயரை உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்

நீங்கள் வேறு சாரதிப் பாடசாலைகளில் சேர்ந்து பணம் கட்டியிருந்தாலும் பிரச்சனையில்லை. நீங்கள் கட்டிய பணம் நஷ்டமாகாத வகையில் நாங்கள் உங்களுக்கு சாரதிப் பத்திரம் கிடைக்க வழிசெய்கிறோம்.

தொடர்புகளுக்கு: பேராசிரியர் சக்திப்புயல்



இடம் : 6, rue Demarquay, Paris10 (நிஷா மளிகை அருகில்)
Métro: Gare du Nord. - Tel: 42 05 48 11 / 02 46 59 23
கிளை ஸ்தாபனம் : 36, Rue Ludovic Piette - Tel: 34 24 12 82 / 02 46 59 23

# பூதத் தம்பியை கபடமாய் கொன்ற சிங்கள முதலியார்

39

யாழ் கோட்டையிலிருந்து வெளியே வந்த அனைவரும் ஆண் - பெண் வேறுபாடின்றி ஒல்லாந்துப் படைகளால் நிர்வாணமாகக் பட்டு சோதனை செய்யப்பட்டனர். அனைவரும் வெளியே வந்ததும் முதல் நாள் ஒல்லாந்துப் படையைச் சேர்ந்த அதிகாரிகள் தாங்கள் விரும்பிய பொருட்களை கோட்டைக்குளிருந்து எடுத்துக் கொள்ளவும் மறுநாள் - சாதாரண படை வீரர்கள் தாங்கள் விரும்பிய பொருட்களை எடுத்துக கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர்.

கோட்டைக்குள் அதிகளவுக்கு அழுக்குகள் குவிந்து துர்நாற்றம் வீசியதாலும், முற்றுகையின் போது கொல்லப்பட்டவர்களை அடக்கம் செய்யாமல் அப்படியப்படியே மதிலோரங்களில் தூக்கிப போட்டதால் அந்தப் பிணங்கள் எல்லாம் அழுகி சகிக்கமுடியாத அளவுக்கு நாற்றம் எடுத்ததாலும், அவற்றையெல்லாம் அப்புறப்படுத்தி கோட்டையைச் சுத்தப்படுத்திய பின்பே அதற்குள் ஒல்லாந்தரால் குடிபுக முடிந்தது.

சிறைப்பிடிக்கப்பட்ட போர்த்துக்கேயர்களில், கன்னிப் பெண்களையும், இளம் விதவைகளையும் ஒல்லாந்தர்கள் தமக்கென எடுத்துக் கொண்டனர். எஞ்சியோரில் போர்த்துக்கல்லுக்குப் போக விரும்பியவர்களை ஆடு, மாடுகளை பட்டியில் அடைப்பது போல் கப்பல்களில் நிறைத்து அனுப்பிவைத்தனர். அவ்வாறு தமது தாய்நாட்டிற்குப் போக விரும்பாது யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்து ஒல்லாந்தரின் மேலாண்மையை ஏற்று நடக்க சம்மதித்தவர்களுக்கு கீழ் நிலை உத்தியோகங்கள் வழங்கப்பட்டன.

போர்த்துக்கேயருடன் ஒப்பிடும் போது, யாழ்ப்பாண வாசிகளுக்கு ஒல்லாந்தர்கள் மேலானவர்களாகவும், விசித்திரமானவர்களாகவும் இருந்தார்கள். போர்த்துக்கேயர்கள் தீவிரமான கிறிஸ்தவ மத வெறியும் அதற்காக ஈவிரக்கமில்லாமல் எந்த விதமான கொடூரச் செயலையும் செய்யக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் ஒல்லாந்தர்களிடம் அந்தளவுக்கு மதவெறி இருக்கவில்லை. அத்தோடு அவர்களது மதம் திருத்தி அமைக்கப்பட்ட கிருஸ்தவமதம். அதாவது புரட்டஸ்தாந்து மதமாக இருந்தது. அவர்களது முழு நோக்கமும் வர்த்தக நலனையே அடிப்படையாக கொண்டிருந்தது. தங்களது வர்த்தக நலனை பேணிக் காப்பதற்காக அவர்கள் இயன்றவரை சுதேசிய மன்னர்களை அனுசரித்துப் போகிறவர்களாகவும் மத அரசியல் நோக்கங்களுக்காக போர்த்துக்கேயர்களைப் போல் சுதேச மக்களுக்கு பெரியளவுக்கு கொடுமையிழைக்காதவர்களாகவும் இருந்தார்கள். குறிப்பாக கண்டி அரசன், அவர்களுக்குகெதிராக பல அவமரியாதைகளைச் செய்த போதும் அவர்களது தூதுவனை கொலை செய்த போதிலும் தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளுக்கு அவனது உதவி தேவை என்ற காரணத்தினால் அவர்கள் அதையெல்லாம் சகித்துக்கொண்டனர்.

யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் ஆட்சிக்குக் கீழ் வந்த சிறிது நாட்களில் அவர்களது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சதி முயற்சி ஒன்று நடைபெற்றது. அநேகமாக போர்த்துக்கேயர்களால் வழி நடத்தப்பட்ட கிறிஸ்தவர்களே இந்தச் சதி முயற்சியின் பின்னணியில் இருந்தார்கள்.

மனுவேல் அந்திறாது என்னும் சிங்கள முதலியாரே இது பற்றி முதல் முதலில் அறிந்து ஒல்லாந்தருக்குத் தெரியப்படுத்தினார். அதை அடுத்து இச் சதிக்கு தலைமை தாங்கிய பதினான்குபேர் கைது செய்யப்பட்டனர். அதில் கல்தேறா (Caldera) என்னும் கத்தோலிக்க மதகுரு உட்பட ஆறு பேர் போர்த்துக் கேயர்கள். ஏனையோர் யாழ்ப்பாணத்தவர்கள். அவர்களில் டொன்லூரிஸ் - பூதத்தம்பி என்னும் யாழ்ப்பாண முதலியாரின் பெயர் முக்கியமானது.



ஒல்லாந்தருக்கு எதிரான சதி முயற்சியில்
ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுகின்றது.

தங்களுக்கெதிரான சதி முயற்சியில் ஈடுபட்டவர்களில் மிக முக்கியமானவர்கள் என்று கருதப்பட்ட மூன்று பேருக்கு பார்த்தவர்கள் நடுங்கும் படியான தண்டனை வழங்கப்பட்டது. அதாவது அவர்கள் மூவரும் நடுச்சந்திகளில் நிறுத்தி வைக்கப்பட்ட சிலுவைகளில் பிணைக்கப்பட்டு, [illegible] அவர்களது காலில் [illegible] பட்டது. இரத்தம் சிந்தி அவர்கள் துடிதுடித்து இறந்ததும் அவர்களது தலைகள் வெட்டப்பட்டு பிரதான கடை வீதியில், ஒல்லாந்த அரசருக்கு எதிராக சதி செய்தவர்களுக்கு கிடைத்த தண்டனை என்கின்ற அறிவித்தலுடன் அவை ஈட்டி முனையில் குத்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. போர்த்துக்கேய மத குரு கல்தேராவும் தலை வெட்டிக் கொல்லப்பட்டார். ஏனைய பத்துப் பேரும் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட பின் அவர்களது உடல்களும் கழுகுகளும் பருந்துகளும் கொத்தித் தின்பதற்காக ஒதுக்குப்புறமாக இருந்த மரங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டன.

அக்காலத்தில் இறந்த ஒருவரது உடலை உரிய மத முறைப்படி அடக்கம் செய்யாவிட்டால் அவரது ஆத்மா சாந்தியடையாது அலைந்து அலறித் துடித்துக் கொண்டேயிருக்கும் என்ற நம்பிக்கை மக்களிடமிருந்தது. ஒல்லாந்தருக்கும் அது இருந்தது. அதனாலேயே தங்களால் தண்டனை வழங்கப்பட்ட அந்தப் 14 பேரது உடல்களையும் அவர்கள் மரத்தில் தொங்கவிட்டார்கள். கி.பி 1658-ல் நடந்த இந்தக் காட்சியை பல்தேயஸ் பாதிரியார் சித்திரத்தில் வரைந்து வைத்துள்ளார்.

ஒல்லாந்தருக்கு எதிரான சதியில் பூதத்தம்பி முதலியாருக்கு எந்தவித சம்பந்தமுமில்லையென்றும் சிங்களவரான அந்திறாது முதலியார் தனக்கும் பூதத்தம்பிக்கும் உள்ள பகையின் அடிப்படையில் தருணம் பார்த்து பூதத்தம்பியை மாட்டிவிட்டு, தந்திரமாகக் கொலை செய்து விட்டதாக மயில்வாகனப் புலவர் கூறுகிறார். பூதத்தம்பி இறந்து 78 வருடங்களின் பின், தான் எழுதிய நூலில் இதைக் கூறியுள்ளதால், அது தான் உண்மை என்பதை முதலியார் இராஜநாயகமும் ஏற்றுக் கொண்டுள்ளார். பூதத்தம்பியைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தை இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் ஒன்று தான், அதனால் அவன் ஒல்லாந்தருக்கு எதிராக சதி செய்ய வேண்டிய அவசியமே இல்லை என்பது முதலியார் இராஜநாயகத்தினுடைய வாதமாகும்.




போர்த்துக்கேயர்களைப் போலவே ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தை நான்கு பிரிவுகளாகவும், 32 கோவில் பற்றுக்களாகவும் பிரித்து நிர்வாகம் நடாத்தினர். நான்கு பிரிவுகளும் யாழ்ப்பாணத்திற்கு சமீபமாக இருந்த தீவுப் பற்றுக்களுக்கும் ஒவ்வொரு முதலியாரும் இறைசுவரும் (வரி வசூலிப்பவர்) எழுது வினைஞரும் நியமிக்கப் பட்டவர். யாழ்ப்பாண நிர்வாகம், கொழும்பிலுள்ள ஒல்லாந்த தேசாதிபதிக்குக் கீழ் இருந்தாலும் கொழும்போடு இணைந்ததாக இருக்கவில்லை. யாழ்ப்பாண நிர்வாகமானது ஒரு கம்மாந்தோரின் (Commandeur) கீழ் தனியாகவே இருந்தது. யாழ்ப்பாணக் கம்மாந்தோரின் அதிகாரத்தின் கீழ் மன்னார் திருக்கோணமலை மட்டக்களப்பு ஆகிய மூன்று பிரதேசங்களும் இருந்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த தீவுப் பகுதிக்கெல்லாம் ஒல்லாந்து நாட்டுப் பெயர்களே சூட்டப்பட்டன. காரைதீவுக்கு (நகர்) அம்சர்டாம் (Amsterdam) என்றும், ஊர்காவற்துறைக்கு, கைற்ஸ் (Kayts) என்றும், தன்னனித்தீவுக்கு லயிடின் (Leyden) என்றும், புங்குடுதீவுக்கு மிட்டில் பேர்க் (Middle berg) என்றும், அனலைதீவுக்கு றொற்றர்டாம் (Rotterdam) என்றும், இரணைத்தீவுக்கு ஹுன் (Hoon) என்றும் பெயர் சூட்டப்பட்டன.

கி.பி. 1658 இல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகை 1 இலட்சத்து 20 ஆயிரம் என மதிக்கப்பட்டுள்ளது. 1766 இல் இது 1 இலட்சத்து 87 ஆயிரத்து 600 ஆக உயர்ந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மன்னர் காலத்தில் வழக்கிலிருந்த நீதி முறையின் அடிப்படையிலேயே நீதி பரிபாலனம் நடந்தது. ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாணத்தில் பல தலைமுறையாகக் கையாளப்பட்டு வந்த தேச வழமைச சட்டத்தை மாற்றாமல் அதையே யாழ்ப்பாணத்துக்கான நீதி பரிபாலனச் சட்டமாகவும் ஏற்றுக் கொண்டனர்.

கி.பி 1707 இல் ஒல்லாந்தத் தேசாதிபதி கொர்னேலிஸ் ஜோன் சிம்மன்ஸ் (Cornelis Joan Simonsz) இன் கட்டளைப் படி கிளாஸ் ஐசாக்ஸ் (Claasz Isaacs) என்பவரால் தொகுத்து ஒரு சட்ட நூலாக வெளியிடப்பட்ட இத்தேச வழமைச் சட்டத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 12 முதலிமார்கள் உண்மையான சட்டம் என்று அங்கீகரிப்பதாக கையொப்பமிட்டுள்ளனர்.

இத் தேச வழமைச் சட்டம் 1) சுதந்திரங்களும் ஆதன உரிமைகளும் 2) மஞ்சனீர்ப் பிள்ளை (தத்தெடுத்தல்) 3) காணிகள் ஆட்சி 4) நன்கொடை 5) ஒற்றியும் ஈடும் 6) கூலிக்குப் பிடித்தல் 7) கொள்வனவு விற்பனவு 8) சிறைகள் 9) வட்டிக்குப் பணம் கொடுத்தல் என்றும் ஒன்பது அதிகாரங்களைக் கொண்டிருந்தது. இச் சட்டவரைவு வெளியிடப்பட்ட போது சிங்களப் பகுதிகளுக்கு குறிப்பாக ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்டிருந்த கொழும்பு நிர்வாகப் பகுதிக்கு, காலி கம்மாந்தோர் நிர்வாகப் பகுதிக்கோ, அவர்களது ஆட்சிக்குட்படாதிருந்த கண்டி அரசனுடைய நிர்வாகப் பகுதிக்கோ தனியாக நீதி நிர்வாகம் எதுவும் ஒரு இன மக்கள் என்ற அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

- நக்கீரன்

சிறுகதை

# ஆண்மை

## எஸ். பொ

ஈச்சேரில் விழுந்த சந்திரசேகரம் கோழி உறக்கத்தை வாலாயம் பண்ணி, அதனைச் சுகிக்கின்றார். யாழ்தேவியில் பகற் பயணம். அகோர வெயில். காட்டு வெக்கை. இத்தனைக்கும் மேலாகச் சிவசம்புச் சாப்பாட்டுக்கடைச் சோற்றைக் கொறித்தார். மனசார ஒரு மயக்கம். சாய்வு நாற்காலியிற் தாம் தூங்குவதான நினைப்பே அவருக்கு யாரோ உடம்பைப் பிடித்து விட்டது போன்ற சுகத்தைக் கொடுத்தது.

வள்ளி சாக மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், அவருடைய குடும்பம் தாயடி வீட்டிலே வந்திருக்கிறது. பெத்துப் பெருகிய குடும்பம். அவருடைய மனைவி சரஸ்வதி முதல் ஐந்து பிள்ளைகளையும் பெட்டைக் குஞ்சுகளாகவே பீச்சிவிட்டாள். அரிய விரதங்கள் பிடித்து, இருக்காத தவம் எல்லாம் கிடந்து, கண்டகண்ட தெய்வங்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டது வீண்போகவில்லை. சோட்டை தீர்க்க ஆறாம் காலாகப் பொடியன் பிறந்தான். சந்தான விருத்தியிலே அவனே மங்களமாக அமைந்தான்.

பயணக் களைப்பைப் பாராமல், சரஸ்வதியும் புத்திரிகளும் வீட்டைத் துப்பரவு செய்யும் உழவாரத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சந்திரசேகரத்தைச் சயன நங்கை முற்றாகச் சரித்து விடவும் இல்லை. இமைகளைப் பிளந்து காங்கை ஏறுவதான கூச்சத்தில், அவருடைய கண்களின் இமைக் கதவுகள் சற்றே அகலும். இமைகளின் ஈயக்குண்டுகளைச் சுமக்க இயலாது என்கிற வாக்கில் மீண்டும் மூடிக் கொள்ளும். இமைகள் இலேசாகத் தோன்றுகின்றன. முற்றத்தில் மாமரங்கள் செழுங்கிளைகள் பரப்பியிருக்கின்றன. அவை வெக்கையை உறிஞ்சுவதினாலே தான் இத்தகைய இதம் விழுந்திருக்கிறது என்பதை அவதானிக்க முடிகிறது. மாமரங்களுக்கு அப்பால் 'கேற்' தெரிகின்றது. அதிலே கறல் மண்டிக் கிடக்கிறது.

கேற்றிலே நிலை குத்திய விழிகளைப் பிய்த்தெடுத்து, இடப்பக்கமாக மேய விடுகிறார். மதிலில் பாசி சடைத்து நுதம்பி வழிகின்றது. சுவரின் வெடிப்பிலே ஆலங்கன்று ஒன்று வேர் விட்டு, கொழுத்து வளருகின்றது. 'உதை உப்பிடியே வளரவிட்டால் சுவருக்கு மோசம் தரும்!' ஐயரின் வளவைச் சுற்று மதில் வளவு என்று தான் சொல்வார்கள். அந்த எல்லையைப் பற்றியும் அறிக்கையைப் பற்றியும் கவலையில்லை. வலப்பக்கமும், கொல்லையும் வேலியும், வலப்புற வேலியிலே ஊரும் அவருடைய பார்வை தரிக்கின்றது. அந்த வேலி கறையான் தின்று இறந்து கிடக்கின்றது. கோழி ஒன்றும் அதன் குஞ்சுகளும் ஒரே சுரத்தொனியைச் சாதகஞ் செய்து கொண்டு, வேலியிலுள்ள கறையான்களை மேய்கின்றன.... பூரணத்திற்கு வேலியைப் பற்றி என்ன கவலை? சோட்டைக்குத் தானும் அவளுக்கு ஒரு பெட்டைக்குஞ்சு பிறக்கவில்லை. சிமாட்டிக்கு எல்லாம் கடுவன்கள்.

வேலியையும் தாண்டி சேகரத்தாரின் மனம் அலை மோதுகின்றது.

முப்புரம் எரிக்க முனையும் முக்கண்ணனாகச் சாம்பசிவத்தார் காட்சியளிக்கின்றார். சொற்கள் அனற்குழம்பை அள்ளிச் சொரிகின்றன.

"உந்த வேலியைப் பிரிச்செறிஞ்சு போட்டு மதில்தான் கட்டவேணும். உவளவை கோயில் கிணத்திலை போய்த் தண்ணி அள்ளட்டுமன்... ம்.. பக்கத்திலை பாவங்கள், ஏழை பாளையள் வந்து தண்ணி அள்ளட்டும். போகட்டும் வரட்டும் எண்டு ஒரு பொட்டு விட்டால், தட்டுவாணியள் மாப்பிள்ளையல்லோ கொள்ளப் பாக்கிறாளவை.."

'பொட்டு' மேவப்பட்டு, பனையுயரத்தை எட்ட முனைந்த புது வேலி, சாம்பசிவத்தாரின் வைராக்கியத்தைப் பறை கொட்டியது. பூரணத்தைப் பார்க்க முடியாது, தூண்டிற் புழுவின் ஆக்கினையைத் தமதாக்கிச் சந்திரசேகரம் சாம்பினான்.

அழகு என்ற சொல்லின் அர்த்தப் பொலிவு முழுவதையும் தனதாக்கி எழில் பிழிந்தவள் பூரணம். இடையை இறுக்கிச் சுருக்கும் பாவடையோடும், குரும்பை மார்பை அமுக்கி விறைத்த சட்டையோடும், சருவக் குடம் சுமந்து, அவள் தன் வீட்டிற்கும் அயல் வீட்டுக் கிணற்றுக்கும் நடைபயில... அந்த நடைபயிலும் நர்த்தனக் கால்களிலே தன் உள்ளத்தை வெள்ளிப் பாதரசமாகத் தொங்கவிட்டு....

விழி மொழிக் கொஞ்சல் முற்ற முற்ற, கிணற்றடி கமுக மரவட்டில் காதற் கடிதங்கள் கனிந்து தொங்கத் தொடங்கின. கமுகமரம் சமர்த்தான தபாற்காரன் தான். ஆனால் காற்றும் காகமும் செய்த திருக்கூத்தால், பூரணத்தின் கடிதம் ஒன்று சாம்பசிவத்தாரின் கைகளிலே சிக்கியது. உறவு பிளவுற்றது. வேலி பனையுயரத்தை எட்ட முனைகிறது!

வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது என்று சொல்வார்கள். தாய் வழியில், பூரணம் சந்திரசேகரத்தின் மனைவியாக வாழத்தக்க உறவு முறை. ஆசையின் தொங்கு தாவல்கள், பூரணத்தை அடைவதற்கு தாயின் ஆதரவைத் திரட்டும் நள்ளல். இரவுச் சாப்பாட்டின் போது இதைப் பற்றி சேகரம் மெதுவாகப் பிரஸ்தாபிக்கிறான். சித்திரைப் புழுக்கத்திற்காக விறாந்தையில் விசிறியுடனிருந்த சாம்பசிவத்தாரின் செவிகளிலே அந்த உரையாடலின் சில நறுக்குகள் விழுந்து விடுகின்றன. காலம் அப்பிய சாம்பற் புழுதியை உதிர்த்துக் கொண்டு, கோபம் அம்மணமான அக்கினி உடம்பைக் காட்டலாயிற்று.

"உங்கை என்ன காத்தையைக்.. கதையள்? இப்பவே தாய்க்கும் மேனுக்கும் மனம் குத்திய கொல்லனும்! குரலின் சுருதியைத் தாழ்த்தி அதிலே பாசத்தைக் குழைத்து, "தம்பி நீ ஒருத்தன் நல்லா வாழ வேண்டும் எண்டு தானே இவ்வளவு பாடு பட்டம்? உனக்கு ஒரு கெடுதல் வந்து அண்டவிட்டிடுவமே? கலியாணம் எண்டால் சின்னச் சோறுகறி ஆக்கிற அலுவலில்லை. அதைப் சொல்லிப் போட்டன். அந்த எடுப்பை மறந்து போடுங்கோ. நான் மசிவனெண்டு கனவிலும் நினையாதையுங்கோ...உதுக்கும் கன்னிக்கால் நடுகிறதிலும் பாக்க நான் பாடையிலை போக ஓமெண்டுவன்."

அதிலே தொனித்த உறுதி சேகரத்தின் தாய்க்குத் தெரியும். மகனுடைய ஆசையின் பக்கம் தன்னால் சாய முடியாது என்ற நிதர்சனத்தின் உறைப்பு.

"உங்களுத்தான் ஆண்டவன் கண்டறியாத தொண்டையைப் படைச்சிருக்கிறான்! இப்ப என்ன நடந்து போச்சு எண்டு துள்ளுறியள்? இவன் வாயுழையப் புசத்துறான் எண்டு கேட்டுக் கொண்டிருந்தால்...நான் என்ன சுகத்தைக் கண்டன்? மத்தளம் போல இரண்டு பக்கமும் அடிபடுறன்.." என்று சலித்து மூக்குச் சிந்தி முன்தானைக்கும் வேலை கொடுத்தாள் தாய்.

தொடர்ந்து புகுந்த மௌனம் நீண்டது.

"பேய் சந்திரன், ஏண்டா, இப்பிடி எங்களைக் கொல்லுறாய்? உன் விருப்பப்படி ஆட எனக்கும் உன் கோத்தைக்கும் முதவிலை ஏதேன் நஞ்சைத் தாவன்! கண்டறியாத பலகாரத்தைக் கண்டவன் போல, இடியப்பக்காரியின்ரை வாடிப்போன நோட்டாலத்தை நினைச்சு இந்தப் பேயன் உருகுகிறான்..." என்று விவகாரத்திற்கு சாம்பசிவத்தார் புதிய வேகம் கொடுத்தார்.

அடுக்களையிலிருந்து எவ்வித சளசண்டியும் எழும்பவில்லை. இளகிய இரும்பும் கருமத்தில்

பெரியவங்களின்ர பொறுப்பிலை விட்டுட்டு.... சோதினை பாஸ் பண்ணினாப் போல போதுமே? நல்ல உத்தியோகம் ஒண்டிலை உன்னைக் கொழுவிவிட வேணும் எண்டு நான் ஒவ்த் திரியிறன். நீ என்னடா எண்டால் குறுக்கால தெறிக்கப் பாக்கிறாய்... இனி மேல் ஒண்டு சொல்லிப் போட்டன். அந்தப் பலகாரக்காரியளின்ரை கதை இந்த வீட்டிலை எடுக்கப்படாது..." எனப் பேசி முடித்தார்.



பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்ததுடன் சாம்பசிவத்தார் நின்று விடவில்லை. ஓடி அலைந்து, பிற் கதவுகளில் நுழைந்து, பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து, இழுக்க வேண்டிய கயிறுகளை இழுத்து, மகன் சந்திர சேகரத்தை நல்லதோர் உத்தியோகத்திலே மாட்டிக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். அதற்குப் பின்னர் தான் சாம்பசிவத்தார் நிம்மதியாகத் தூங்கினார் என்று கூடச் சொல்லலாம்.

தூங்குவதான பாவனையில் பழைய சம்பவங்களை அசை போட்டுக் கொண்டு கிடக்கிறார் சந்திரசேகரர்.

"சரசக்கா! எப்பிடிப் பாடுகள்? உடம்பு கொஞ்சம் இளைச்சுக் கிடக்குது" இது பூரணத்தின் குரல்.

"அவளின்ரை குரல் அப்பிடித்தானே கிடக்குது ஒரு உடைவோ, ஒரு கரகரப்போ?"

பக்கத்து வீட்டாரைப் பற்றிய நினைவின்றி இயந்திர வாழ்க்கை உருளும் கொழும்பில் வாழ்ந்த பிள்ளைகளுக்கு அயல் வீட்டுப் பரிவு புதுமைச் சுவையை ஊட்டுகிறது.

"வாருங்கோ பூரணம்க்கா, புழக்கமில்லாமல் பூட்டிக் கிடந்த வீடு. உதைத், துடைச்சுத் துப்பரவாக்கிறதுக்கிடையிலை இடுப்பு முறிஞ்சு போடுமெணை. உதென்ன சருவச் சட்டிக்கை?"

"இதெணை கொஞ்சம் இராச வள்ளிக்கிழங்கு. புள்ளையளுக்குப் பிரியமா இருக்குமெண்டு கிண்டினனான். இது தானே மூத்த பொடிச்சி? உங்கை பாருங்கோவன் நல்ல வடிவா வளர்ந்திருக்கின்றாள். எக்கணம் என் கண்ணும் பட்டுப் போகும்.. எடுங்கோ புள்ளை. ஐயா நித்திரையே? அவருக்கும் கொஞ்சம் கொண்டு போய்க் குடு தங்கச்சி..."

சந்திரசேகரத்தார் தாம் நித்திரையில் ஆழ்ந்து விட்டதாக நடிக்கிறார். 'ஐயா நித்திரையெண்டால் எழுப்பக் கூடாது' என்ற ஞாயிற்றுக்கிழமை, பிற்காலத்தில் போயா தின மெட்னித் தூக்கங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பொது விதி அவரைக் காப்பாற்றுகின்றது.

'பழைய பூரணமே? பெரு விரல்களால் பத்து இடங்களில் குழி தோண்டி, இரண்டு வார்த்தைகள் பேசத் திக்கு வானே அந்த மங்குளிப் பெண்ணா இவள்? இப்பொழுது கதை கண்டவிடம் சொர்க்கம்.'

சந்திரசேகரத்தாரின் மனம் நினைவோடையைக் கிழித்துச் செல்கின்றது.

உத்தியோகமான புதிதில் கொழும்பிலே போர்டிங் சீவியம். அலாம் மணி- பிளேன், டீ- பேப்பர்- முகச் சவரம் - தந்த சுத்தி, குளிப்பு முதலியன, பாண், விறுக்கு நடை, பஸ், ஓட்டம், கந்தோர், மயும் முஸ்பாத்தியும், அலுவல்கள் சோறு என்ற நினைப்பில் கல்லைக் கொறிக்கும் 'லஞ்ச்' என்ற வித்தை, வம்பு மடம், அலுவல், டீ, நடை, பஸ், மெது நடை, அரட்டை, சாப்பாடு, இங்கிரமெண்டைக் காப்பாற்றப் படிப்பு, லைட் அவுட், தூக்கம்!

இராணுவ ஒழுங்கிலே நேரத்தின் ஆட்சிக்குள் உடலை வசக்கி எடுக்கும் இயந்திர இயக்கம். பின்னேர டீயுடன் ஒரு வடை, கடுதாசி விளையாட்டு, வசுக்கோப்புப் படம் என்ற விதி விலக்குகளுக்கு மேற்படி நேர சூசியில் மிக மிக ஒறுப்பாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மற்றும்படி பிரக்ஞை கூட ஸ்மரித்த இயக்கம். பக்கத்து வீட்டுப் பூரணத்தின் முகம் தலை நீட்டுவதுண்டு.. நேரத்தின் இராக்கதம் அதனைப் பிடித்து விழுங்கும்.

சாம்பசிவத்தார் அனுபவசாலி. மகனைத் தனிக்க விடாது அடிக்கடி கொழும்புக்கு இஸ்டமான சொட்டைத் தின்களுடன் வந்தார். எத்தனையோ குழையடி கோசுகளுக்குப் பிறகு, சரஸ்வதியை அவனுடைய வாழ்க்கைத் துணைவியாக்கி விட்டார். சரஸ்வதி ஆதன பாதனங்களுடன் சிமாட்டியாக வந்து சேர்ந்தாள். அப்பன் கீறிய கோட்டைத் தாண்டாத சற்புத்திரனாக நற்பெயர் எடுத்து சந்திரசேகரம் இல்லற வாழ்க்கையில் இறங்கினான். மூன்று ஆண்டுகளாக மலடியோ என்று பூச்சாண்டி காட்டிய சரஸ்வதி தொட்ட சொச்சம் விட்ட மிச்சம் என்று ஐந்து பெண்களையும் ஒரு

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)

# கியூப இயக்குனர் தோமஸ் கிதெராஸ் அலியா (4)

IV

## Guantanamera

Death of a bureaucrat படத்தைப்போலவே கியூப சமூகத்தின் அதிகார வர்க்கம் பற்றிய விமர்சனம்தான் 'குண்டனமேரா' படத்திலும் வெளியாகிறது. 1950- களின் பிரபலமான 'Guajra Guantanamera' எனும் பாடலைப் பின்னணியாகக் கொண்டு படம் அமைகிறது. குண்டனமேரா கியூபாவின் ஒரு நகரம்.

படம் ஒரு சவப்பெட்டி குண்டனமேராவிலிருந்து ஹவானா சென்று சேரும் வரை உள்ள பயண அனுபவங்களைச் சொல்கிறது. வயதான மூதாட்டி ஒருவர் நீண்ட வருட இடைவெளிக்குப் பின் குண்டனமேரா வருகிறார். தனது இளம் வயதுக் காதலனைப் பார்க்க விரும்பும் இந் நாளைய பிரபல பாடகியான அப் பெண்மணி, இன்றும் இசைக் கலைஞனாக உள்ளூரிலேயே இருக்கும் முதியவரைக் காணப் போகிறாள். சின்ன வயதில் அவள் நினைவாக வைத்திருக்கும் நீல ரிபனை அவளுக்குக் காண்பிக்கிறார் முதிய காதலர். அந்த நெகிழ்வான நிமிடத்தில் அவரது மடியில் தலைசாய்த்து உயிரை விடுகிறாள் பெண்மணி.

அவர் பிரபலமான பெண்மணி என்பதால் அவர் உடல் ஹவானாவுக்குக் கொண்டு

**மரியனின் ஆதிக் கதை சுவாரசியமானது. பல்கலைக் கழகம் போவதையே நிறுத்திவிடும் மரியன் பிற்பாடு இன்ஜினியரிங் கல்லூரி சென்று இன்ஜினியராகி இன்று டிரக் டிரைவராக இருப்பது இன்றைய கதை. மரியனின் கடிதம் இபராவுக்கும் பிடித்துத்தான் இருந்தது.**

போகப்பட வேண்டும். பொறுப்பு ஆல்பரடோ என்கிற அரசு அதிகாரிக்குக் கிடைக்கிறது. சவப்பெட்டியோடு இறுதிவரை முதியவரும் செல்ல விருப்பப் படுகிறார். ஆல்பிரடோவின் மனைவி மூதாட்டியின் உறவினள். ஆல்பிரடோ, அவர் மனைவி, முதியவர் ஒரு காரிலும் சவப் பெட்டி ஒரு காரிலுமாகப் பயணம் தொடர்கிறது.

இதே சந்தர்ப்பத்தில் வேறொரு இடததிலிருந்தும் ஒரு பயணம் தொடர்கிறது. மரியன் எனும் சாரதியின் டிரக் அது. மரியன் என்ஜினியரிங் படித்தவன். இப்போது லொறி டிரைவர். உலகத்தின் எல்லா லாரி டிரைவர்களையும்போல இவருக்கும் போகிற ஊர்களில் எங்கும் பெண்கள் தொடர்பு இருக்கிறது. குன்டனமராவில் மணமான ஒரு பெண், இவனுக்கு கர்ப்பமுற்றிருப்பதால்

கணவனிடம் போக முடியாது எனச் சொல்லி இவனோடு ஹவானா வர விரும்புகிறாள். மரியன் இப்படி எத்தனை பேரை ஹவானா கூட்டிச் செல்ல முடியும். வைப்பாட்டியோடு இருக்கும் தன் நண்பனை இழுத்துக் கொண்டு தப்பித்து ஓடுகிறான்... இடையில் காரில் துரத்திவரும் அவளிடம் அகப்பட்டு அடிபட்டு இவனது நண்பன் மூக்குடைத்துக் கொள்கிறான்.

மரியனின் ஆதிக் கதை சுவாரசியமானது. மரியன் முதலில் பொருளாதாரமே படித்தான். மரியனின் ஆசிரியை ஆல்பிரடோவின் மனைவிதான். இபராதான் கதாநாயகியாக நடித்திருக்கிறார். இபரா பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியை, பல்கலைக் கழகத்தில் இபராவுக்கு காதல் கடிதம் எழுதிவிட்டு பல்கலைக் கழகம் போவதையே நிறுத்திவிடும் மரியன் பிற்பாடு இன்ஜினியரிங் கல்லூரி சென்று இன்ஜினியராகி இன்று டிரக் டிரைவராக இருப்பது இன்றைய கதை. மரியனின் கடிதம் இபராவுக்கும் பிடித்துத்தான் இருந்தது. ஆனால் மரியனைத்தான் அதற்குப் பின் காணவே முடியவில்லை...

இபராவுக்கு இப்போது மத்தியதர வயது. அவளது வளர்ந்த ஒரே மகளும் இப்போது மியாமிக்கு ஓடிப் போய்விட்டாள்.

புள்ளிவிபரப் பட்டியல்கள் என்கிற பெயரில் பொய் விபரங்கள் தரும் அதிகார வர்க்க பொருளாதாரப் பேராசிரியர்கள் பல்கலைக் கழக அமைப்பில் விரக்தியுற்று வேலையை விட்டுவிட்டாள் இபரா. இப்போது இளைஞர்கள் வளர்ச்சித் திட்டத்தில் செயற்பட யோசித்துக் கொண்டிருக்கிறாள். கணவன் ஆல்பிரடோ பதவி ஆசை பிடித்த, பொய்மைகள் நிறைந்த அரசு அதிகார வர்க்கம் சார்ந்தவன். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவன். மனத்தளவில் அவர்களுக்குக்கிடையிலான நெருக்கமோ, பரஸ்பர அன்போ அவர்களுக்கு இல்லை.

இப்போது கியூபாவில் ஒவ்வொரு பிராந்தியமும் தனக்கான போக்குவரத்து வசதியைத் தாமே நிர்வகிக்க வேண்டும் என ஒரு ஏற்பாடு இருக்கிறது. ஆகவே சவப்பெட்டி ஒவ்வொரு பிரதேசத்திலும் இறக்கி விடப்பட்டு, எல்லையில் வேறொரு வாகனத்தில் ஏற்றப்பட வேண்டும். சவப்பெட்டியில் நீல ரிப்பன்தான் அடையாளம்.

பயணம் தொடங்குகிறது. சவப்பெட்டி பயணம் செய்கி



கொன்டனமேரா படத்திலிருந்து...

றது. போதாத காலம் இடையில் பல தடங்கல்கள். பசியாற கார் நிற்கும் இடத்தில் டிரக்கும் நிற்கிறது. மரியனும் இபராவும் சந்திக்கிறார்கள். மறுசந்திப்பு. மீண்டும் கர்ப்பிணிப் பெண்ணொருத்தியை மருத்துவமனைக்கு அழைத்துவரும் இபராவும், தனது நண்பனை மருத்துவமனைக்கு அழைத்துவரும் மரியனும் சந்திக்கிறார்கள். மூன்றாம் முறை கள்ளமாகச் சாப்பிடும் இடத்தில் சந்திக்கிறார்கள். தொடர்ந்து வரும் தீராத காதல்.

நான்காம் முறை ஒரு ரயில்வே டிராக்கில் கார் நிற்கிறது. அங்கிருக்கும் காவல் பெண் மரியனின் வாடிக்கைப் பெண். இபராவும் வருகிறாள். வாடிக்கைப் பெண்ணுக்குத் தப்பி வரும் மரியன் இபராவை முத்தமிடப் போகிறான். வாடிக்கைப் பெண் கண்டுவிட்டுக் கத்துகிறாள்.

மரியனின் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டு இபரா காரில் வேகமாக ஏறுகிறாள். ஒரு நகரில் சவப்பெட்டி மாற்றம். உள்ளறையில் அந்த மூத்த பெண்மணி விபச்சாரி என்கிறான் ஆல்பிரடோ. இதைக்கேட்டுவிடும் முதியவர் அவனை அறைந்து விட்டு, தான் தனியே ஹவானாவுக்கு வந்து விடுவதாகப் பிரிந்து போகிறார்...

பயணம் தொடர்கிறது. ஒரு பெட்ரோல் பாங்கில் இபராவின் கார் டிரைவரைச் சந்திக்கும் மரியன் ஒரு கடிதம் எழுதி இபராவிடம் சேர்க்கச் சொல்கிறான். யதேச்சையாக அங்கு முதியவரைப் பார்க்கும் இபரா அவரோடு கோப்பியருந்தப் போக, அங்கு வரும் டிரைவர் மரியனின் கடிதம் தர, அதைக் கண்டு சந்தோசமுறும் இபரா வண்ண நிறக் கவுன் புதிதாக வாங்கி அணிந்து கொள்கிறாள். அவளுக்கு இளமை திரும்பி விட்டதற்கு அது அடையாளம்.

ஆல்பரடோ உடையை மாற்றச் சொல்கிறான். விபச்சாரி மாதிரி இருக்கிறது என்கிறான். வாய்வார்த்தை முற்றி அவளை அறைந்து கீழே தள்ளி விடுகிறான். அங்கு வரும் மரியன் ஆல்பிரடோவை அடித்துத் துவைத்துவிடுகிறான்...

இச் சந்தர்ப்பத்தில் சவப் பெட்டி ரிப்பன் அவிழ்ந்து விழுந்துவிட, அது வேறொரு பெட்டிக்குக் கட்டப்பட்டு சவப் பெட்டிகள் மாறி வருவதை எவருமே கண்டுகொள்ள முடியாமல் போகிறது...

சவப்பெட்டி ஹவானா வந்து சேர்கிறது. மரியாதைக்கு வைக்கப்படுகிறது. முதியவர் வருகிறார். மிகுந்த வேதனையும் கண்ணீரும் சேர சவப்பெட்டியருகே வந்த அவர், உடலின் முகத்தைப் பார்த்து மயங்கி விழுந்து உயிர் விடுகிறார். ஓடிவரும் ஆல்பரடோ சவத்தின் முகம் பார்க்கிறார். அது முதிய பெண்

**சவப்பெட்டி ஹவானா வந்து சேர்கிறது. மரியாதைக்கு வைக்கப்படுகிறது. முதியவர் வருகிறார். மிகுந்த வேதனையும் கண்ணீரும் சேர சவப்பெட்டியருகே வந்த அவர், உடலின் முகத்தைப் பார்த்து மயங்கி விழுந்து உயிர் விடுகிறார்.**

மணி அல்ல. ஒரு ஆபிரிக்கரின் முகம். ஆல்பரடோ அவசரமாக சவப் பெட்டியின் முகப்பை மூடிவிடுகிறார். ஒருவருக்கும் தெரியாது.

இறுதிக் காட்சியில் சவ அடக்கம். உயர்ந்த ஏணி கொண்டு வரப்பட்டு, கூட்டத்தின் மத்தியில் ஏணி மீது நின்று இரங்கலுரையாற்றுகிறார் ஆல்பிரடோ. 'இரண்டு உன்னத மனிதர்கள், மதிப்புக்குரியவர்கள் இறந்து விட்டார்கள், உதாரண மனிதர்கள் நாம் அஞ்சலி செய்வோம்' என்கிறார். பொய்யன். முதிய வயதிலும் நேசம் மறக்காத மனிதனை, மனுஷியை அவமதித்த பொய்யன். இபராவுக்கு ஆல்பிரடோவின் பொய்யுரை அற்பமாகத் தெரிகிறது. மழை வந்து விட்டது. பெய்யெனப் பெய்யும் மழை. கூட்டம் கலைந்து ஓடுகிறது. இபராவும் விலகி நடக்கிறாள்...

ஏணியின் மீது ஆல்பிரடோ. இறங்க வழியில்லாமல் ஏணியிலின்று பீடம் ஏறிவிட்ட ஆல்பிரடோ. ஏணி வீழ்ந்துவிட்டது. மழை பலத்துப் பெய்கிறது. 'என்னைக் காப்பாற்றுங்கள்'. காப்பாற்ற எவருமில்லை. ஆல்பிரடோ புலம்பிக் கொண்டிருக்கிறான்.

இபரா மழையில் தொப்பலாக நனைய நடக்கிறாள். மரியன் சைக்கிளில் இபராவைக் காண வருகிறான். இபரா சைக்கிளின் முன்னால் உட்கார சைக்கிள் திரும்பிப் போகிறது.

மலர்க் கொத்துக்களுடன் அழகாக உடுத்திய குழந்தையொன்று நிதானமாக வந்து புலம்பிக் கொண்டிருக்கும் ஆல்பிரடோவைப் பார்த்துக் கொண்டு நிற்கிறது...

இக் குழந்தை ஒரு கனவு. எதிர்கால ஜீவன். நான் கணக்கில் பெய்து மழைவெள்ளம் பெருகி முதிர்ந்தவர், பழையவை, நாறிய மதிப்பீடுகள், மாறாதவை அடித்துக் கொண்டு போகப்பட பூமி சுத்தமாக, வானத்துக்கு மேலேறி பின்பு மீண்ட குழந்தை, அப் பெண் மழலை.

அக் குழந்தையை நிறையத் தடவைகள் கண்டு திடுக்கிடுகிறார் முதியவர். அது பிரமையா? நிஜமா? ஏன நிர்மலமான குழந்தை? அது நிஜம்தான். பழையன கழிய, நாறிய மதிப்பீடுகள் அழிய, இளைய யுகம் வாழும் எனும் நம்பிக்கை அக் குழந்தை. புதியன நிற்கும் என்கிற நம்பிக்கை "அக் குழந்தையின் சாந்தமான புன்னகை."

யமுனா ராஜேந்திரன்

(16ம் பக்கத் தொடர்ச்சி)

# ஆண்மை

கடுவனையும் அடுக்கடுக்காகப் பெற்றெடுத்துவிட்டாள். அத்துடன் கணவருக்கு 'ஆர்' விருதியையும் சேர்த்து சந்திரசேகரத்தாராக மகிமைப்படுத்தி விட்டாள். அவள் தாயில்லாதவள். நல்லதுக்கும் கெட்டதுக்கும் மாமியார் வீடுதான். மூன்றாம் பிள்ளையின் பிரசவ வீட்டில் சாம்பசிவத்தார் கண்களை மூடினார். பேத்தி பிறந்த ஜாதக பலன் என்று அந்த நிகழ்ச்சிக்கு விவரணம் கூறிய ஊர்ச்சனம். 'நெய்ப் பந்தம் பிடிப்பதற்கு ஒரு பேரன் இல்லையே' என்ற ஒறுவாயையும் சுட்டிக் காட்டியது.

சாம்பசிவத்தாரின் மனைவி வலுத்த சிவன், ஆறாம் பிள்ளைப் பேறுக்காகப் பழக்க தோஷத்திலேதான் வீட்டுக்கு சரஸ்வதியைக் கூட்டி வந்தார். அவருடைய தாயாருக்கு ஏலாத நிலை. பொடியன் பிறந்தான். அவனைத் தடுக்கிலே கண்டு களித்த நிலையிலே பெத்தாச்சிக் கிழவி மோசம் போனாள். ஆண்டுத் திவசத்துக்குப் பிறகு இந்த வீட்டை அவர் சரியாகப் பராமரிக்கவில்லை. பொடியனுக்கு இப்பொழுது வயது நாலு. ஊமை என்ற பட்டத்தைச் சுமக்கிறான். டாக்டர்கள் அவன் பெரிய பேச்சாளனாக விளங்குவான் என்று அபிப்பிராயப் படுகின்றார்கள். அவனைப் பற்றி வளர்ந்து வரும் விசாரமும் ஒரேயடியாக வீட்டோடு வந்து குடியேறுவதற்கு காரணமாக அமைந்தது.

"மூத்தவன் இந்த கோசுதான் யூனிவேஸிடி என்றன்ஸ் எடுத்தவன். கூப்பிட்டிருக்கிறாங்களாம். எடுபடுவன் எண்டுதானெணை சொல்லுகிறான்" பூரணம் இன்னும் போகவில்லை. எல்லோரும் பேச்சிலே குந்தி விட்டார்கள்.

"என்ன எடுத்தவர்? என்ஜினியரிங்கோ?" சரஸ்வதி மூத்த பெண் திலகம் கேட்கிறாள். அவள் யாருடனும் சட்டென்று பழக்கம் பிடித்துக் கொள்ளுவாள்.

"இல்லை, புள்ளை டாக்குத்தர் படிப்புக்கும் போகவேணும் எண்டு இஞ்சினை சொல்லித் திரிஞ்சான்..." பூரணத்தின் குரலிலே எவ்வித பெருமையும் மண்டவில்லை. புதிதாகச் சேர்ந்துள்ள பெரும் பணத்தின் செருக்குத் துளிகூட இல்லை.

சந்திரசேகரத்தார் மறுபக்கம் திரும்பிப் படுப்பதான அபிநயத்துடன் புரளுகிறார். மனம் பூரணத்தைப் பற்றிய நினைவுகளிலே மொய்த்துச் சுகிக்கின்றது.

கடையப்பக்காரியள் என்று சாம்பசிவத்தார் சிந்திய சுடுசொற்கள் பூரணத்தின் தாயாரை வெகுவாகத் துன்புறுத்தியது. அன்று தொடக்கம் அவள் நாயாக அலைந்து, தன் மகளுக்குக் குடும்ப வாழ்க்கை ஒன்று முதிரச் செய்துவிட்டாள். சின்ன வயது தொடக்கம் வல்வெட்டித்துறையாருடைய கடையிலே வேலை செய்த அனாதைப் பையன் சோம சுந்தரத்தைக் கைப்பிடித்த ராசி அள்ளிக் கொடுத்தது. திருச்சி பீடிக் கொம்பனிக்கு ஏஜன்ஸி எடுத்து ஆரம்பமானது அவனுடைய தனி வியாபாரம். இன்று இங்கு ஒரு கடை, குருநாகலில் இரண்டு கடைகள். கொழும்பில் பீடி பக்டரி, கிளிநொச்சியில் வெள்ளாண்மைப் பூமி, ஐந்து லொறிகள் என்று செல்வம் பொங்கி வழிகின்றது. புளியுருண்டை வியாபாரமும் உண்டு என்று பேசிக் கொள்கிறார்கள். காகம் குந்தியே மாடு சாகப் போகுது? சென்ற ஆண்டு அவருக்கு ஜே.பி பட்டமும் கிடைத்திருக்கிறது!

"ஓமெணை, அவர் யாவார விஷயமாத்தான் கொழும்புக்குப் போயிருக்கிறார். என்னதான் அள்ளிக் குவிச்சாலும் வீட்டுச் சோறுக்கும் தண்ணிக்கும் பொசிப்பில்லை. அந்தரிச்ச சீவியமெணை..."

பூரணம் உண்மையிலை சீதேவிதான். இல்லாட்டில் என்னைக் கட்டிக்கொண்டுதானே கஷ்டப்பட்டிருப்பாள்? அவளுக்கு நாலும் கடுவன்கள். ஆசைக்குக் கூட ஒரு பொட்டை இல்லை. அவளுக்கு எல்லாம் பெண்களாய்ப் பிறந்திருந்தாலும் கவலையில்லை. தெறிச்சுப்



பார்த்து நல்ல மாப்பிளை எடுக்கிறதுக்கு வேண்டிய காசு இருக்குது. எனக்கு எல்லாம் பொடியன்களாகப் பிறந்தாலும் என்ன புண்ணியம்? சீனியரோடை நில்; என்னைப் போலக் கிளாக்கராகு என்றுதானே சொல்லியிருப்பன்? இந்த வீடும் வளவும்! காடலைந்த முயலாட்டம் இந்த வளையை நாடி வந்திருக்கிறேன். சரஸ்வதி கொண்டுவந்ததுகள் சில சட்டிலை இடக்கு. அதுகளை மீட்டாலும் கோமணத் துண்டளவிலை ஒரு வளவும், பேரளவுக்கு ஒரு வீடும் கட்டிக் குடுக்கத்தான் தேறும்.....

பத்து வருஷ சேர்விஸோட ஸ்பெஷல் கிரேடிற்குப் போகேக்கிள்ளை எல்லாத்தையும் வெட்டிப் புளக்கலாம் எண்டுதான் நினைச்சன். நான் கிளறிக்கல் சேர்விஸிலை சேர்ந்து கொட்டப்பெட்டிச் சம்பளத்தோடை சமாளித்தது போலத்தான் நடக்குது. சரசுவுக்கு என்ன தெரியும்? பிள்ளையளுக்கு என்ன விளங்கப்போகுது? பாவம், அதுகளும் ஏதோ அந்தஸ்த்தைப் பற்றி பெரிசா நினைச்சுக் கொண்டிருக்குதுகள்...

காதலின் மெல்லிய உணர்ச்சிகள் என்ற பழைய நினைவுகளை அசைபோட்ட சந்திரசேகரத்தார் புத்திபூர்வமான லோகாயத விசாரணையில் இறங்கி, மனதைப் புண்ணாக்கி அப்பிடியே தூங்கிவிட்டார்.

விழித்தபொழுது வள்ளிசாக ஒரு மணி நேரமாவது தாம் தூங்கிவிட்டதை அவர் உணர்ந்தார். கை கால்களை அலம்பிக்கொண்டு தேனீர் குடிக்க வந்தமர்ந்தார். சரஸ்வதி இராசவள்ளிக் கிழங்கைக் கொடுத்தாள். 'யார் தந்தது?' என்று கேட்காமலே சாப்பிடத் தொடங்கினார்.

'பூரணத்தின் சுபாவத்தைப் போலவே கிழங்கும் இனிக்கிறது'

"கேட்டியளேய்யா... இண்டைக்கும் நாளைக்கும் உலைவைக்கக் கூடாதாம். நாளையண்டைக்குத்தான் நல்ல நாளாம்.."

"கொழும்பிலை இருந்த உமக்குமெணை உந்தப் பஞ்சாங்கங்களைப் பார்க்க நல்லாத் தெரியுது போல..."

"பூரணக்காதான் சொன்னா.... அண்டைக்கும் நாளைக்கும்தானே சமைச்சு அனுப்பப்போறது எண்டும் சொன்னாவு. நான் வேண்டாமெண்டு சொல்லவும் அவ கேக்கிறாவு இல்லை..."

"ஓமெணை... உனக்கும் இஞ்சை துடைச்சுக் கழுவத்தானே ரெண்டு நாளும் சரியாகப் போகும்..."

"பூரணமக்கா தங்கமான மனுஷி... பொடியளும் அப்பிடித்தான்."

"நான் கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளுறதுக்குள்ளை நீர் ஊருலகமெல்லாம் அறிஞ்சிட்டீர்" என்று சிரித்தபடியே தேனீரையும் குடித்து முடித்தார்.

"நான் ஒருக்கா வேலியடைக்கிற நாகப்பனைப் பார்த்திட்டு வாறன்.."

பூரணம் முற்றத்தில் நின்று சிரிக்கிறாள். அவரும் பதிலுக்குச் சிரித்தார்.

"மனசார இவள் ஒரு [illegible]"

நாகப்பனும் சின்னவனும் வேலியடைக்கிறார்கள். கொல்லை வேலி சின்னன். விடியப்புறம் வந்தவர்கள் அதனை அடைத்து முடித்தபிறகுதான் காலைச் சாப்பாட்டைப் பார்த்தார்கள்.

வெயில் ஏறத் தொடங்கியது. பூரணத்தின் வளவுப் பக்கத்து வேலி பிரிக்கப்பட்டது. அடைப்பு வேலை ஆரம்பமாகியது. சந்திரசேகரத்தார் கூட மாட நின்று உதவி செய்கிறார். 'கட்டுக் கோத்துக்' கொடுக்கக்கூட ஓர் ஆண்பிள்ளை இல்லையே.

சோட்டைக்குப் பிறந்த பொடியன் பூரணத்தின் இடுப்பிலே குந்தியிருக்கிறான்.

'நடுவாலை ஒரு பொட்டு வைச்சு அடையுங்கோ. புள்ளை குட்டியள் போய்வரட்டும்' என்று பூரணம் சொல்லுகிறாள்.

அந்தப் பொட்டினை அடைத்து, தன் மகளின் வாழ்வைக் காப்பாற்றுவதாகச் சாம்பசிவத்தார் நினைத்தார்.

பொட்டுக்கள் உறவுக்கான வாசல்கள். உறவுகளே... அன்று பூரணத்தின் அழகிலே அவர் மனம் அலைந்தது. இன்று.. அவளுடைய ஆளுமையிலே ஒரு கனிவும் சுகமும் இருப்பதை உணருகிறார். அந்தச் சுகத்தில் நெஞ்சிலே தைத்துச் சீழ் வைத்துவிட்ட சிறாம்பை சந்திரசேகரத்தார் மெதுவாக இழுக்கிறார்.

இருபது வருடங்களுக்குப் பின்னர் 'பொட்டு' ஒன்று விடப்பட்டு வேலி அடைக்கப்படுகிறது.

நன்றி:
தொகுப்பு ஆண்மை

---

எஸ் கருணாகரனின் இரு கவிதைகள்....

## இன்றைய நிகழ்வுகளில்

*எங்கள் முற்றத்துப்*
*பூமரங்களெல்லாம்*
*மரணித்துப் போயின*
*தளிர்களை உருவி*
*குருத்துக்களை முறித்தெறிந்து....*
*அந்த மாமரம் கூட*
*அனாதை வயோதிபன் போல*
*தீயில் வெந்து*
*திகைத்துப் போய் நிற்கிறது*
*அதில் குயிலின் குஞ்சு*
*குருதியாகுதியில் குளித்து விட்டது*

*இங்குள்ள வயல் வெளிகளில்*
*நெல் மணிகள்*
*நெருப்புடன் போராடி*
*தியாகத்தில் தீயாகின*

*குடிசைக் கூடுகளெல்லாம்*
*தீயில் கொல்லப்பட்டு*
*சாம்பல் காடாக*
*சூனியம் காட்டி நிற்கின்றன.*

*சாம்பல் மேடுகளில்*
*நிலவு—*
*ஊமையாக அழுகின்றது.*

*நிமிர்ந்த பனைகளும்*
*சத்தமின்றித்*
*தாக்கத்தில் தோய்ந்து போய்*
*அழுது தீர்க்கும்*

*ஆனால்,*
*புது மூச்செறியும்*
*வடலிகள்*
*நாளைய சேதிக்காக*
*வீரமுடன்*
*எழுந்து நின்று*
*எட்டிப் பார்க்கும்*

*இந்தப் புல்வெளிகளெங்கும்*
*சப்பாத்துக்களில்*
*நசிந்த புற்கள்*
*மீண்டும் நிமிர்ந்து*
*புதிதாய் நிற்கும்*
*ஒரு விடியலுக்காக.*

---

## இருப்பின் தேவை

*விழிகளில் முள் முளைத்த அக்ரமரம்*
*சூரியன் பாதியாய் சிதறிய கொடூரம்*
*வானம் பூமியை*
*அமுக்குகின்றதாய் உள்ளுணர்வு*
*சாபத்தின் படிமமாய்*
*எங்களது வாழ்வின் பொருள் சிதறிய*
*உயிர்க் கவிதைகள்.*

*எந்தப் பொழுதிலும்*
*காற்று*
*நிணமாய் மாறும்.*

*இலேசாக*
*மூக்கினூடேயும்*
*சில வேளைகளில் வாயினூடாகவும்*
*சீள் வாங்கி வெளியாகும் காற்று*
*மூச்சடைப்பாகநெரிப்பதன் பொருளென்ன?*

*நகம் வளர்ந்த கொள்கைகளால்*
*மனிதத்தின் உன்னதங்கள்*
*பிருண்டப்பட்டன.*
*எங்களது இருப்பின் தேவையும்*
*சுதந்திரமும்*
*ஊரின் ஒவ்வோர் புறமும்*
*முகாம்களின் முள் வேலிக்குள்*
*முடிச்சிறுகிக் கிடக்கின்றன.*
*வாழ்வு அர்த்தமற்றதாய்*
*என் நினைவுகளில் தெறிக்கிறது.*
*எனினும்*
*உயிர்ப்பின் ரகஷ்யம்*
*உள்மனம் அறியும்.*

நன்றி: தாயகம்

# தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு என்கிறார்களே அது என்ன குணம்?

*பொன். சிவா*
*எகர்சுண்ட்*
*நோர்வே*

✎ தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு என்கிறார்களே அது என்ன குணம்?

✍ எதற்கும் ஒன்று படாமல் தனித் தனியே சிதறிக்கிடப்பதைத் தான் எள்ளலாகக் கூறியிருப்பார்கள் போலும்.

✎ இந்த உலகில் வாழும் மற்றைய இனங்களைப் போல் நாமும் சுதந்திரமாக வாழ எமக்கென்றோர் நாடு வேண்டும் என்று உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களும் உணரும்' காலமொன்று இனி வருமா?

✍ நிச்சயமாக அந்த நம்பிக்கை அனைவருக்கும் வேண்டும். நம்பிக்கையின் அடிப்படையில் தான் வாழ்க்கைச் சக்கரம் இயங்குகின்றது.

*S. அலெக்ஸ்*
94130 Nogent sur Marne,
France.

✎ கிளிநொச்சியை இராணுவம் சென்றடைந்த போது அங்கு மக்கள் யாரும் இல்லாமல் ஒரேயொரு தெருநாய் இருந்ததாம், ஏன்?

✍ தமிழீழத்தின் பெரும் நகரங்களில் ஒன்றான கிளிநொச்சியைக் கைப்பற்றும் போது வந்த படையினரை வரவேற்க மனிதர்கள் இல்லாத குறையைத் தீர்க்கவென இருக்கலாம்.

*யோ. சுரேஷ்,*
3175 Flamatt

✎ சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நவம்பரில் பாரிசில் நடைபெறவுள்ளதாக அறிகிறேன். சிறீலங்கா அரச பயங்கரவாதத்துக்கு வழங்கப்படும் இவ் உதவிகளுக்கு, பிரான்சில் வாழும் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து தமது எதிர்ப்பைக் காட்டுவார்களா? இது பற்றிய உமது கருத்தென்ன?

✍ இந்த மாநாடு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. அரசுக்கான உதவிகளும் அபிவிருத்தியைக் காரணம் காட்டி தொடர்ச்சியாக வழங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இன்றைய காலகட்டத்தில் இலட்சக்கணக்கான தமிழ் மக்களை சிறீலங்கா அரசு இருப்பிடமில்லாதவர்களாக ஆக்கியுள்ளது. அனைத்து அடிப்படைத் தேவைகளையும் வழங்காமல் முடக்கியுள்ளது. அதேவேளை பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் தான் வெற்றி பெற்று வருவதாக வெளி உலகுக்குப் பிரச்சாரம் செய்து வருகிறது. இப் பிரச்சாரம் பொய் என்பதையும், உண்மை நிலை என்ன என்பதையும் பிரான்சில் மட்டுமல்ல, புலம் பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளிலும் உள்ள தமிழர்களும் சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் அனைத்து நாடுகளுக்கும் ஜனநாயக ரீதியான வழிகள் மூலம் தெரியப்படுத்துவது இன்றைய காலகட்டத்தில் மிக மிக அவசியமானது.

*ம.சுரேந்திரன்*
*பாரிஸ் 10*
*பிரான்ஸ்*

✎ காஷ்மீர் போரில் புலிகள் பலி என தமிழன் எக்ஸ்பிரசில் அண்மையில் ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. அது பற்றி உமது கருத்து என்ன?

✍ தமிழன் எக்ஸ்பிரஸ் இந்திய பார்ப்பனிய பத்திரிகைகளில் ஒன்று. போலியான இந்தியத் தேசியத்தை கட்டிக் காப்பாற்றும் அதே வேளை, தமது உரிமைக்காகப் போராடும் தேசிய இனங்கள் மீது அவதூறுகளைப் பரப்பி, பயங்கரவாதிகளாகச் சித்தரிப்பதும் இந்திய விரிவாக்கக் கொள்கைக்கு ஆதரவாக வரிந்து கட்டிக் கொண்டு செயற்படுவதிலும் இந்தப் பத்திரிகையின் பங்கு கணிசமானது. காஷ்மீர் விடுதலைப் போராட்டம் மீதும் தமிழீழ விடுதலைப் போராட்டம் மீதும் ஒரே நேரத்தில் சேற்றை வாரி இறைக்கும் செயற்பாடே அக் கட்டுரை. இது தொடர்பான

## சித்திரகுப்தனார் பதில்கள்

எதிர்வினைகளை சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு உடனடியாகவே தெரிவிக்க வேண்டியது வாசகர்களின் கடமை.

*செ.சந்திரன்*
*பிராங்போர்ட்*
*ஜேர்மனி*

✎ மனங்களை வெல்லுதல் என்றால் என்ன குப்தனாரே?

✍ சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் பாஷையில் சொன்னால் மக்களை இருப்பிடமற்றவர்களாக்கி கொள்ளையடித்து நகரங்களை சுடுகாடு ஆக்குதல்.

*ம.வேந்தன்*
*பாரிஸ் 18*
*பிரான்ஸ்*

✎ காவடிச் சிந்தில் காதல் பாடல்கள் உள்ளனவா?

✍ பேசு குயிலே – என
தாசை மயிலே – வனப்
பேடையன்னமே – மலர்
சூடு சொன்னமே
ஆசையில்லையோ – என்மேல்
நேசமில்லையோ – எனக்
காடுமில்லையோ – எனக்
காடுமில்லையோ – முகம்
பாரு வள்ளியே

*(வள்ளி கல்யாணக் காவடிச் சிந்து 146)*

*க. சுதா*
*பாரிஸ் 10,*
*பிரான்ஸ்*

✎ புகலிட நாடுகளில் பெரும்பாலான பெற்றோர் தமது பெண் குழந்தைகளுக்கு பரதநாட்டியம் கற்பிப்பதில் ஆர்வம் காட்டி வருவதன் நோக்கம் என்ன?

✍ பண்பாட்டுடன் ஒட்டிய கலை வடிவமொன்றின் மூலம் தம்மை அடையாளப்படுத்துவது என்பதைவிட பரதநாட்டியம் என்பது சமூகக் கௌரவம் சார்ந்த விடயமாக இங்கு அடையாளப் படுத்தப்படுகின்றது எனலாம். இக் கலைவடிவத்தின் எல்லை அரங்கேற்றத்துடன் சுருங்கிப் போவதும் இதனால் போலும்.

# பாலியல் கொடுமைகள் புரியும் கோண்டாவில் படை முகாம்

வலிகாமத்தில் உள்ள மக்கள் மீது அப்பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் புரியும் கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இளம் யுவதிகள் மீதும், குடும்பப் பெண்கள் மீதும் பாலியற் கொடுமைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களைக் கொலை செய்யும் அராஜகத்தையும் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான கொடுஞ் செயல்களில் கோண்டாவிலில் இயங்கி வரும் படை முகம் இராணுவத்தினர் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்னர் திருமணத்திற்காக கனடா செல்லவிருந்த யுவதி ஒருவர் மீது பாலியற் பலாத்காரத்தினை மேற்கொண்ட மிருக வெறி பிடித்த படையினர் அவரை இறுதியில் கொலை செய்து சடலத்தை அருகிலிருந்த வளவொன்றில் புதைத்துள்ளனர்.

இம் முகாமிலுள்ள படையினரால் இதுவரை 22 யுவதிகள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால் இவர்களின் நிலை தொடர்பாக எவ்வித பதிலையும் வழங்க படையினர் தொடர்ந்தும் மறுத்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த 30 ஆம் திகதி மாலை உரும்பிராய் வடக்கில் வசிக்கும் வேலாயுதபிள்ளை ரஜனி என்ற 22 வயதுப் பெண்ணை உரும்பிராய் வீதியில் வைத்து எவ்வித காரணமும் இன்றி கைதுசெய்த படையினர் கோண்டாவில் முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். இவரின் நிலை என்னவென்பது இது வரை தெரியவில்லை.



## வாகன சேவை

பாரிசில் உங்கள் வீட்டுச் பொருட்களை ஏற்றி இறக்க நீங்கள் நாடவேண்டிய இடம்
Ravi: 01 48 76 51 90
06 07 62 26 89 / 01 42 23 23 10
(ADV)

## லா சப்பேலில் மகத்தான திறப்பு விழா

உங்களுக்குத் தேவையான
கணணிகள் (Computer)
கணணிகளுக்கான உதிரிப்பாகங்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

SCS



தொடர்புகளுக்கு:
SCS INFORMATIQUE
61, RUE LOUIS BLANC, 75010 PARIS
TEL: 01 40 36 12 12 / FAX: 01 40 36 12 17

புதிய கணணி வகுப்புக்கள்
நவம்பர் 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன
(ADV)

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
K. Kesenthiran.

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
ஆசிரியர்:
க. கஜேந்திரன்

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 041333896

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்:
மக்கள் கடை
Tel: 01-271 7374
நேசன் - 077 886582

லண்டன்:
ஜெயந்தன்:
Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து:
தாஜுபவர்தன்
Tel: 0223 680462

லாச்சப்பலில்
சகலவிதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
01 42 09 60 64

# கிளிநொச்சியில் அரசாங்கத்திற்கு பாரிய இழப்பு பாராளுமன்றத்தில் எம்.எச்.எ.முகமட் தகவல்

(கொழும்பு)

அரசாங்கம் கிளிநொச்சியைப் பிடித்துவிட்டதாகச் சொல்லுகிறது. ஆனால் இதற்காகச் செலுத்திய விலை என்பது மிக அதிகமானது என்று சிறிலங்கா பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகரும் ஐ.தே. கட்சிப் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எச் முகமட் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் கிளிநொச்சியில் மிக அதிகமானோர் காயமடைந்திருப்பதையே ஜனாதிபதி தெரிவித்த இரத்தம் தேவை என்ற கோரிக்கை வெளிப்படுத்தியுள்ளது. கிளிநொச்சியில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களின் பெற்றோர்களுக்கே அறிவிப்பது அவசியமாகும். ஆனால் அது இடம் பெறவில்லை. கொழும்பில் முதலில் 86 சடலங்களும் பின்னர் 40 சடலங்களும் அதன் பின் 100 சடலங்களும் என்ற கணக்கில் படையினரின் இறுதிக் கிரிகைக்ள் நடைபெற்றன. அவ்வாறாயின் அநுராதபுரம், கம்பஹா, குருநாகல் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை எவ்வளவு? கிளிநொச்சியில் படைகளுக்கு பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பதே உண்மை. ஒரு ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது என்று கூறியுள்ளார்.

# பிரயாணச் சீட்டு வாங்கச் சென்றவர் திரும்பி வரவில்லை

யாழ் குடாநாட்டில் பொதுமக்கள் வெள்ளை வாகனத்தில் வரும் காடையர் கும்பலால் கடத்திச் செல்லப்படும் செயல் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமுள்ளது. மானிப்பாயைச் சேர்ந்த குடும்பத் தலைவரான தெய்வேந்திரம் தனது அவசிய கருமமொன்றிற்காக கொழும்பு சொல்ல வேண்டியிருந்ததால் தனது பிரயாணத்திற்கான பதிவினை மேற் கொண்டு அதற்கான அனுமதிச் சீட்டைப் பெறுவதற்காக பொற் கொல்லர் வீதி இராணுவக்காவல் நிலை ஊடாக யாழ் நகருக்குச் சென்றுள்ளார்.

சென்றவர், சென்றவர்தான் இதுவரை வீடு திரும்பவில்லை. அச்சமடைந்த மனைவி இதுபற்றி இராணுவத்திடம் தொடர்பு கொண்டு விசாரித்தபோது தாம் அப்படி ஒருவரையும் கைது செய்யவில்லை எனப் பதிலளிக்கப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## நாசகார...

தையும், தளம் மாறும் நடவடிக்கைகளையும் அழிக்க முடியுமென சிறீலங்கா அரசு நம்புகிறது. ஏற்கனவே சிறீலங்காவிடமுள்ள இஸ்ரேலிய குண்டுவீச்சு விமானங்களிலிருந்து இவற்றை வீசமுடியும்.

இந்தவகைக் குண்டுகள் மூலம் தமிழ் மக்களின் செறிவான குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடத்தி பேரழிவுகளை ஏற்படுத்துவதே சிங்களப் பேரினவாதத்தின் உண்மையான நோக்கமாகும்.

இதேவேளை, நாசகார ஆயுதக் கொள்வனவின் பிரகாரம் ஏனைய தொகுதி ஆயுத தளபாடங்கள் இஸ்ரேலிடமிருந்து விரைவில் வந்து சேரும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கடற்படைக்கு...

கடற்படையினருக்கு தேவையான பல கடற்படைக் கலங்களை ஏற்கனவே விநியோகித்த அனுபவமுள்ள அந்த நிறுவனத்தைப் புறக்கணித்துவிட்டு அந் நிறுவனத்தின் கேள்வித் தொகையைவிட ஐந்து கோடி அமெரிக்க டொலர் அதிகமான தொகைக்கு கேள்விப் பத்திரம் தாக்கல் செய்த அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கே கப்பல்களை வழங்க அனுமதி வழங்கப்பட்டதாம்.

இதன் மூலம் 30 கோடி ரூபா மோசடி செய்யப் பட்டதாகவும், இந்த மோசடியில் சிறீலங்கா கடற்படையின் உயர்மட்ட அதிகாரிகள் சிலரின் பங்கும் உண்டு என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கிளிநொச்சிப்...

கள் மத்தியில் ஒருவித புத்தூக்கம் காணப்படுவதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனாலும் வழமைபோலவே சிங்களச் செய்தி ஊடகங்கள் தமது கற்பனைச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. சிங்களப் பத்திரிகையொன்றின் கணிப்பின்படி முல்லைத்தீவு முகாமில் கைப்பற்றிய கனரக ஆயுதங்களை உள்ளடக்கிய புலிகளின் [illegible] ஆயிரக்கணக்கானோர் கிளிநொச்சி மீட்புக்காக தயாராகி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகள்...

டுள்ள படைகளுக்கான விநியோகங்களை தடைசெய்யமுடியும். மேலும் தற்போது விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்கள் வாங்குவதிலேயே அதிக கவனத்தைச் செலுத்துகின்றனர். தமது புதிய ஆயுதக் கொள்வனவின் போது நீண்ட தூர எறிகணைகளும் அடங்குகின்றன இவற்றினால் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்திறனுக்கு சமனான நிலையை பெற்றுக் கொள்வார்கள். இதேவேளை சிறீலங்கா கடற்படையால் முல்லைத்திவுக் கடற்பகுதியை கண்காணிக்க முடியாமல் இருப்பதன் காரணமாக வெகுவிரைவில் ஆயுதக் கப்பல் முல்லைத்தீவில் நங்கூரமிட முடியும் என்று பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் ஒத்துக் கொண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சிங்கள...

ஜனவரியில் நடந்த கொழும்பு மத்திய வங்கி குண்டுத் தாக்குதல் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய உத்தேசித்துள்ளது.

தலைவர் பிரபாகரன், உட்பட 10 பேர் மீது 712 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன என்றும், 472 பேர் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பார்கள் என்றும் 111 பொருட்கள் தடயப் பொருட்களாக சமர்ப்பிக்கப்படும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைவர் பிரபாகரனுக்கு எதிராக சிறீலங்கா அரசாங்கம் 1978ல் பிடியாணை பிறப்பித்த போதிலும், குற்றவியல் வழக்கு ஒன்றில் நேரடியாக தாக்கல் செய்யவிருப்பது இதுவே முதல் தடவையென்றும், இத்தகைய ஒரு வழக்கின் மூலம் அரசாங்கம் சாதிக்கப்போவது எதுவும் இல்லை என்றும், வெறுமனே காலத்தை இழுத்தடித்து அரசியல் தீர்வுக்கான கதவை நிரந்தரமாக மூடிவிடுவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருப்பதாக கொழும்பில் உள்ள பிரபல சட்டத்தரணிகள் கூறியிருப்பதாக கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க தலைவர் பிரபாகரனும், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானும் இணைந்து கொழும்பு மத்திய வங்கிக் கட்டிட குண்டு வெடிப்புக்கு காரணமாக இருந்தார்கள் என்று கூறும் சிறீலங்கா அரசாங்கம், தான் முன்பு தலைவர் பிரபாகரன் பொட்டம்மானை இயக்கத்திலிருந்து விலக்கி சிறையில் அடைத்துவிட்டார் என்று செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்க ஒன்று என் சில அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பிச்சைக்காரர்களு...

வருவதாக சிறீலங்கா புனாய்வுத் துறையினருக்கு கிடைத்த இரகசியத் தகவல்களையடுத்து கொழும்பிலுள்ள இளவயதுப் பிச்சைக்காரர்கள் அனைவரும் தீவிரமான சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 09.10.96 புதன்கிழமை மட்டும் கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட பிச்சைக்காரர்கள் கைதுசெய்யப்பட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சந்திரிகாவால்...

அபாயகரமான கட்டத்திலிருக்கும் என்னைக் காப்பாற்ற சர்வதேச சமூகம் முயற்சிக்க வேண்டும் என சிறீலங்காவின் பாராளுமன்ற உறுப்பினர், வைத்தியர் ஜெயலத் ஜயவர்த்தனா சர்வதேச ரீதியில் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் பூர்த்தி செய்யப்பட்டு இன ஒடுக்கல் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை என்னால் பல தடவைகள் முன்வைக்கப் பட்டுள்ளன. வடக்கு - கிழக்கு மக்கள் மீதான அராஜகங்கள் நிறுத்தப்பட்டு மனித உரிமைகள் அங்கு நிலைநாட்டப் படவேண்டும் என்ற எனது கோரிக்கைகள் சந்திரிகா அரசிற்கு எள்ளவும் விருப்பமில்லாததால் அவர்களது பயங்கரவாதப்படை என்னை கொல்ல முயற்சி எடுத்து வருகின்றது.

மனித உரிமைகளின் முதல் எதிரி சந்திரிகா ஆவார். எனவே ஜனநாயக ரீதியில் குரல் கொடுப்போரை அவர் நசுக்க முயற்சிக்கிறார். எனவே ஜனநாயகத்தை நிலைநாட்ட சர்வதேச சமூகம் சிறீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவ்வறிக்கை யில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாரிஸ் 9ல்
கடை வாடகைக்கு

Paris 9 இல் M°: Anvers ற்கு
மிகவும் அண்மையில்
றெஸ்ரோரன்ற் தவிர்ந்த நீங்கள்
விரும்பிய வியாபார ஸ்தலம்
அமைக்கக்கூடிய 20M² இடவசதி
கொண்ட கடை உடன்
வாடகைக்கு உண்டு வாடகை
2700 H.T.
Bail 6 வருடங்களுக்கு
சகல தொடர்புகளுக்கும்: சிவா
(இரவு 8 மணி முதல்
10 மணிவரை)
Tel: 01 46 71 66 91
Mobil Tel: 06 09 91 12 66

லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

Erraces Travels
Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

Tél: 01 42 09 70 00

à partire de

| | | | |
|---|---|---|---|
| Bombay | 3,900 Frs | Londres | 650 Frs |
| Delhi | 3,900 Frs | New york | 2,400 Frs |
| Bangkok | 3,350 Frs | Montreal | 2,400 Frs |
| Colombo | 4,150 Frs | Oslo | 2,010 Frs |
| Singapour | 3,350 Frs | Toronto | 2,700 Frs |
| Kualalumpur | 3,400 Frs | Nepal | 4,820 Frs |
| Madras | 4,750 Frs | | |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

(ADV)




# ஆபிரிக்கா தொடர்பாக பிரான்சுடன் அமெரிக்கா மேலாண்மைச் சர்ச்சை

ஆபிரிக்க நாடுகளில் பிரான்ஸ் வகித்து வரும் செல்வாக்கில் தமக்கும் பங்கு வேண்டும் என்ற வகையில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் வோறன் கிறிஸ்தோபரின் கடந்த வாரப் பேச்சுக்கள் அமைந்துள்ளதாக செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர் பிரான்சைக் குறிப்பிடாது தெரிவித்த மேற்படி சர்சைக்குரிய பேட்டியில் ஆபிரிக்காவின் 'வளர்ச்சியில்' எமக்கும் அளப்பரிய அக்கறை உண்டு. அதில் அமெரிக்காவின் 'பங்கு' அவசியம். எந்த சக்தியும் அதனை தமது சொத்தாக நினைக்கக் கூடாது எனத் தெரிவித்திருந்தார். அந்த சக்தி யார் என்பதைத் தெளிவு படுத்துமாறு அவரது ஆலோசகரிடம் பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு அது பிரான்ஸ்தான் என அவர் ஒத்துக் கொண்டுள்ளார்.


ஆபிரிக்கச் சுற்றுப்பயணத்தின்போது கிறிஸ்தோபர்

இது ஒரு புறமிருக்க இச் செய்தி வெளியான இவ்வாரம் ஆபிரிக்க சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு ருவண்டா, தன்சானியா, கென்யா, உகண்டா, ஆகிய நாட்டுத் தலைவர்களையும் சந்தித்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் விடுத்துள்ள மற்றொரு அறிக்கையில் தன்சானியா, சையிர் ஆகிய நாடுகளில் 20 இலட்சத்துக்கும் அதிகமான ஹூட்டு இன அகதிகள் தங்கியுள்ள அகதி முகாம்கள் மூடப்பட வேண்டும் என்றும் ருவண்டாவில் அமைதியான ஆட்சி நிலவுவதால் அவர்கள் அங்கு திரும்பலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

ருவண்டாவில் சிறுபான்மையினரான ருட்சி இனத்தினர் இராணுவ பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர் என்பதும் 1993 நடைபெற்ற இனக் கலவரத்தின்போது 5 இலட்சத்திற்கும் அதிகமான சிறுபான்மை ருட்சி இனத்தினர் வெட்டியும் சுட்டும் கொன்றுவிட்டு பின்வாங்கி அகதி முகாமில் முடங்கிக்கொண்ட ஹூட்டு இன இராணுவமும் அரசும் இன்னமும் இன முரண்பாடுகளை மனதில்கொண்டதாகவே உள்ளது. அங்கு இதுவரை ஜனநாயக தேர்தல் எதுவும் நடாத்தப்படவில்லை.

பிரெஞ்சு மொழியையும் ஆட்சி மொழியாகக் கொண்டிருந்த ருவண்டாவில் பதவிக்கு வந்த ருட்சிய இனத்தவரின் ஆட்சியில் அண்மையில் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக்கப்பட்டது.

# சமாதானத்துக்கான நோபல் பரிசு அரசியல் மயப்படுத்தப்படுகின்றதா ?

இவ் வருடத்துக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசு கிழக்குத் திமோர் சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்து செயற்பட்ட கத்தோலிக்க தேவாலய மேற்றிராணியார் Carlos Belochம் இன்னொரு கிழக்குத் திமோர் அரசியல் தலைவரான Jose Ramos Horta ஆகிய இருவருக்கும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது. 12 இலட்சம் டொலர் பெறுமதியான இப் பரிசு வழங்கப்பட்டதை இந்தோனேசியா உடனடியாகவே கண்டித்துள்ளது. 1975 வரை கிழக்குத் திமோரை தமது காலனி நாடாக வைத்திருந்த போர்த்துக்கல் சார்பில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கத்தோலிக்க தலைமைப் பீடமான வத்திக்கான் விடுத்த அவசர அறிக்கையில் தமது ஆழ்ந்த திருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா இது பற்றி வெளியிட்ட அறிக்கையில் கிழக்குத் திமோர் பிரச்சினை தீர்க்கப்பட இப் பரிசு உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1975 இல் கிழக்குத் திமோரை விட்டு போர்த்துக்கல் வெளியேறிய போது இந்தோனேசியா அதன் மீது படையெடுத்தது. நடைபெறும் சுதந்திரப் போரில் 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். இது கிழக்குத் திமோர் சனத் தொகையில் மூன்றில் ஒரு பங்காகும்.

1975-ம் ஆண்டு போத்துக்கல் கிழக்குத் திமோரை விட்டு வெளியேறும் போது செய்தித் தொடர்பு வெளிவிவகார அமைச்சராக இருந்த, நோபல் பரிசு பெற்றவர்களில் ஒருவரான அரசியல்வாதி Jose Ramos Horta புதிய அரசால் நாட்டை விட்டு வெளியேற்றப் பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

நெல்சன் மண்டேலா, அல்லது பொஸ்னிய சமாதான செயற்பாட்டாளர்களுக்கு கூட்டாக வழங்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்பட்ட "சமாதானத்துக்கான நோபல் பரிசே" இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் சமாதானத்துக்கான நோபல் பரிசு பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்துக்கும், இஸ்ரேலிய முன்னாள் பிரதமர்களுக்கும் கூட்டாக வழங்கப்பட்டது.

பர்மாவில் கிளர்ச்சியை நடாத்தி வரும் அவு சான் சுகிக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசு அரசியல் நோக்கம் கொண்டது. தமது நாட்டைச் சீர்குலைக்க எடுக்கப்பட்ட முடிவு என பர்மா தெரிவித்துள்ள பின்னணியில், ஆசியாவுக்கு மீண்டும் ஒரு நோபல் பரிசு வந்து சேர்ந்துள்ளது. வெடி மருந்தைக் கண்டு பிடித்த நோபல் என்பவர் வெடி மருந்து மூலம் வரும் வருமானத்தை மனித குல வளர்ச்சிக்குப் பாடுபடும் பல்வேறு துறையினருக்கும் வழங்க வேண்டும் எனக் கொண்ட விருப்பின் படியே நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

# துருக்கிய அரசு கவிழும் ?

துருக்கியில் அண்மையில் பதவிக்கு வந்த இஸ்லாமியக் கட்சித் தலைவர் எர்பக்கானின் ஆட்சி கவிழலாம் என்ற கருத்து வலுவடைந்து வருகின்றது. அறுதிப் பெரும்பான்மையற்று ஆட்சிக்கு வந்து எர்பக்கான் வலது சாரிக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் தான்சு சில்லரின் ஆதரவுடன் ஆட்சியை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

ஆனால் எர்பக்கான் இஸ்லாமிய அரசுகளுடன் அரசியல் பொருளாதார உறவுகளை மேம்படுத்தி வருவது வலது சாரிகளுக்கு பிடிக்கவில்லை எனத் தெரிய வருகின்றது. அண்மையில் இவர் லிபியாவுக்கு சென்று கேர்ணல் கடாபியைச் சந்தித்தமை மேலும் எதிர்ப்பை வளர்த்துள்ளது. அமெரிக்காவுடன் கடும் பகை கொண்ட நாடான லிபியாவுக்குச் சென்ற விடயம் அமெரிக்காவில் கல்வி கற்ற முன்னாள் பிரதமர் தான்சு சில்லருக்குக் பிடிக்கவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

# டிசம்பரில் இலட்சக் கணக்கான அகதிகள் ஜேர்மனியில் இருந்து திருப்பி அனுப்பப்பட உள்ளனர்

ஜேர்மனியில் உள்ள மூன்று இலட்சத்துக்கும் அதிகமான யூகோஸ்லாவிய அகதிகள் டிசம்பர் மாதம் முதல் துரித திட்டப்படி திருப்பி அனுப்பப்படவுள்ளனர். இதற்கான பூர்வாங்க ஒப்பந்த மொன்றில் இரு தரப்பு அரசுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

பொஸ்னியாவில் நிலைமை இன்னும் சீராகவில்லை என்ற ஐநா சபையின் கண்டனத்தையும் பொருட்படுத்தாது இந் நாடு கடத்தல் அமுல்படுத்தப் படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு அண்மையில் திருப்பி அனுப்பப்பட்ட அகதிகளில் பலர் தமது சொந்த வீடுகளுக்குச் சென்ற போது அவ் வீடுகள் வேறு குடும்பங்களால் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பதைக் கண்டு செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர் என வேறு செய்திகள் தெரிவிக்கின்றன.

# கிழக்கு ஆசியாவில் மேற்கத்தைய ஆயுத விற்பனை அதிகரிப்பு

கிழக்கு ஆசியாவுக்கான மேற்குலக மற்றும் ரஷ்ய ஆயுத விற்பனை துரிதமாக அதிகரித்து வருவதாக International Institute for Strategic Studies என்ற சர்வதேச நிறுவனத்தின் ஆண்டறிக்கை தெரிவிக்கின்றது.

கிழக்கு ஆசியாவில் வளர்ந்து வரும் முரண்பாடுகளால் இந்த ஆயுத ஏற்றுமதி வியாபாரம் தமக்கு வளர்ச்சி கண்டுள்ளதாக மேற்கத்தைய ஆயுத ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். 1994 ஆம் ஆண்டு 6.2 பில்லியன் டொலராக இருந்த ஏற்றுமதி 1995-ம் ஆண்டு 7.3 பில்லியன் டொலராக வளர்ச்சி கண்டுள்ளதாக அவர்கள் திருப்தியடைந்துள்ளார்கள். மேலும் மேற்குலக நாடுகள் தமது இராணுவச் செலவீனத்தை 7.4 பில்லியன் டொலரில் இருந்து 6.5 பில்லியன் டொலராகக் குறைத்துள்ளன.

# சுகார்னே புத்திரி தொடுத்த வழக்கு தள்ளுபடி

இந்தோனேசியத் ஜனாதிபதி சுகார்ட்டோவுடன் முரண்பாடு கொண்ட திருமதி. சுகார்னோ புத்திரி தொடர்ந்த வழக்கை தம்மால் விசாரிக்க முடியாது என நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இந்தோனேசியாவில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி புரிந்து வரும் சுகார்டோவின் உடல் நிலை சீர்கெட்டு வரும்வேளை அடுத்த தலைவருக்கான போட்டி கட்சிக்குள் வளர்ந்து வருகின்றது. இவ் வகையில் முன்னாள் சுதந்திரப் போராட்டத் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சுகார்னோவின் மகளான சுகார்னோ புத்திரி புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளதுடன் தம்மை கட்சியில் இருந்து நீக்கியது சட்டவிரோதம் எனத் தெரிவித்து தொடர்ந்த வழக்கே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

# "எதற்கும் தயாராய் இருங்கள்" பாலஸ்தீன மக்களவையில் யசீர் அரபாத்

கடந்த மே மாதம் இஸ்ரேலில் பதவிக்கு வந்த பிரதமர் நெட்டன்யாகு தலைமையிலான வலதுசாரி ஆட்சியினர் பாலஸ்தீன சமாதான ஒப்பந்தத்தை அமுல் நடாத்த மறுத்து வருவதைத் தொடர்ந்து ஏற்பட்ட முரண்பாடு வலுவடைந்து வருவதாகத் தெரிகின்றது.

இதனைக் குறிக்கும் வகையில் கடந்த 10.10.96 வியாழக்கிழமை பாலஸ்தீனக் கவுன்சிலில் உரையாற்றிய யசீர் அரபாத் உசுக்டி இல் நடாத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் எதையும் தரவில்லை. எனவே எந்தச் சூழ்நிலையையும் சந்திக்கும் மனோநிலையுடன் இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# பின்வாங்கிய ஆப்கான் படைகள் முன்னேறுகின்றன; அகலக் கால் வைத்த தலிபன்கள் பின்வாங்குகின்றனர்

மக்களின் ஆதரவின்றி, ஆப்கான் மக்கட் தொகையில் அரைப் பங்கினரை வீட்டுச் "சிறையில்" அடைத்து ஆட்சிக்கு வந்ததாகப் பிரகடனம் செய்த ஆப்கானிஸ்தானில் உள்ள இஸ்லாமிய மத தத்துவவியல் மாணவர்களாகிய தலிபன்கள் மக்களினதும், பின்வாங்கிய படைகளினதும் கூட்டு எதிர்ப்பை சந்திக்க ஆரம்பித்துள்ளனர்.



தொண்டர் நிறுவனங்களின் முன்னால் உதவி கோரி காத்திருக்கும் படித்த பெண்கள்

இவ் வகையில் கடந்த 12.10.96 அன்று சலாங் பள்ளத்தாக்குப் பகுதியை தலிபன்கள் இழந்துள்ளனர். மேலும் காபூலுக்கு வடக்கே உள்ள தலிபன்களின் விமானப் படைத் தளம் தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் பின்னணியுடன் பாகிஸ்தானிடம் இருந்து ஆயுத உதவி பெற்ற தலிபன்கள் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் பெண்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகள் தடை செய்யப்படுவதாக அறிவித்திருந்தனர். இது பற்றி ஆப்கான் பெண்கள் அமைப்பு வெளியிட்ட செய்தியில் சிறைக் கைதிகளுக்காவது தமக்கு எப்போது விடுதலை கிடைக்கும் என்பது தெரியும். நாமோ நிரந்தரச் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் என பல்வேறு தரப்பட்ட பெண்களும் வீட்டுக்குள் பூட்டப்பட்ட அவல நிலை அங்கு உருவாகியுள்ள இவ் வேளையில் ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டிருந்த சர்வதேச சமூக சேவை நிறுவனங்கள் தமது பணியாளர்களை அங்கிருந்து வெளியேற்றுவதாக அல்லது குறைப்பதாக அறிவித்துள்ளன.

இந் நிறுவனங்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஒக்ஸ்பாம், கெயர் என்பனவும் சேர்ந்து கொண்டுள்ளன.

# இம் மாதம் 18ம் திகதி முதல் பிரான்சில் தொலைபேசி இலக்கங்களில் மாற்றம்

இவ் வாரம் முதல் (18.10.96 முதல்) பிரெஞ்சுத் தொலைபேசி இலக்கங்கள் 10 எண்களைக் கொண்டதாக அமையும். தற்போது உள்ள இலக்கங்களுக்கு முன்னால் மேலும் இரண்டு இலக்கங்களைச் சேர்ப்பதன் மூலம் புதிய இலக்கங்கள் பெறப்படும்.

இவ்வாறு சேர்க்கப்படும் இலக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன

பாரிஸ் பகுதி.................. 01
வடமேற்கு பிரான்ஸ்.......... 02
வட கிழக்கு பிரான்ஸ்......... 03
தென் கிழக்கு பிரான்ஸ்...... 04
தென் மேற்கு பிரான்ஸ்...... 05

வெளிநாட்டு அழைப்புக்களுக்கு இது வரை பாவிக்கப்பட்ட 19 என்ற இலக்கத்திற்குப் பதிலாக 00 என்ற இலக்கங்களைப் பாவிக்க வேண்டும். வெளிநாடுகளில் இருந்து உங்களுடன் தொடர்பு கொள்ளுபவர்கள் எந்த மாற்றத்தையும் செய்யவேண்டியதில்லை வழக்கம் போலவே அவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

### 05 என ஆரம்பித்தால்.....

மேலும் 05 என ஆரம்பிக்கும் இலவச தொடர்பு இலக்கங்களுக்கு 05 பதிலாக 0800 என்ற எண்ணை பாவிக்க வேண்டும். GSM, SFR கைத் தொலை பேசி இலக்கங்களுடன் 06 என்ற இலக்கத்தைச் சேர்க்க வேண்டும் புயிக் (Bouygues) என்ற கைத் தொலை பேசிச் சேவையின் இலக்கங்கள் பாரிய மாறுத்துக்குள்ளாகின்றன. உதாரணமாக 021 என ஆரம்பிக்கும் புயிக் இலக்கத்தின் முன்னால் 06681 என்ற இலக்கத்தைச் சேர்க்க வேண்டும், 024 என ஆரம்பிக்கும் இலக்கங்களுக்குப் பதிலாக 02 என்ற இடத்தில் 0660 என்ற எண்களைப் பிரதியிட வேண்டும். மேலும் இம் மாற்றங்கள் தொடர்பான இலவச தகவல்களை 5211 இலக்கத்துடன் பெறலாம். இம் மாற்றம் தொடர்பாக சிறுகையேடு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

### அவசர அழைப்புக்கள் மாற்றமில்லை

Police, (17) Pompiers (18), SAMU (15), போன்ற இலக்கங்கள் மாற்றமடையவில்லை. சரியான நேரத்தை அறிய பாவிக்கப்படும் 3699 என்ற இலக்கமும் மாற்றமடையவில்லை.

வழக்கமாக இருக்கும் தொடர்பு அலைகள் உரிய இலக்கத்தைச் செல்லும் வரையான இணைப்பு ஒலிச் சமிக்ஞை ஒலி இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

### அலாரம் அழைப்பு இலக்கம் மாற்றம் இல்லை

நித்திரை விட்டெழுவதற்காக வைக்கப்படும் அலாரம் அழைப்புக்கு வழக்கம்போலவே *55* அலாரம் வைக்க விரும்பும் நேரம் (உதாரணம் 08.00 மணி) # என்பது மாற்றமடையவில்லை.

எது எப்படி இருப்பினும் நீங்கள் தவறான இலக்கத்தை பாவித்தால் சரியான இலக்கத்தை பெறக்கூடியவாறான அறிவுறுத்தல்கள் தானியங்கிகள் மூலம் தருவதற்கு தாம் ஏற்பாடு செய்துள்ளதாக பிரெஞ்சுத் தொலைபேசித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

**புதிய இலக்கம் அறிய:** 52 11 உடன் தொடர்பு கொள்ளலாம். இது இலவச சேவை.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# சரியான தருணம் வரும்போது அவளைத் திருமணம் செய்வேன்

## - கத்தோலிக்க மதகுரு -

"சரியான தருணம் வரும்போது நான் அவளைத் திருமணம் செய்வேன்" இரகசிய உறவின் மூலம் ஆண் குழந்தை ஒன்றுக்குத் தந்தையாகிய கத்தோலிக்க மதகுருவான Rodrick Wright அவ் ஆண் குழந்தை 15 வயதை எய்திய பின்பு தான் உண்மையை வெளிப்படுத்தியுள்ளார் என்பது பழைய செய்தி.



தற்போது உண்மையை ஒத்துக் கொண்ட நீங்கள் எப்போது அப் பெண்ணைத் திருமணம் செய்யப் போகின்றீர்கள் எனப் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு "அதற்கான சரியான தருணம் வரும்போது அவளை நான் திருமணம் செய்வேன்" எனத் தெரிவித்துள்ளார். 32 வருடங்கள் மதகுருவாகக் கடமையாற்றிய இவர் இரகசிய உறவு கொண்ட பெண் ஒரு விதவை என்பதுடன் அவருக்கு மேலும் மூன்று குழந்தைகள் உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம் மதகுரு மூன்று வாரங்களாக காணாமல் போனதைத் தொடர்ந்து அவருக்காக விசேட பூசைகள், ஆராதனைகள் கூட நடாத்தப்பட்டன. பின்னர் இவர் வெளிச்சத்துக்கு வந்து உண்மையை ஒத்துக் கொண்டார்.

# வாரக் குறிப்பு

**07.10.96 திங்கட்கிழமை**

- பாலஸ்தீனப் போராளியான Omar Mohamed Ali Reza வயது 38 இற்கு அமெரிக்காவில் ஆயுள் காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர் 1985-ல் எகிப்திய விமானத்தைக் கடத்தியதற்காக இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- காபூலில் இருந்து ஒரு இலட்சத்திற்கும் அதிகமான குடி மக்கள் இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்குப் பயந்து ஓடிக் கொண்டிருக்கின்றார்கள்.
- லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி குர்திஸ் மக்களின் போராட்டத்தை அங்கீகரித்து பேசியதைத் தொடர்ந்து துருக்கிக்கும் லிபியாவுக்கும் இராஜதந்திர உறவில் விரிசல்.

**08.10.96 செவ்வாய்க்கிழமை**

- பாப்பரசருக்கு அறுவைச் சிகிச்சைசெய்த வைத்திய அதிகாரிகள் அவருக்கு புதிய நோய் அறிகுறிகள் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.
- பிரித்தானியாவின் லிஸ்பேர்ன் இராணுவத் தலைமையகத்தில் கடந்த திங்களன்று நடைபெற்ற குண்டு வெடிப்புக்கு ஐ.ஆர்.ஏ உரிமை கோரியுள்ளது.
- இத்தாலியின் துரென் (Tourin) நகரில் ரஷ்ய தயாரிப்பான அன்டனோவ் 124 சரக்கு விமானம் விழுந்து நொருங்கியது. 3 சிப்பந்திகள் பலி, குடிமக்கள் 13 பேரும் காயமடைந்தனர்.
- தென்கொரியாவுடன் ஒத்துழைப்பை பலப்படுத்த அமெரிக்காவில் இருந்து ஒரு முக்கிய அதிகாரி சென்றுள்ளார். வட கொரிய நீர் மூழ்கி அண்மையில் தென் கொரியாவில் கைப்பற்றப்பட்டது. வட கொரியா ஒரு அமெரிக்கப் பிரஜையை உளவு பார்த்த குற்றத்திற்காகக் கைது செய்துள்ளது.
- Mali நாடு ஆபிரிக்காவில் அமெரிக்கத் தலையீட்டை வரவேற்றுள்ளது. அமெரிக்கத் தலையீட்டை வலிந்து வரித்துக் கொண்ட முதலாவது ஆபிரிக்க நாடு இதுவாகும்.

**09.10.96புதன்கிழமை**

- வியட்னாமில் வெளிநாட்டவர்கள் தங்க தொழில் அனுமதிப் பத்திரம் தேவை என அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு குடியுரிமை பெற்ற வியட்னாமியர்களுக்கும் இது பொருந்தும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சீனாவும் பாகிஸ்தானும் அணு விற்பனை தொடர்பாக உடன்பாட்டுக்கு வந்துள்ளதாக நம்பப்படுகின்றது.
- ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வான் போக்குவரத்து உரிமை தொடர்பாக சர்ச்சை எழுந்துள்ளது.
- ஆப்கானிஸ்தானில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த ஒரு ஊழியர் ஆட்சிக்கு வந்துள்ள தலிபன்களால் அடித்துத் துன்புறுத்தி சிறைவைக்கப்பட்டுள்ளார்.

**10.10.96 வியாழக்கிழமை**

- அமெரிக்கா அரசு நேட்டோ அணியை கிழக்கு ஐரோப்பாவில் விஸ்தரிப்பது தொடர்பாக இராஜதந்திர அழுத்தத்தை பிரயோகிக்கின்றது. முன்னாள் சோவியத் ரஷ்ய நாடுகள் பலவற்றை நேட்டோ அணியில் இணைக்க இது வழி வகுக்கும். ரஷ்ய செய்மதிகள் பலவற்றை அமெரிக்க கட்டுப்பாட்டில் கொண்டு வரவும் இது வழி வகுக்கும்.
- சையிர் நாட்டில் சுவிடன் நாட்டு கிறிஸ்தவ சபை வைத்திய சாலை ஒன்றில் 40 பேர் வெட்டிக் கொலை. பலர் நோயாளிகள்.
- தென்.ஆபிரிக்காவில் இனவாத ஆட்சிக் காலத்தில் நடந்த படுகொலைகள் தொடர்பாக நடந்த வழக்கில் 10 உயர் அதிகாரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

**11.10.96 வெள்ளிக்கிழமை**

- சிங்கப்பூரும் அவுஸ்திரேலியாவும் இணைந்து தமது வருடாந்த கடற்படை ஒத்திகையை இன்று ஆரம்பித்துள்ளன.
- ஜேர்மனியில் உள்ள விடுதியில் 1986 ஆம் ஆண்டு நடைபெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக நான்கு லிபியர்களுக்கு சர்வதேசப் பிடியாணை வழங்கப்பட்டுள்ளது.
- பங்காளதேசில் ஆளும் கட்சியின் முக்கிய உறுப்பினர் Obaidul Huqbabul இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவரது நெருங்கிய உறவினர் தொழில் மந்திரியாக உள்ளார்.

**12.10.96 சனிக்கிழமை**

- சீனாவில் தியனன் மென் சதுக்க கிளர்ச்சியை நடாத்திய மாணவர் தலைவர்கள் அமெரிக்காவுடன் இணைந்து சீன அரசைக் கவிழ்க்க சதி செய்தவர்கள் என நீதி மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.
- சையிர் நாட்டில் ரூட்டு இன அகதிகள் வாழ்ந்த அகதி முகாம் இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான அகதிகளை முகாம்களை விட்டு காடுகளை நோக்கி ஓட ஆரம்பித்துள்ளனர்.
- வடகொரியா தொடர்பாக தென்கொரியா எடுக்கும் இராஜதந்திர முடிவுகளில் அமெரிக்காவுடன் முரண்பாடு வெடித்துள்ளது.
- இந்தோனேசியாவுக்கான ஐ.நா தூதுவர் Nugroho வெளியிட்ட அறிக்கையில் நோபல் பரிசைக் காட்டி எமது நாட்டைப் பணிய வைக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

**13.10.96 ஞாயிற்றுக்கிழமை**

- துருக்கிய படைகள் கிரேக்க Cypriot ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.
- அமெரிக்க வேண்டுகோளையடுத்து இஸ்ரேல் பாலஸ்தீன பேச்சுவார்த்தை ஒருநாளுக்கு பின் போடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் முதலாவது McDonald உணவு விடுதி திறக்கப்பட்டுள்ளது. அமெரிக்க கம்பனியான மக் டொனால்ட் அந்நாட்டுக் கலாச்சாரத்துக்கு மதிப்பளித்து பன்றி, மற்றும் மாட்டு இறைச்சி வகை உணவுகளை அங்கு பரிமாறுவதில்லை என அறிவித்துள்ளது.

# ஜெயலலிதாவின் முன்பிணை மனு நிராகரிக்கப்பட்டது

முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா அந்நியச் செலவாணி மோசடி செய்ததற்கு போதிய ஆதாரம் உள்ளது ஆகவே அவருக்கு முன்ஜாமீன் வழங்கக்கூடாது என நீதிமன்றத்தில் சி.பி.ஐ பதில் மனுத் தாக்கல் செய்திருந்தது.

ஜெயலலிதா மீது பல்வேறு ஊழல் புகார்கள் கூறப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றது. அவர் எந்த நேரமும் கைது செய்யப்படுவார் என்ற நிலை உள்ளது.

இதைத் தொடர்ந்து எந்த வழக்குச் சம்பந்தமாகவோ எந்த இடத்திலோ எப்போதுதான் கைது செய்யப்பட்டாலும் உடனே ஜாமீனில் வருவதற்கு வசதியாக முன்ஜாமீன் கொடுக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா ஒட்டுமொத்த முன் ஜாமீன் மனு தாக்கல் செய்திருந்தார்.

கடந்த புதன்கிழமை 09.10.96 அன்று அவரது சட்டத்தரணி அவருக்காக வாதாடினார்.

"ஜெயலலிதா மீது ஏழு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த 7 வழக்குகள் தொடர்பாக முன் அறிவிப்பு இன்றி கைது செய்யக்கூடாது. முன்கூட்டியே அவருக்கு அறிவிக்க வேண்டும்.

அமைச்சரவையில் ஒரு முடிவு எடுக்கப்பட்டால் அதற்கு முதல் அமைச்சர் மட்டும் பொறுப்பு அல்ல. அமைச்சர்கள், அதிகாரிகளும் பொறுப்பு ஏற்கவேண்டும். குற்றச் சாட்டுகளுக்கான ஆவணங்கள் இருக்கின்றன என்று அரச தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனால் ஜெயலலிதா சாட்சிகளை கலைத்துவிடுவார் என்று கூறமுடியாது. என அவருக்கு முன்ஜாமீன் கொடுக்க வேண்டும்.



வழக்குபோடுவதற்கு அரசுக்கு உரிமை உண்டு என்றாலும் அவரை விரும்பும் நேரத்தில் கைது செய்வது நியாயமல்ல, சரியானதும் ஆகாது என்று கூற குற்றம் சாட்டப்பட்டு உள்ளவருக்கும் உரிமை உண்டு. எனவே திடீர் என்று கைது செய்யக்கூடாது. 7 வழக்குகளில் முன்ஜாமீன் வழங்க வேண்டும்." இவ்வாறு ஜெயலலிதாவின் சட்டத்தரணி கபில் சிபல் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை 12.10.96 அன்று இவ் வழக்குமீது தீர்ப்பு வழங்கிய நீதிபதி இவ்வழக்கை நிராகரித்து தீர்ப்பு வழங்கினார் இதனால் ஜெயலலிதா எந்நேரமும் கைது செய்யப் படலாம் என நம்பப்படுகின்றது.

# தமிழகத்தில் பருவமழையால் போக்குவரத்து பாதிப்பு

சென்னை மற்றும் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் கடந்த வாரம் தொடர்ந்து பெய்த பருவமழையால் போக்குவரத்துக்கள் பாதிப்படைந்தன.

தமிழ்நாடு, மற்றும் பாண்டிச்சேரி பகுதியில் பலத்த மழை பெய்துள்ளது. மழை நீர் தேங்கிக்கிடந்தது.

தொடர்ந்து மழை பெய்ததால் பல இடங்களில் போக்குவரத்துக்கள் சீர்குலைந்தன. இதனால் பஸ்களில் பயணம் செய்தோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். மழையால் சாஸ்திரிநகர், பல்தவச்சலம் நகர், சிவகாமி அம்மன் நகர் பகுதிகளில் உள்ள குடிசைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. வியாசர்பாடி புகையிரத பாலத்தின் கீழ் நீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சில இடங்களில் போக்குவரத்துக்கள் சீர்செய்வதற்கு மூன்றுமணி நேரம் சென்றது.

# ஜெயலலிதா கைதாவார் ?

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல், மற்றும் மோசடி தொடர்பாக அவர் மீது சிபிஐ யால் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளிலிருந்து முன் ஜாமீன் பெறுவதற்காக ஜெயலலிதாவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டநிலையில் அவர் எந்நேரமும் கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

கடந்த சனிக்கிழமை உள்ளுராட்சித் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்களிப்பு முடிவடைந்துள்ளதால் அவர் இந்த வாரம் கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விஞ்ஞானிகளுக்கு மூலிகை எரிபொருள் *ராமர் நிபந்தனை*

மூலிகைப் எரிபொருள் ரகசியத்தை யாரிடமும் சொல்ல மாட்டோம் என விஞ்ஞானிகள் உறுதியளித்தால் செயல் விளக்கத்தை மீண்டும் நடத்தத் தயார் என்று மூலிகை மூலம் பெற்றோல் கண்டுபிடித்த விஞ்ஞானி ராமர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நான் செய்த மூலிகைப் எரிபொருள் செயல் விளக்கம் திருப்திகரமாக இல்லை என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறைச் செயலாளர் வி.எஸ்.ராமமூர்த்தி கூறியுள்ளார். மூலிகை எரிபொருள் செயல் விளக்கத்தை மீண்டும் நிரூபிக்கத் தயாராக உள்ளேன். யாரிடமும் சொல்ல மாட்டோம் என்று உறுதியளித்தால் குறிப்பிட்ட விஞ்ஞானிகள் குழுவிடம் மீண்டும் செயல்விளக்கம் செய்ய நான் தயார். அவர்கள் முழு உறுதி அளித்தால் மூலிகைப் எரிபொருள் தயாரிக்கும் முறையை நான் சொல்லத் தயார். இதேபோன்று மூலிகைப் எரிபொருள் செயல் விளக்கத்தைச் செய்து காண்பிக்குமாறு எந்த நிறுவனம் அழைத்தாலும் செல்லத் தயாராக உள்ளேன் என்றார் ராமர்.


TAMIL'S SPORTS & RECORDS

சர்வதேச விளையாட்டு வீரர்களின் சாதனைச் சஞ்சிகைகள், புத்தகங்களுக்குச் சமமான தரத்திற்கு உத்தரவாதத்துடன் சுவிஸ் வாழ் தமிழ் விளையாட்டு வீரர்களின் படங்களுடன் கூடிய புத்தகத்தில் (Sports Records) நீங்களும் உங்கள் சாதனை விபரங்களை தனித்தோ, சிறு குழுக்களாகவோ அல்லது கழகங்களாகவோ வெளியிட விரும்புகிறீர்களா?

**விடயம்:** தமிழ் விளையாட்டு வீரர்களின் தகைமைக்குறிப்பு

**நோக்கம்:** விளையாட்டுத் துறையிலிருப்பவர்களது திறமைகளை அனைவரும் அறியவைத்தல். வீரர்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்த உற்சாகமூட்டல். அறிமுக வீரர்களையும் ஊக்குவித்தல். கடந்தகால சாதனைகளை மட்டுமன்றி எதிர்கால சாதனைகளையும் பதிவு செய்து ஆண்டுதோறும் வெளியிடல்.

**தரம்:** காலங்காலமாக வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டிய பதிவு ஆவணம். பல்லாயிரக் கணக்கானவர்களின் கவனத்தைக் கவரக்கூடிய வண்ணப்படங்களுடன் கூடியது.

**காலம்:** ஆக்க வேலைகட்கு போதிய அவகாசம் தேவைப்படுவதினால், 10.11.1996 முன்பாக எம்முடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**தொடர்பு:** *P.Arulanantham Winson, Bumblizstrasse 25, 3027 Bern, Tel: & Fax: 031/ 992 57 39*

**பொறுப்பு:** *L.Shanmugarajah, Sandrainstrasse 84, 3007 Bern. Tel: 031/371 92 59 Fax: 063/249029*

(ADV)

ONE WORLD COMMUNICATIONS INC

*"Conneting Your World"*

→ திரு. A. போலிக்கற் தன்னிச்சையாக இயங்கும் OWC / ITC தொலைத் தொடர்பு ஆலோசகர்.

→ OWC நிறுவனத்தின் மீளக் கதைக்கும் தொலைபேசித் தொடர்பு சேவை மூலம் அமெரிக்காவினூடாக உலகெங்கும் மிகவும் குறைந்த விலையில் தொலைபேசி அழைப்புகளை பெற்றுக் கொள்ளலாம்.

→ அதற்கான கட்டணங்களை பின்வரும் முறைகளில் உங்கள் வசதிக்கேற்ப இலகுவாக செலுத்தலாம்.

→ கிரடிற்காட் (உ+ம்= Visa, Master Card/Amex/Dinners) மூலம் வரிவிலக்கின்றியோ அல்லது Air Com (U.S.A.) இற்கு.

→ முற்பணம் செலுத்தி பின்பு நேரடியான அல்லது மாதாந்த கணக்கு மூலம்.

→ மீள அழைக்கும் சேவை காட் (Callback Card) மூலம் ஒவ்வொன்றின் பெறுமதி 100 US$.

இலங்கைக்கான ஒரு நிமிடக் கட்டணம்

Credit Card / Deposit - 1.73 சுவிஸ் பிராங்குகள் (இவை PTT விலையிலிருந்து 49% கழிவும் Natel 60% கழிவும்) Callback காட்மூலம் - 2.54 SFR நிமிடத்திற்கு.

மேலதிக தகவல்களுக்கு:

Tel: / Fax: 062/827 26 73

Natel- 079 14 15 05 01

(ADV)




இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் ஈஸ்வரஆனந்தன் அபிசரணை பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கை வண்ணம்


### இவ் வாரக் கைவண்ணம்



**செல்வன்.**
**பாலராஜா அகிலன்**

வயது: 8 (11.06.88)

இடம்: 36341 சிக்கென் டோர்ப், லவுட்டர் பாக், ஜேர்மனி.



கிரிக்கெற்

கிரிக்கெற் ஒரு சர்வதேச விளையாட்டு ஆகும்
இது இங்கிலாந்தில் தோன்றியது.
இதில் 11 வீரர்கள் பங்குபற்றுவர்.
கிரிக்கெற் மைதானம் நீள்வட்ட வடிவமானது
இலங்கை இப்போது உலக சம்பியன்
கிண்ணத்தை வென்றுள்ளது.

## குட்டிக் கதை படியுங்கள்


### சிங்கமும் சுண்டெலியும்

ஒரு நாள் ஒரு சிங்கம் சுண்டெலி ஒன்றைப் பிடித்துக் கொண்டது. சிங்கத்தின் கையில் அகப்பட்ட சுண்டெலி வேதனையால் அழுதது. அது சிங்கத்திடம் தன்னை விட்டுவிடும்படி கெஞ்சியது. ஆனால் சிங்கம் அதை விட்டபாடில்லை.

"உனக்கு ஆபத்து வரும்போது உன்னை நான் காப்பாற்றுவேன்" என்று சுண்டெலி சிங்கத்திடம் கூறியது. "என்னை நீயா காப்பாற்றப் போகிறாய்?" என்று அகங்காரமாக சிரித்தது சிங்கம்.

"சரி இப்போது உன்னை விட்டு விடுகிறேன். இனிமேல் இந்தப் பக்கம் வராதே" எனக் கூறி சுண்டெலிக்கு விடுதலை கொடுத்தது.

சில மாதங்களுக்குப் பின்னர், வேட்டைக்காரன் விரித்த கண்ணி வலையிலே சிங்கம் அகப்பட்டுக் கொண்டது. அதிலிருந்து விடுபட முடியாமல் தவித்தது. அப்போது அவ்விடம் வந்த சுண்டெலி, சிங்கம் வலையில் அகப்பட்டிருப்பதைக் கண்டது. தனது கூரிய பற்களால் வலையை அறுத்து சிங்கத்திற்கு விடுதலை கொடுத்தது.



தனது அகம்பாவத்தை எண்ணி வெட்கப்பட்ட சிங்கம் தலை குனிந்தபடி சுண்டெலிக்கு நன்றி கூறியது.

## விடுமுறை நாட்கள்......



**செல்வன்.**
**வி. கிருசாந்தன்**

வயது: 12

இடம்: பாசல், சுவிற்சர்லாந்து

### தனது விடுமுறை நாட்களைப் பற்றி எழுதி அனுப்பியவர்

எனது கோடை விடுமுறை

ஆடி மாதம் முதலாம் திகதி எனது கோடை கால விடுமுறை ஆரம்பமானது. என் அக்காவும் நானும் முதல் கிழமை டெனிஸ் விளையாட்டுப் பயிற்சிக்குப் போயிருந்தோம். அப்பயிற்சி ஒரு வாரம் தொடர்ந்தது. அடுத்த வாரம் எமது மாமி [illegible] வந்திருந்தார். மாமிக்கு இடம் சுற்றிக் காட்டுவதற்காக பல இடங்களுக்குப் பயணம் செய்தோம். மூன்றாம் வாரம், எனது பெற்றோருடனும், சகோதரியுடனும் லவுசான் என்னும் நகருக்கு ரயிலில் பயணம் செய்தோம். அங்குள்ள மாமா எம்மை ஒலிம்பிக் காட்சியகத்திற்கு அழைத்துச் சென்றார். கடைசி வாரம் நான் நூலகத்திற்குச் சென்று புதிய தமிழ் புத்தகங்களை எடுத்துப் படித்தேன். இப்படியாக எனது கோடை விடுமுறை கழிந்தது.

## தெரிந்து கொள்ளுங்கள்

### டொல்பின்



பிள்ளைகளே!

டொல்பின் என்கின்ற மீனை உங்களில் பலருக்கும் தெரிந்திருக்கும். கடல்வாழ் உயிரினங்களில் மிகவும் புத்தி உள்ளவை இந்த மீன்கள் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த மீன்கள் பல்வேறு விளையாட்டுக்களையும் காட்டி மக்களை மகிழ்விப்பதை நீங்கள் நேரிலோ அல்லது தொலைக்காட்சியிலோ பார்த்திருப்பீர்கள். அத்துடன் இந்த டொல்பின் மீன் மனிதர்களோடு நெருக்கமான உறவுடையது. கடலிலே மனிதர்களை பல ஆபத்துக்களில் இருந்தும் இவை காப்பாற்றியிருக்கின்றன. கடலில் திசை மாறிய கப்பல்களுக்கு வழிகாட்டியும் இருக்கின்றன.

மனிதர்கள் கூறுவனவற்றை இலகுவில் புரிந்து கொண்டு செயற்படவும் இதனால் முடிகிறது. தமது பாசையில் இதனால் பேசவும் முடியுமாம். இதற்கு நீங்கள் உணவு கொடுத்தால், அது போதவில்லை என்றால் 'குய்க்... குய்க்...' என்று தனது பாசையில் இன்னும் தரும்படி கேட்குமாம்.

ஓ..! ஒரு டொல்பின் மீனை பிடித்துவந்து அதனோடு விளையாட ஆசையாக இருக்கிறதா..?

# CHUR மாநகரில்

## 18.10.96 வெள்ளிக்கிழமை

## கோலாகலத் திறப்பு விழா





சுவிஸ் நாட்டில்

5 வது

மக்கள் கடை

**Kupfergasse 13,**
**7000 Chur**

தரம் - மலிவு - தரம் - மலிவு - தரம் - மலிவு

# மக்கள் கடை

தரம் - மலிவு - தரம் - மலிவு - தரம் - மலிவு

**சுவிஸில் இயங்கும் ஏனைய மக்கள் கடைகள்**

| மக்கள் கடை | மில்லர் அங்காடி | மக்கள் கடை | மக்கள் கடை |
|---|---|---|---|
| Heinrichstrasse 85, | Winkelriedstrass 47, | Seilerstrasse 4, | Bahnof Passag 3, |
| 8005 Zurich | 6003 Luzern | 3011 Bern | 4500 Solothurn |


தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# அகலிட நிகழ்வுகள்

## ஜேர்மனியில் நவராத்திரி விழா

*பிராங் போர்ட்*

பிராங்போர்ட் இந்து மன்றத்தினர் 19.10.96 சனியன்று நவராத்திரி விழாவை வெகு சிறப்பாக நடாத்துகின்றனர். இவ் விழா Hausgallus, Frankenallee III மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நவராத்திரி விழாவின்போது வானதி வாணி நர்த்தனாலய மாணவிகள் வழங்கும் நவராத்திரி நாயகன் நாட்டிய நாடகம், சிறப்புச் சொற்பொழிவு, இன்னிசைக் கச்சேரி ஆகியவை இடம் பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக பட்டி மன்றமும், நாடகமும் நடைபெறும்.

வளர்கலை மன்ற எலியாஸ் பிள்ளை குழுவினரின் வீட்டுப் பிசாசுகள் என்ற நாடகமும், ஆசியாவிலே பெண்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்றது / மறுக்கப்படவில்லை என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது. இவ் விழாவில் கலந்து கொள்ளுமாறு பிராங்போர்ட் இந்து மன்றம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது.

*பிறேமனில்....*

ஜேர்மன் பிறேமன் நகரில் நவராத்திரி தின விசேட பூசையும், கூட்டுப் பிரார்த்தனையும் 18.10.96 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பிறேமன் இந்து வழிபாட்டுச் சங்கம் நடாத்தும் இப் பூசை வழமையான பிரார்த்தனை மண்டபமான AM SIEK 43 என்ற இலக்கத்தில் இடம்பெறவுள்ளது. அடியார்கள் அனைவரும் தவறாது கலந்துகொண்டு அன்னையின் அருள் பெறுமாறு மேற்படி வழிபாட்டுச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ஜேர்மனி சார்லான்ட் தமிழாலய ஆண்டு விழா

சார்லான்ட் தமிழாலயங்களின் ஆண்டு விழா சார்புறுக்கன் நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மௌன அஞ்சலியைத் தொடர்ந்து மூத்த ஆசிரியையான திருமதி ஜெகநாதனும் செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பாளர் திரு. எங்கவுகம் மங்கள தீபம் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். ஆசிரியை திருமதி. ஜெகதீஸ்வரி இராசரத்தினம் வரவேற்புரை வழங்கினார்.

மாணவர்களின் பேச்சுக்கள், கவிதைகள், குழு நடனங்கள், நாட்டியங்கள், வழக்காடு மன்றம், நாடகம் என்பன சபையோரின் ஆரவாரங்கள் மத்தியிலே தமிழீழ நினைவுகளையும் உணர்வுகளையும் ஊட்டிக் கொண்டிருந்தன. வினாவிடைப் போட்டியின் போது ஜேர்மன் மாணவி செல்லத் தமிழிலே வினாக் கேட்க விடை தந்தமை சபையோரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் பொறுப்பாளர் திரு. இரா நாகலிங்கம் உரையாற்றுகையில் "இன்றைய விழாவிலே தமிழாலயங்களின் உண்மையான செயற்பாடுகளைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இன்று எமக்கு ஒற்றுமை அவசியம். ஒற்றுமை வழிகாட்டல் இன்று இங்கே காண முடிந்தது." என்றார்.

## ஜேர்மனியில் தமிழ்த் திறன் போட்டி

(ஜேர்மனியில் இருந்து வீ.ஆர்.வரதராஜா)

ஜேர்மனி உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் கீழ் இயங்கும் தமிழாலாயங்களுக்கிடையேயான தமிழ்த் திறன் இறுதிப்போட்டி 27.10.96 சனிக்கிழமை 09.30 மணிக்கு Castrop Rauxel நகரிலுள்ள Lang STR 18, Friedhof Nansen Realschule மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜேர்மனி முழுவதிலுமுள்ள 98 தமிழாலயங்களிலும் தமிழ்த் திறன் போட்டிகள் முதலில் நடைபெற்று அங்கு தெரிவான போட்டியாளர்கள் மாநிலப் போட்டிகளில் கலந்து கொண்டனர். மாநிலப் போட்டியாளர்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன.

இங்கு தெரிவுசெய்யப்பட்ட போட்டியாளர்கள் மேற்படி இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள். இறுதிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் விபரங்கள் அந்தந்த தமிழாலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பேச்சு, கட்டுரை, சொல்வதெழுதல், வாசிப்பு, உறுப்பெழுத்து, ஆகியவற்றின் மூலம் மாணவர்களின் தமிழ் மொழியறிவுத் திறன் போட்டிகள் நடைபெறும்.

## நெதர்லாந்தில் கவிதைப் போட்டி

மாவீரர் நாளை முன்னிட்டு நெதர்லாந்து தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும் மாவீரர்நாள் கவிதைப்போட்டி, 'மரணத்துள் தொடரும்வாழ்வு'

**நிபந்தனைகளும் விதிகளும்**

★ போட்டியில் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

★ கவிதைகள் 200 சொற்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

★ கவிதைகள் யாவும் மரணத்துள் தொடரும் வாழ்வு என்ற தலைப்பை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.

படைப்பாளி தன்னுடைய பெயர், முகவரி என்பவற்றை தனித்தாளில் எழுதி அது தமது ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆக்கங்களுக்கு மாவீரர் நாள் விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிக்கான முடிவுத் திகதி **15.11.96**

கவிதைகள் அனுப்ப வேண்டிய முகவரி

TAMIL KUNST EN CULTURELE ORGANISATIE

POSTBUS 343, 1740 AH SCHAGEN

தொடர்புகளுக்கு:

0224 217181, 070 3461963.

## சுவிசில் மாபெரும் நாடகப் போட்டி

தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதிக்காக

சைவத் தமிழ்ச் சங்கம் நடாத்தும்

**'அற்றார் அழிபசி தீர்த்தல்'**

**காலம்: 04.01.1997 சனிக்கிழமை**

HOTEL LIMMAT

Limmat Str-118, 8005 Zurich இல் நடைபெறும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Saiva Thamil Sangam, Wehntaler Str-293, 8046 Zurich.

மேலதிக விபரங்களுக்கு:

089 40 52 209, 01 462 13 49, 01 362 27 55 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

## நெதர்லாந்தில் மாவீரர் வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

தமிழீழ விடுதலைப்புலிகள் நெதர்லாந்துக் கிளையினால் நடாத்தப்படும் மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான ஆறுபேர் கொண் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடைபெற உள்ளன.

காலம்: 16.11.96 சனிக்கிழமை

நேரம்: காலை 9.30 மணி

இடம்: SPORTHAL KINHEIM HOFLANDER WEG BEVERWIJK

பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில்.

மேலதிக விபரங்களுக்கு 0224 217181, 070 3461963 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ்கிளையினரால் நடாத்தப்படும் மண்மீட்பு நிதிக்கான மாதாந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் (I) 9ம் மாதம் புரட்டாதி மாதத்தில் பரிசு பெறும் 100 அதிஷ்டசாலிகளின் பற்றுச் சீட்டு இலக்கங்கள்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 019 | 1008 | 1956 | 2910 | 3821 | 4623 | 5541 |
| 113 | 1016 | 2003 | 2956 | 3891 | 4721 | 5481 |
| 200 | 1118 | 2108 | 2991 | 3900 | 4795 | 5603 |
| 231 | 1212 | 2221 | 3001 | 3963 | 4813 | 5623 |
| 370 | 1321 | 2313 | 3018 | 3992 | 4892 | 5661 |
| 441 | 1445 | 2332 | 3021 | 4016 | 4921 | 5762 |
| 496 | 1451 | 2390 | 3116 | 4101 | 4968 | 5803 |
| 531 | 1482 | 2421 | 3362 | 4116 | 5002 | 5908 |
| 679 | 1541 | 2441 | 3421 | 4266 | 5041 | 5969 |
| 686 | 1550 | 2591 | 3423 | 4321 | 5116 | 5998 |
| 731 | 1602 | 2662 | 3498 | 4386 | 5163 | |
| 732 | 1696 | 2760 | 3602 | 4512 | 5212 | |
| 761 | 1706 | 2801 | 3619 | 4516 | 5338 | |
| 952 | 1739 | 2896 | 3668 | 4538 | 5410 | |
| 992 | 1812 | 2905 | 3742 | 4601 | 5441 | |


## ஈழநாதம், ஈழமுரசம் தமிழ் வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சி



**Zürich, Zug, Schwyz, Luzern, Aarau, Schffhausen**

பிரதி வெள்ளி தோறும் பிற்பகல் 3.00 மணி முதல் 4.00 மணி வரை FM 104.5 MHZ அலை வரிசையில் மேற் குறிப்பிட்ட மாவட்டங்களில் ஈழநாதம் தமிழ் வானொலி ஒலிபரப்பைக் கேட்கலாம்.

**Bern மாநிலம்**

பிரதி சனி தோறும் மாலை 4.00 மணி முதல் 5.00 மணி வரை FM 91.1 MHZ அலை வரிசையில் மேற் குறிப்பிட்ட மாநிலத்தில் ஈழநாதம் தமிழ் வானொலி ஒலிபரப்பைக் கேட்கலாம்.

**Bern மாநிலம் - ஈழமுரசம் - தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**

பிரதி ஞாயிறு தோறும் மாலை 8.00 மணி முதல் 9.00 மணி வரை FM 91.1 MHZ அலை வரிசையில் மேற் குறிப்பிட்ட மாநிலத்தில் ஈழமுரசம் தமிழ் வானொலி ஒலிபரப்பைக் கேட்கலாம்.

Eelanatham, Postfach 1415, 8801 Thalwil

தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் கிளை)

ஈழநாதம் தமிழ் வானொலி ஒலிபரப்பு அமைப்புக் குழு


Tamileelam Archive




# மெய்ப்பொருள் காண்பது அறிவு

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

அண்மைக் காலமாக தங்கள் பத்திரிகையில் 'அறிவு' என்ற பதம் அல்லோல கல்லோலப்படுவதைக் கண்டு கலங்குகின்றேன். வள்ளுவப் பெருந்தகை உயிரோடிருந்திருந்தால் தற்கொலையே செய்யுமளவுக்கு பல வார்த்தைகளைக் கண்டு நொந்துபோய் இக் கடிதத்தை வரைகின்றேன்.

உலகிலே பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, இன, மத, பேதமின்றி உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட திருக்குறளில் அவர் அறிவு பற்றித் தெரிவிக்கையில்,

**"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்**

**அப் பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு"**

எனத் சொல்லி வைத்துள்ளார் என்பதை 'அறிவாளிகள்' என தம்மைக் கருதும் அனைவருக்கும் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மேலும், "எப்பொழுதும் எதிர்க் கருத்துச் சொல்பவர்களே எமது சிறந்த வழிகாட்டிகள்" என்பதையும், எதற்கும், எந்த ஒரு கருத்துக்கும் எதிர்க் கருத்து ஒன்று உண்டு என்பதையும் நாம் எல்லாம் உணர வேண்டும். ஏனெனில் எதிர்க் கருத்துக் கூற விளைபவன் தான் எமது குறைகளை சுட்டிக் காட்டும் சிறந்த வழிகாட்டி. எமது வளர்ச்சிக்கு உதவும் சிறந்த ஊன்றுகோல்.

'ஆமாம் சாமி போடுபவர்களால் நாம் முன்னேற முடியாது. அவர்கள்தான் எமது உழைப்பில் குளிர்காய்வார்கள்.

இறுதியாக "மனிதன் தவறுவதுண்டு, ஏனெனில் அவன் அவதாரம் இல்லைத் தானே" என்பதை நாம் உணர வேண்டும். தவறே இல்லாதவனாக ஒருவன் தன்னை நினைப்பானால் அவர் அவதாரமாக அல்லது அகங்காரம் கொண்டவனாகவே இருக்க முடியும். அகங்காரம் அழிவிற்கே வழி வகுக்கும். வளர்ச்சிக்கல்ல. விமர்சனத்தால் ஒன்றுபடுவோம். விமர்சனத்தை வளர்ச்சிப் பாதையின் திறவுகோலாக்குவோம்.

**"கருத்துக்களை மோத விடுங்கள்**

**மனிதனோடு மனிதன் மோதாதீர்கள்"**

இப்படிக்கு
வாசகன்
சி.ச.மௌ. (பாரிஸ்)

# படிப்பு - படைப்பு - விமர்சகன்

என்னளவில் கல்வி / படிப்பு என்பது ஒரே சமயத்தில் விசயம் அறிவது, ஒரு அரசியல் நடவடிக்கை, அதேவேளை ஒரு கலை நிகழ்வு, கல்வியின் அரசியல் பரிமாணம் குறித்து இனிமேல், நான் பேசப்போவதில்லை. கல்வியின் விசயம் அறியும் பரிமாணம் குறித்து இனிமேல் நான் பேசப்போவதில்லை. அதேபோலவே, கலையின் மூலம் கல்வி கற்பித்தல் என்பது பற்றியும் நான் பேசப்போவதில்லை. இவை அனைத்துக்கும் மாற்றாக நான் சொல்வதெல்லாம் இதுதான்; படிப்பு என்பது அரசியல், படிப்பு என்பது கலை, படிப்பு என்பது அறிதல்.

பாவ்லோ பிரெய்றி

விடுதலைக் கல்வியாளர் / பிறேசில்.

In Politics of Liberation.

விடுதலைக் கல்வி பற்றி தொடர்ந்து பேசிவருபவர் பாவ்லோ பிரெய்ரி. ஒடுக்கப்பட்டவர்களுக்கான கல்வி குறித்த இவரது கருத்தாக்கம் செயல்திட்டம் உலகெங்கும் இருக்கிற கல்வியாளர்களிடம் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கல்வி பற்றிய இருக்கிற வடிவங்களை, நோக்கங்களை, அறுதிகளைக் கேள்வி கேட்பது இவரது அணுகுமுறை.

சுயபடிப்பு, பூர்வீகக் கலாச்சாரத்தின் வேர்களினால் ஆன படிப்பு, திறந்தவெளிக்கல்வி போன்றவை பற்றிச் சிந்திக்கும் மாற்றுக் கல்வியாளர் இவர்.

விடுதலையை விளைகிறவனுக்கு, நிலவுகிற மேற்கத்திய மரபுவழிக்கல்வி, பட்டம், பதவி, மரியாதைகள், ஒரு பொருட்டல்ல. நிலவுகிற படிப்பை உள்வாங்கி மாற்றுப் படிப்பை விளைகிறவனே படிப்பாளி.

கோடிக் கணக்கில் பட்டம் பெற்றவர்கள் / என்ஜினியர்கள் / பேராசிரியர்கள் / கணக்காளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் தம்துறைப்படிப்பை சிருஷ்டிகரமாக எடுத்துச்செல்பவர் எத்தனை பேர்? கல்விக்கூடங்கள் கலைஞர்களை, படைப்பாளிகளை உருவாக்கவில்லை. கல்விக்கூடங்களும், பட்டங்களும் தொழில் நுட்பவாதிகளை, தகவல் சொல்லிகளை மட்டுமே உருவாக்கும். அதனோடு சமூகமாற்றம் பற்றிய கருத்துக்களே படைப்பாளியைத் தரும்.

நம் சமூகத்தில் கல்விபற்றிய பிரம்மைகள் நிறைய மலிந்து கிடக்கிறது. ஒரு துறையில் கலாநிதிப் பட்டமோ பொறியியல் பட்டமோ பெற்றுவிட்டால் அவர் எல்லாத்துறை பற்றியும் கருத்துச் சிந்தத் தகுதியானவர் என்கிற மயக்கம் நம் சமூகத்தில் அதிகம். தமது கல்வி / படிப்பு அதிகாரத்தையும், அகந்தையையும் பிற மனிதரிடமிருந்தான விளக்கத்தையும் ஏற்படுத்துகிறது என்பதை இவர்கள் கவனம் கொள்வதில்லை. இந்தப் பட்டதாரிகள் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பற்றி தமிழ்ச் சூழலில் கா.நா.சு, ஜெயகாந்தன் போன்ற படைப்பாளிகள் கடுமையாக விமர்சித்திருக்கிறார்கள்.

சினிமா ஒரு அனுபவம், ஒரு அரசியல் அனுபவம். தனது விடுதலை பற்றிய விழிப்புணர்வோடு பார்க்கத்தக்க ஒரு அனுபவம். தனது சுய விழிப்புணர்வின் அடிப்படையில் ஒரு படைப்பு பற்றிப் பேச எவருக்கும் தகுதி உண்டு. விடுதலை அரசியலில் ஈடுபட்டவர்க்கு இந்தத் தகுதி உண்டு. ஆனால் சினிமா பற்றிய ஆய்வை மேற்கொள்ளும் போது சினிமா பற்றிய அறிவும் படிப்பும்தான் தேவையேயொழிய, பிற பட்டங்கள் அல்ல. படிப்பு என்பது விடுதலையை விளைகிறவனுக்கு ஒரு தொடர் நடவடிக்கை. அது சமூக அந்தஸ்த்துக்கான, சம்பாத்தியத்துக்கான அங்கீகாரம் அல்ல.

மெட்ராஸ் பிலிம் இன்ஸ்டியூட்டில் படித்த பெரும்பாலானவர்கள் உருவாக்கும் படங்கள் குப்பை. சினிமா பற்றிய ஏட்டுக் கல்வி மட்டும் கலைஞனையோ விமர்சகனையோ தந்து விடாது. அமெரிக்கா சினிமாக் கல்வியகத்தில் கற்ற ஜெரீமா, 'சினிமா பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொள்வது அல்ல' என்கிறார்.

எம் வாழ்க்கையை, எம் அனுபவத்தை, எம் மொழியில் சொல்லத் தொடங்கும் போது புதிய வடிவங்கள் பிறக்கும். அது கோடம்பாக்கம் சினிமா வடிவம் போலவோ, பம்பாய், ஹொலிவூட் சினிமா வடிவம் போலவோ இருக்காது. புதிய கருத்தை, படிப்பை, அறிவை, சினிமாவில் புகுத்துவது பற்றி இனி பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

சினிமாவே புதிதாக, படிப்பாக, அறிவாக ' ஆவது பற்றியே பேச வேண்டும். அப்படிப் பேசும்போது மரபுவழிப் படிப்பாளிகளிடம் கேள்வி கேட்கப்படும். அவர்களுக்கு கோபம் வரும். அத்தகைய கோபம் பிரெஞ்சுத் தமிழ் இயக்குனர்கள் பலருக்கு இருக்கிறது. அது ஆத்திரமாகவும் வெளியாகிறது.

விமர்சகனின் பார்வை குறித்து மாற்றுக் கருத்துச் சொல்வது பிழையான அணுகுமுறை அல்ல. ஆனால் விமர்சகனின் மரபு வழிக் கல்வித் தகுதி குறித்த கேள்விகள் அறியாமையில் விளைவது. படித்தவன், பாட்டைக் கெடுத்தான், எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான் என்றொரு மொழி வழக்கு தமிழில் உண்டு. அது வாழ்வைக் கற்றவன் ஏட்டுக் கல்வியாளனைப் பார்த்துச் சொன்ன விதமாகத்தான் இருக்க வேண்டும்.

அன்புடன்
யமுனா ராஜேந்திரன்

# புலம்பெயர் பத்திரிகைகள் குப்பைத் தொட்டிகளா ?

10.10.96

ஈழமுரசு ஆசிரியருக்கு வணக்கம்

10 ஒக்டோபர் தங்கள் பத்திரிகையில் வெளிவந்திருந்த குமுறல்கள், நக்கல்கள் யாவும் வாசித்தறிந்தேன். பாவம் " அந்த அபிநயன் மீண்டும் தனது வேலிக்கு ஆசைத்தம்பி, பெரியதம்பி, சின்னத்தம்பி, நல்லதம்பி, போன்ற நாலு ஓநாய்த் தம்பிகளைக் கொண்டு மீண்டும் சத்தியெடுக்கத் தொடங்கி விட்டார். மௌனம் படத் தயாரிப்பாளர் என்ற முறையில் அவரிடம் கேட்பது என்ன? அவருடைய அனுபவம், படிப்பு. இஃது புலம் பெயர் சினிமாவுக்கு உதவுமல்லவா? அவர் இவ்வளவு உணர்ச்சி வசப்படும் மனிதரா? மௌனம் படக் கதை, இயக்கம், நடிப்பு, தொழில் நுட்பம் இவைகள் யாவும் ஒரு குப்பை என்றால் தங்கள் பத்திரிகையில் இவ்வளவு இடத்தையும் அநியாயமாக்கி வாசகர்களின் நேரத்தையும் அநியாயமாக்கி, உங்கள் நேரத்தையும் அநியாயமாக்குகின்றீர்கள். இந்த இடத்தில் ஒரு சிறுவர் பகுதி, புலம் பெயர்ந்த மக்களுக்கு ஆக்கபூர்வமான கருத்தைச் சொல்லும் கட்டுரைகள் போன்றவற்றை சிந்தியுங்கள். இந்த 'மௌனம்' இதை விட்டு மௌனமாகவே போய்விடும். விமர்சனத்தை எந்த பக்குவமில்லாத தயாரிப்பாளரின் படிப்பு மௌனத்தில் வெளிச்சமானால், மீண்டும் மௌனத்தைக் கலைப்பது ஏன்?

புலம் பெயர் சினிமா குப்பையாக இருந்தால் புலம் பெயர் பத்திரிகைகள் குப்பைத் தொட்டிகளா? மேலும் எனது அன்பான வேண்டுகோள்! இந்த 5 தம்பிமாரும் தங்கள் சொந்தப் பெயரைப் பிரசுரித்து அவர்களின் சினிமாத்துறை ஈடுபாட்டை, தொழில் நுட்பங்களை வர்ணித்தால் எனது அடுத்த தயாரிப்பான "ஆளவில்லாத ஆடிகள்" சினிமா ஒரு வெற்றிப் பாதையில் படைக்கப்படும் அல்லவா?

மௌனம் தயாரிப்பாளர்
இராசநாயகம் யேசுதாசன்
(பொறியியலாளர்)

*சொந்தப் பெயர் போடுவது முக்கியம் (According to French law)*

# செல்வியனின் அரைவேக்காட்டுத் தனம்

ஈழமுரசு பத்திரிகை ஆசிரியர் அவர்கட்கு,

கடந்த 25.08.96 தினகரன் வாரமஞ்சரியில் செல்வியன் என்பவர் எழுதிய "புகலிட இலக்கியம் எதிர் நோக்கும் பிரச்சனைகள்" என்னும் கட்டுரையில் பாரிசில் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்ட 'முகம்' திரைப்படம் பற்றியும் விமர்சித்திருந்தார். இப்படம் ஜேர்மனியில் திரையிடப்பட்டபோது எனக்கும் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. மேற்படி கட்டுரையாளர் இத் திரைப்படம் குறைந்தபட்ச அகதி வாழ்வைக் கூட படம் பிடித்துக் காட்டவில்லையென்று விமர்சித்திருந்தார். உண்மையிலேயே இந்தப்படத்தை ஆரம்பம் முதலே பார்த்த ஒருவரா என்ற சந்தேகத்தை எனக்கு ஏற்படுத்தியது. இந்தப்படத்தின் இயக்குனர் படத்தின் ஆரம்பத்திலேயே இப்படம் அகதி வாழ்வின் ஒரு சிறு துளி என்றுகூறி விட்டுத்தான் படத்தை முன் வைக்கிறார். அத்துடன் இப்படம் 85 ஆம் ஆண்டு பாரிசிற்கு அகதிகளாக வந்த இளைஞர்களின் அவலங்களை மையமாக வைத்தே எடுக்கப்பட்டிருந்தது.

புலம் பெயர்ந்த நாடுகளில் பல இலட்சம் பேர் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒவ்வொருவர் வாழ்விலும் எவ்வளவோ சம்பவங்களை சந்திக்கின்றோம். எல்லாவற்றையும் இரண்டு மணித்தியாலத் திரைப்படத்தில் எடுத்துக் காட்ட முடியுமா? இப்படம் ஆரம்ப காலத்தில் பாரிசுக்கு வந்த இளைஞர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சனைகளை மிக அழகாக எடுத்துக் காட்டியிருந்தது. ஆகையால் மேற்படி விமர்சகர் நடுநிலையாக நின்று தனது கருத்துக்களைக் கூறவில்லையென்றே நான் கருதுகின்றேன்.

நன்றி

தமிழன்பன்
ஜேர்மனி




# பெண்கள் பல விதம்

## அராஜகத்தின் பிடியில் ஆப்கான் பெண்கள்

கடந்த வாரம் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் வீதியொன்றால் இரு பெண்கள் இஸ்லாமிய விதிக்கமைய முழுமையாக தங்கள் உடல்களை ஆடையினால் மூடிமறைத்தபடி சந்தைக்குள் சென்று கொண்டிருந்தார்கள். ஒருவரின் கைகளில் கைக்குழந்தையொன்று தூங்கிக் கொண்டிருந்தது.

ஆனால் அவர்களது நடையிலே இலம் புரியாத பீதி வேகம் காணப்படுகிறது.

அக் குழந்தை மீதும் ஒரு அடி பட்டிருக்க வேண்டும் அதுவும் வீரிட்டுக் கத்துகிறது.

மனமிரங்காத தலீபன் குழுவினர் ஏக காலத்தில் "வீட்டுக்குள் போய் இருங்கள் பெட்டை நாய்களே" எனக் கூறியபடி அவர்களை அடித்து, வந்த வழியே துரத்திவிட்டார்கள்.

இவ்வாறான சம்பவங்கள் ஆப்கானிஸ்தானில் தற்போது மிக சாதாரணமாக நடைபெற்று வருகின்றன. மதக் கட்



டுப்பாடு என்ற போர்வையில் அச் சகோதரிகளின் மீது நடாத்தப்படும் அராஜகங்கள் முழு உலகையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. பெண்கள் பாடசாலை செல்லமுடியாது. வேலை பார்க்க முடியாது. சுருக்கமாகச் சொல்லப்போனால் முழு ஆப்கானிஸ்தானும் பெண்களுக்கான திறந்தவெளிச் சிறையாகவே மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்களிலும், செய்தி ஊடகத்துறையினரும் கடமையாற்றும் வெளிநாட்டுப் பெண்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல.

ஆனால் அவர்களது துரதிஷ்டம் யாரை எதிர்கொள்ளக் கூடாதென நினைத்திருந்தார்களோ அவர்களின் வாகனம் இரைச்சலுடன் இப் பெண்களுக்கருகில் வந்து நிற்கிறது. அதிலிருந்து ஆயுதம் தாங்கிய தலிபன் குழுவினர் வெளியே குதித்து எவ்வித காரணமுமின்றி அப் பெண்களைத் தாக்கத்தொடங்கினார்கள். அப் பெண்களோ "சகோதரர்களே, ஏன் எங்களைத் தாக்குகின்றீர்கள்" என்ற கேள்வியை அலறியபடி திரும்பத்திரும்ப வினாவுகின்றார்கள்.

பெண்களின் ஆளுமையை ஏற்கத் தவறி, அவர்கள் மீது வன்முறையை பிரயோகிக்கும் செயல் விரைவில் தலிபன் குழுவினருக்கு நல்ல ஒரு பாடத்தினை புகட்டத்தான் போகிறது.

# குளிர்காலத்தில் அதிக வேதனை தரும் மூட்டுவலி

'தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்' என்பது எம்மிடையே பழக்கத்திலுள்ள ஒரு பழமொழி. அதைப்போலத்தான் மூட்டுவலி கொடுக்கும் வேதனையும் வார்த்தைகளில் விபரிக்க முடியாது. புலம் பெயர்ந்து மேற்குலக நாடுகளில் வசிக்கும் சகோதரிகளை கடுமையான குளிர் காலங்களில் இந்த மூட்டுவலி தாக்கும் வேகம் அதிகமானதாகும். மூட்டுவலியின் தாக்கம் அதிகமானால் அன்றாட வாழ்வைக்கூட சரிவர நடத்த முடியாது வேதனை அடைய நேரிடும்.



நமது உடலில் எலும்புகள் இணைந்து மூட்டுகளை உருவாக்குகின்றன. இம் மூட்டுகள் இணையும் இடத்தில் உள்ள சுரப்பியினால் சுரக்கும் நீரும் உராய்வினைத் தடுக்க உதவுகிறது. இம் மூட்டுப் பகுதியைச் சுற்றி தசைநார்கள் பிணைக்கப்பட்டு இருக்கிறது. மூட்டு வலி தோன்றுவதற்கு எலும்பு, சவ்வு, சுரப்புநீர், தசைநார்கள் ஆகியன காரணமாக இருக்கலாம்.

பெரும்பாலாக மூட்டுவலி தோன்றுவதற்கு சவ்வு அழற்சிதான் காரணமாகிறது. சில வேளைகளில் இந்தவகை பரம்பரை பரம்பரையாகவும் கடத்தப்படும். சில நோய் நுண்கிருமிகள் கூட மூட்டுவலியினை ஏற்படுத்துகின்றன. சவ்வைப் பாதிக்கும் மூட்டுவலியில் நாம் சிரத்தையற்று இருந்தோமேயானால் இருதயம் சம்பந்தமான நோய்களைக் கூட தோற்றுவிக்கும். அதிகமாக 40 வயதில்தான் மூட்டுவலி ஆரம்பமாகும் என்றாலும் வயதிற்கேற்ற எடை இல்லாது பருமனாக இருந்தாலோ அல்லது அறுவை சிகிச்சை மூலம் கருப்பையை அகற்றிய பெண்மணிகளுக்கு எலும்புத் தேய்மானம் ஏற்பட்டும் மூட்டு வலி வரலாம்.

மூட்டுப் பகுதிகளில் இருக்கும் மூட்டுநீரில் உப்புத் தன்மை அதிகரித்து இருந்தால் சவ்வு பாதிக்கப்பட்டு மூட்டு வலியைத் தோற்றுவிக்கும். இவ்வாறான வலி முதலில் சிறு சிறு மூட்டுக்களாகப் பாதித்து பின்னர் உடலிலுள்ள சகல மூட்டுக்களுக்கும் பரவும். இந் நோய்த் தாக்குக்கு இலக்கானவர்களுக்கு குளிர் காலநிலை முதல் எதிரியாகும். குளிர்ந்த நீரை உபயோகிப்பது கூட வேதனையை அதிகமாக்கும். இவர்கள் தமது உணவு வகைகளில் மீன், முட்டை, மாமிசம், முருங்கைக்காய், கருணைக் கிழங்கு, உருளைக்கிழங்கு போன்றவற்றை தவிர்ப்பது நலம்.

மலச்சிக்கல், வெள்ளைபடுதல், கருப்பை புண், குடற் கோளாறுகளாலும் இடுப்புவலி, முதுகுவலி தோன்றுவதால் இவற்றுக்கு தற்காலிக நிவாரணமான ஒத்தடம் கொடுத்தல், எண்ணை போட்டுத் தேய்த்தல் ஆகியவற்றில் நம்பிக்கை வைக்காது, உடலியக்கம் முழுமையாக ஆராயப்படும் விதத்தில் மருத்துவ சிகிச்சை பெற வேண்டும். தகுந்த காலத்தில் சிகிச்சை பெறச் செல்வது, அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்வதற்கான அவசியத்தை பெருமளவு குறைக்கின்றதென்றே கூறமுடியும்.

**தொகுப்பு:**
**வர்ஷிகா- வைஷ்ணவி**

## சுவீடன் இளவரசி கணிதத்தில் மந்தமாம்



சுவீடன் நாட்டு இளவரசியான பத்தொன்பது வயதான விக்டோரியா பிரெஞ்சு மொழி கற்பதற்காக அண்மையில் பிரான்சுக்கு வந்துள்ளார். பிரான்சின் மேற்குப் பகுதியிலுள்ள பல்கலைக் கழகத்திலேயே இவர் தனது கற்கை நெறிகளை ஆரம்பித்துள்ளார்.

இளவரசி விக்டோரியா ஏற்கெனவே ஜேர்மன் மொழியிலும், ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றவர். அத்துடன் இலக்கியம், சரித்திரம், விலங்கியல் ஆகியவற்றிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். ஆனால் விக்டோரியாவிற்கு ஒத்து வராத துறை கணிதம் என்று வெளிப்படையாகவே விக்டோரியா ஒத்துக்கொள்கிறார்.

கணித பாடத்தில் இவர் சிறு வயதிலிருந்தே கொஞ்சம் மந்தமானவர் என பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டுள்ளன.

2000-ம் ஆண்டிற்குப் பின்னர் ஐரோப்பாவில் இருக்கக் கூடிய ஒரே ஒரு அரசி விக்டோரியா என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.

KANNA Imports & Exports Ltd.
(New Ambiha Super market)
198 Archway road, London N6 5B13 (Archway கோவிலுக்கு அருகாமையில்)
இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான, உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும்
மலிவாகவும் விரைவாகவும் உங்கள் வியாபார நிலையங்களுக்கு (ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும்) விநியோகிக்கப்படும்
தொடர்புகளுக்கு: Tel: & Fax: 0181-348 3356
(ADV)

# சாளரம்

# வாழ்வும் காதலும்

ஒரு பால் நிலா
ஒரு கண்சிமிட்டும் நட்சத்திரம்
ஒரு ரம்மியமான அந்தி
ஏன்,
ஒரு ரோஜா
ஒரு மழைக்காலப் பொழுது
ஒரு இசையின் தாலாட்டு
இன்னும்,
ஒரு குழந்தையின் புன்னகை
ஒரு குறும்புத்தனம்
ஒரு ஆர்ப்பரிப்பு
இன்னுமின்னும்,
ஒரு பெண்ணின் நேசம்
ஒரு அன்பான அரவணைப்பு
ஒரு உன்னதமான காதல்
- எல்லாம் எவ்வளவு அழகானவை.

உலகில் உயிர்கள் என்று தோன்றியதோ, அன்றே காதலும் தோன்றியிருக்க வேண்டும். நேசம் கொள்ளாத மனிதர்கள் இன்றுவரை எங்காவது இருக்கிறார்களா? இரண்டு மாடப்புறாக்களும், இரண்டு மான்களும் ஒன்றிலொன்று மயங்கிக் காதல் கொள்ளும் போது, மனிதர்களாகிய நாங்கள் மட்டும் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்?

மனிதர்களது பருவகாலங்களின் வசந்தப்பாடல் தான் காதல். இயற்கையின் சிருஷ்டிப்புக்களில் ஆண் - பெண் என்ற தத்துவத்தின் விளைவாகவும், அவற்றின் வாழ்வுக்கும் வளத்திற்கும் அடிப்படையாகவும் அமைவது காதல்.

உலக இலக்கியங்களில் மிகச் சிறந்ததாகவும், அழகானதாகவும் சொல்லப்படும் நூல்களிலெல்லாம் காதலையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஏன், ஒரு தனிமனிதனது காதல், மனித சரித்திரத்தையே மாற்றிவிடுகிறது. தோல்வி பெற்ற காதல்கள் சிறந்த காவியங்களானதும், அவர்கள் மரணத்தினை தழுவிய பின்னரும் இன்றும் சரித்திரத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதும் நாம் அறியாததல்ல.

ஷாஜகான் காதலைக் கண்டான்
தாஜ்மகால் படைத்தான்
ஷேக்ஸ்பியர் காதலைக் கண்டான்
ரோமியோ - ஜூலியட் படைத்தான்
பாரதி காதலைக் கண்டான்
'கண்ணம்மா என் காதலி' படைத்தான்

நாட்டார் இலக்கியங்களில் கூட காதல் பாடல்கள் முக்கிய இடம் பெறுவதினை நாம் காணலாம். பொதுவாக, எல்லா மொழிகளிலும், எல்லா சமூகத்தவர் மத்தியிலும் இத்தகைய பாடல்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. அந்தளவுக்கு, காதலென்பது நம் வாழ்வோடு ஒன்றித்துப் போயிருக்கிறது.

உலகில் இன்றுவரை காதல் கொள்ளாத மனிதரே இல்லை எனச் சொல்லுமளவுக்கு ஆதாம், ஏவாள் தொடங்கி எல்லோரும் இக்காதலை உயிராக எண்ணி வருகின்றோம். அப்படித்தான் நாட்டுப்புறமக்களும். காதல் உணர்வால் அவர்கள், தாம் பாடும் பாடல்களின் மூலம், தங்களை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

இங்கே, வகைக்கொன்றாகச் சில உதாரணங்களைத் தருகிறேன். தலைவியின் கூற்றாக அமையும் கீழ்வரும் பாடல் அவளது ஆசைகளையும், அச்சங்களையும் வெளிப்படுத்துகின்றன.

மறந்திரு மறந்திருன்னு
மனுசரெல்லாஞ் சொல்லுறாக
மல்லிகைப்பூ வாசத்தை
மறக்கமனம் கூடுதில்லை

இவைகளைவிட, காதலனும் காதலியும் சந்தித்து தங்களுக்குள் உறவாடிக் கொள்வது போன்று அமைந்த பாடல்களும் உண்டு.

காதலன்: முத்துப்போல் பல்லழகி
முகங்கோணா சொல்லழகி - என்னைக்
கண்டாக் கசக்குதோடி
கருத்து ஒண்ணு ஆன பின்னே.
காதலி: கண்டால் கசக்காது
கருத்துள்ள அத்தானே - நான்
ஊரார் நகைக்கஞ்சி
ஒடுகிறேன் வெகு தூரம்.

இன்றைய கவிஞனோ உலக தத்துவங்கள் முழுவதையும் காதல் வாயிலாக விளக்கி அழியாத சித்திரத்தினைத் தீட்டிவிடுகின்றான். அவன் இங்கே உணர்ச்சி வழியைப் பின்பற்றுகின்றான். இந்த உணர்ச்சி வழியோடு, அவனது அறிவுத்திறனும் சேர்ந்து ஒரு அழகான ஓவியத்தினைத் தீட்டிவிடுகிறான். இத்தகைய காதல் ஓவியத்தில் பாரதி, ஷேக்ஸ்பியர், ஆங்கியக்கவி ஷெல்லி முதல் இன்று வைரமுத்து வரை பலர் வர்ணம் தீட்டியிருக்கிறார்கள்.

காதலன் - காதலி இவர்களின் உணர்ச்சியும், உயிரும் ஒன்றுதான், பிரிக்கமுடியாது என்பதை பல கவிஞர்கள் பலவிதமாய் வர்ணித்திருக்கிறார்கள். ஆனால், மகாகவி

பாரதியின் 'கண்ணம்மா என் காதலி' யில் வரும் "பாயுமொளி நீ எனக்கு, பார்க்கும் விழி நானுக்கு" எனத் தொடங்கும் பாடலில் உள்ள அழகினை வேறெந்தப் பாடல்களிலும் காணமுடிவதில்லை.

"பாயுமொளி நீ எனக்கு - பார்க்கும் விழி நானுனக்கு
தோயுமது நீ எனக்கு - தும்பியடி நானுனக்கு
வாயுரைக்க வருகுதில்லை - வாழி நின்றன் மேன்மையெல்லாம்
தூயசுடர் வானொளியே - சூறையமுதே கண்ணம்மா!"

எவ்வளவு அழகு, எவ்வளவு அழகான ஒப்பீடு. பாய்கின்ற ஒளியாகவும், பார்க்கின்ற விழியாகவும் இரண்டு ஆத்மாக்கள் வார்த்தைகளினால் இலகுவில் சொல்ல முடியாத இந்தக் காதல் உணர்வை பாரதியார் ஒன்றுக்கொன்று இன்றியமையாத இணைப்புக்கள் மூலம் எவ்வளவு அழகாகப் பாடியுள்ளார்.

கருத்தினைச் சரியாக வெளிப்படுத்தாத வார்த்தைகளினால் பயனேது? எனவே ஒரு கருத்தினை வெளிப்படுத்த சரியான வார்த்தைகள் அவசியம். அந்த வார்த்தைகளை அற்புதமாகப் பாரதியார் கையாண்டிருப்பதினை பாடலின் ஒவ்வொரு வரியிலும், அதில் தெரியும் அழகிலும் நாம் காணலாம்.

'வெண்ணிலவு நீயெனக்கு - மேவுகடல் நானுனக்கு
பண்ணு சுருதி நீயெனக்கு - பாட்டினிமை நானுனக்கு'

பாருங்கள். அழகுக்கு அழகு கொடுக்கும் அழகான வரிகள். நிலவினழகு முழுவதையும் நாம் ரசிக்க வேண்டுமானால் அது பல்லாயிரக் கணக்கான பிம்பங்களாகச் சிதறிக் கடலலைகளின் நடுவில் நடனமாடும் போதுதான் பார்க்க முடியும். நிலவின் வருகையை நோக்கி மகிழ்ச்சியுடன் பொங்கியெழும் அலைகளில்தான் அழகு முழுவதும் நம் கண்களுக்குத் தெரியும். அப்படித்தான். மனிதக் குரலின் இனிமையோடு சுருதியும் சேர்ந்து ஒலித்தாற் தான் பாட்டின் சக்தி முழுவதும் வெளிப்படும். குரலின் இனிமையும், சுருதியும் ஒன்று சேரும் போது தான் மகிழ்ச்சி என்பது கிடைக்கும்.

"காதலடி நீ யெனக்கு - காந்தமடி நானுனக்கு
வேதமடி நீ யெனக்கு - வித்தையடி நானுனக்கு"

என்ன அழகான வரிகள்.. என்ன அழகான கற்பனை.

காதல் இரண்டு ஆத்மாக்களைப் பிணைக்கும் ஒரு சக்தி என்பதனை உயிருக்குக் காதலையும், உலோகத்திற்குக் காந்தத்தினையும் இணைப்பு சக்தியாக பாரதியார் ஒப்பிடுவதன் மூலம் இயற்கையின் இணைப்புக்களையும் நம்மோடு அழைத்து வருகிறார். இங்கே பாரதி தன்னையும் ஒரு இயற்கையின் பகுதியாகக் கருதி, ஒரு மனித சமூகத்தின் உணர்ச்சி வெளியீட்டை அவர் காணமுயலும் போது தன்னைச் சுற்றியுள்ள இயற்கையிலும் அந்தவுணர்ச்சியின் பிரதிபலிப்பினைக் காண்கிறார்.

ஆம்.. நேசமென்பது இதயத்தின் குரல்
எமது இதயத்தின் ஆழமான பகுதியிலிருந்து
நட்பாகவும், பாசமாகவும், காதலாகவும்
ஒலிக்கின்ற குரல்
அது
எங்களுக்கு காலையிலும் கேட்கும்;
இரவிலும் கேட்கும்
ஒரு கவிதை

காதலென்பது பொய்யானால்
மார்க்ஸ், ஜென்னிக்கு எழுதிய கடிதங்களும்
நான் என்னவளுக்குச் சொன்ன வார்த்தைகளும்
இன்று வரை
எப்படி ஜீவிதம் கொள்ளும்?
சூரியவொளி பூமியை முத்தமிடுகிறது
மலைகள் ஆகாயத்தினை முத்தமிடுகின்றன.
அலைகள் ஒன்றினையொன்று அணைக்கின்றன
நீர் ஊற்றுக்கள் நதியுடன் கலக்கின்றன
நதிகள் சமுத்திரத்தினை சேருகின்றன
நாம் மட்டும் எப்படித் தனித்து..?
ஆம்..இந்தவுலகில்
எதுவும் வேறாகப் பிரித்து நிற்கவில்லை,
அப்படித்தான்
நமது வாழ்வும், காதலும்.

தொகுப்பு: வர்மன்

மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது
இங்கில்லை
N°: 199, The BROADWAY,
Southall, Middx.
T.P: 0181 / 813 9126
(ADV)

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL,
MIDDLESEX, UBI 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
- FAX: 0181-606 9709
(ADV)

இலண்டனில் நகைத்
தெரிவுகளுக்கு...
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY,
MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859,
0181-902 0577
FAX: 0181- 903 4887
(ADV)

# பத்தோடு பதினொன்று

## மனித நாகரிக சரித்திரத்தை மாற்றியமைக்கத் தூண்டும் அவுஸ்திரேலிய கற்குகை ஓவியங்கள்

அண்மையில் வட அவுஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்ட குகை ஓவியங்கள் உலக மானுடவியல் நாகரிகம் சம்பந்தமாக இது வரை இருந்து வந்த நிலைப்பாட்டை முற்றாக மாற்றியமைக்கத் தூண்டியுள்ளன.

கடந்த வருடம் பிரான்சில் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்களே இது வரை மனிதனால் வரையப்பட்ட ஓவியங்களில்



மிகப் பழமையானவை எனக் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இப்போது வட அவுஸ்திரேலியாவில் கண்டு பிடிக்கப்பட்ட ஓவியங்களே அவற்றை விட இரண்டு மடங்கு அதிக வயதுடையவை என புதை பொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

மனிதனது கலைத் திறமை என்பது 100,000 ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவில் இருந்து பரவிய Homo Sapiens எனும் நவீன மனித நாகரிகத்துக்குப் பின்னே ஆரம்பமாகியது என்பதே சரித்திர ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். அவர்களது கூற்றின்படி அவுஸ்திரேலியாவிற்கு மக்கள் வந்து 60,000 வருடங்கள் ஆகின்றன. ஆனால் தற்போதைய கண்டுபிடிப்புக்களால் சில புதிய தகவல்கள் சொல்லப்படுகின்றன. அதாவது Homo Sapiens எனப்படும் நவீன மனிதர்களது வருகைக்கு வெகு காலத்துக்கு முன்னரேயே அவுஸ்திரேலியாவில் அபரோஜினல் ஓவியக் கலைஞர்கள் வாழ்ந்திருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

அண்மையில் அவுஸ்திரேலிய Woollongong பல்கலைக்கழக புதைபொருள் ஆய்வாளர்கள் சரித்திர சான்றுகளை வட அவுஸ்திரேலியாவில் தேடிக் கொண்டிருந்த போது ஒரு பாரிய பிரதேசத்தில் பாறைகளிலும், குகைச் சுவர்களிலும் ஓவியங்களும், கல் வேலைப்பாடுகளும் காணப்பட்டுள்ளன. அத்துடன் கருவியின் காலம் 176,000 வருடங்கள் என்றும் மன் 116,000 வருடங்களுக்கு முன்னையது என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் ஓவியங்கள் 75,000 வருடங்களுக்கு முந்தியவை என்றும் அவற்றில் கங்காரு மிருகங்களும் வேறு பல மிருகங்களும் காணப்படுகின்றன. இந்த குகை ஆய்வு பற்றிய முழு விபரங்களும் இவ் வருட இறுதியில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட இருப்பதாகவும், ஆனால் தொடர்ந்து பல வருடங்களுக்கு இது பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிவரும் என்றும் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

## விமானங்களையும் ஏமாற்றும் டாங்கிகள்

ஒரு மரபுவழி யுத்தத்தில் ஈடுபடும் இராணுவத்துக்கு பெரும் உதவியாக இருப்பது டாங்கியே. இன்றைய டாங்கிகளின் தொழில்நுட்பத்துக்கு வயது எண்பதாகும். அதாவது முதலாவது இயந்திரமயமான டாங்கி 80 வருடங்களுக்கு முன்னர்தான் முதலாம் உலகப் போரின் போது அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று பாவனையிலுள்ள யுத்தத் டாங்கிகள் மிகவும் பாரமானதாகவும் செலவு மிகுந்ததாகவும் உள்ளன. சாதாரணமாக ஒரு டாங்கி 70 தொன்கள் நிறையைக் கொண்டது. நான்கு உறுப்பினர்களால் இயக்கப்படும் இதன் டீசல் இயந்திரங்களுக்கு மைல் ஒன்றுக்கு 2.5 கலன் டீசல் தேவைப்படுகிறது. அத்துடன் யுத்த காலங்களில் விமான, ஏவுகணைத் தாக்குதல்களுக்கு இவை வெகு விரைவில் அகப்பட்டுக் கொள்கின்றன.

இவற்றையெல்லாம் யோசித்த பிரிட்டனின் பிரபல டாங்கி நிறுவனமான 'விக்கர்ஸ்' ஸ்தாபனம் இந்த எண்பது வருட தொழில் நுட்பத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி டாங்கித் தொழிற்பாட்டை இலகுவாக்கி 21-ம் நூற்றாண்டுக்கான புதியதொரு டாங்கியைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந் நிறுவனத்தின் பொறியியலாளர்களால் திட்டமிடப்பட்டுள்ள டாங்கிகள் ஒருவித பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்படும். அதேவேளை எடையோ 15 தொன்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் இன்றுள்ள டீசல் இயந்திரங்களுக்குப் பதிலாக மின்சார இயந்திரங்கள் மாற்றப்படவுள்ளன. இதன் பீரங்கிகள்கூட மின்சார முறையினால் இயக்கக் கூடியவாறே வடிவமைக்கப் படவுள்ளதுடன் இப்போதைய தூரத்தை விட, புதியவை இரட்டிப்பான தூரம் சுடக் கூடியவையாக இருக்கும். இத்தப் புதிய பிளாஸ்டிக் வடிவமைப்பின் காரணமாக இந்த டாங்கிகள் விமானக் குண்டுகளில் இருந்தும் தப்பிக்கக் கூடியதாய் இருக்கும்.

தற்போது இத் டாங்கித் தயாரிப்புத் திட்டம் பரிசீலனையில் இருந்தாலும் முதலாவது பரீட்சார்த்த டாங்கி தயாரிக்க இன்னும் பத்து வருடங்கள் எடுக்கும். ஆக 2050-ம் ஆண்டளவில் இவை இராணுவங்களில் சாதாரணமாகக் காணப்படலாம் என பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



## புதிய அறிமுகம்

திரைப்படங்களை கசெட்டின் மூலம் பார்த்து எமது மக்களுக்கு அலுத்துப்போய்விட்டதன் காரணமாக அடுத்த கட்டமாக 'லேசர் டிஸ்க்' எனும் வடிவில் அவை மாற்றப்பட்டு வெகு துல்லியமான படங்களுடனும் இசையுடனும் பார்க்க முடிந்தது. இதே காலத்தில்தான் சிறிய கையளவு தொலைக்காட்சியும் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் திரைப்படங்கள் 'வீடியோ சிடி' எனும் சிறிய அளவிலான டிஸ்க்குகளில் பதிவு செய்யப்பட்டதை இன்று இந்த வீடியோ சிடி கருவியும், சிறிய திரையும் இணைந்த கருவியொன்றை 'தாய்வான்' நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது. 'Disc Baby' என அழைக்கப்படும் இந்தக் கருவி மின் கலங்கள் மூலமாகவோ அல்லது நேரடி மின்சாரம் மூலமாகவோ இயங்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.




# ORIENT TEXTILIEN & SCHMUCK

KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836

* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம் சிங்கப்பூர் விலையில் S D 158,
* ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி DM79; மைசூர் சில்க் DM85; பட்டபிளை சாறி DM25; குப்தா சாறி DM25; பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கன, தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள் , * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் DM 119, * உங்கள் பழைய பவுணிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்!

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

ஈழமுரசு
Eelamurasu Weekly

# தன்வினை தன்னைச் சுடும்

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் புலிகள் என்று சந்தேகிக்கும் அளவுக்கு சிறீலங்காவில் இன்று நிலைமை சீர்கெட்டுப் போயுள்ளது. படையினரதும் பொலிசாரினதும் நடவடிக்லைககளும் அணுகு முறைகளும் முன்னைய தமிழ் தீவிரவாத இயக்கங்கள் ஜனநாயகப் பாதைக்கு திரும்பியதை அவமதிக்கும் வகையில் அமைந்திருக்கின்றது என்று புளொட்டும், ஈ.பி.டி.பியும் சென்றவாரம் கூட்டாக கவலை தெரிவித்து அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

சென்றவாரம் திருக்கோணமலையில் இத் தமிழ்க் குழுக்களின் அலுவலகங்கள் படையினரால் சோதனையிடப்பட்டதைத் தொடர்ந்து, தாம் ஜனநாயக தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கு தடையாக இருக்கின்றதாக இவர்கள் ஒப்பாரி வைத்துள்ளனர்.

இந்த தமிழ் குழுக்களின் கடந்தகால நிகழ்கால செயற்பாடுகளை அவதானித்து வருபவர்களுக்கு இவர்களது இந்த அறிக்கை ஆச்சரியம் தரும் ஒன்றல்ல. தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதமயப்படுத்தப்பட்ட காலத்தில் புற்றீசல் போல் கிளம்பிய பல இயக்கங்களுள் இவர்களும் அடங்குவர். குறிப்பிட்ட கால எல்லைக்குள் கொள்கை பற்றிய தெளிவு, போராட்டம் பற்றிய சிந்தனை, நடைமுறைப் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் அணுகுமுறை, சிறீலங்கா – இந்திய ஆட்சியாளர்களிடம் விலை போன நிகழ்வுகள் போன்றவற்றால் இக் குழுக்கள் மிக விரைவிலேயே தமிழீழ விடுதலை என்ற இலட்சியத்தை கைவிட்டு விட்டு, போராளிகளாக தம்மை இனம் காட்டிக் கொண்டிருந்தவர்கள் கூலிப்படைகளாக தம்மை மாற்றிக் கொண்டனர்.

எந்த அடக்குமுறைக்கெதிராக இவர்கள் போராட எத்தனித்தார்களோ, எந்த மக்களுக்கு விடுதலை வேண்டும் என பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் முழங்கினார்களோ அந்த மக்களின் விடுதலைக்கே இவர்கள் விரோதிகளாய், கொலைகாரர்களாய் மாறிப் போனார்கள். ஆயினும் தமிழீழ விடுதலைப் போராட்டமானது தற்காலிகப் பின்னடைவுகளைக் கடந்து வரலாற்றை முன்னோக்கியே நகர்த்தி வருகின்றது.

சிறீலங்கா அரசுக்கும் படைகளுக்கும் ஆதரவாக செயற்பட்டு, அரசின் படையாகவே தம்மை மாற்றிக் கொண்டுள்ள இக் குழுக்கள், இந்திய ஆக்கிரமிப்பின் போது இந்தியப் படைகளுடன் இணைந்து தமிழின வேட்டையில் ஈடுபட்டதையும் பின்னர் அவர்களில் கணிசமானோர் இந்திய இராணுவத்தின் பின்னால் இந்தியாவுக்கே சென்று அங்கும் கொள்ளை கொலைகளில் ஈடுபட்டும் வருகின்றனர். இவர்களில் ஈ.பி.டி.பி, புளொட், ரெலோ போன்ற குழுக்கள் தாம் விடுதலைப் போராட்டத்தை கைவிட்டு விட்டதாக சிறீலங்கா அரசுக்கு சத்தியம் செய்து கொடுத்து விட்டு ஐந்து பத்து வாக்குகளில் பாராளுமன்ற நாற்காலிகளில் பதவி சுகம் அனுபவித்துக் கொண்டு வருகின்றனர். தாமே தமிழ் மக்களின் தலைவர்கள் என தம்மைத்தாமே கூறிக் கொண்டும் இவர்கள் வடக்கு, கிழக்கில் இராணுவத்துடன் இண்ணந்து தமிழினப் படுகொலைகளை நடாத்தி வருவதுடன் கொழும்பிலும் தமிழ் மக்கள் மீதான அச்சுறுத்தல்களுக்கு பெரிதும் துணை போய்க் கொண்டிருந்தனர். சென்ற ஆண்டுகளில் கொழும்பு ஆற்றில் மிதந்த சடலங்களுக்கும் இவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது.

குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்தபின் இடைக்கால நிர்வாகம் ஒன்று தமது தலைமையில் அமைக்கப்பட வேண்டுமென்ற இவர்களது விருப்பத்தை அரசு நிராகரித்துள்ளது. தற்போது இவர்களது அலுவலகங்கள் சோதனையிடப்படுகின்றன. விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதனால் நம்பியவர்களே தம்மை நட்டாற்றில் கைவிட்டு விட்டதாக இந்த ஓநாய்கள் ஒப்பாரி வைக்கத் தொடங்கியுள்ளன. ஜனநாயகம் மனித உரிமைபற்றி அளவுக்கதிகமாகத் பேசத் தலைப்படுகின்றார்கள். உண்மையில் அவற்றின் அர்த்தம் இவர்களுக்குத் தெரிந்திருக்க எந்த நியாயமும் இல்லை. அந்த அநியாயங்களுக்கு இவர்கள் தெரிந்தும் துணைபோனவர்களே. இப்போது அதே அநியாயங்கள் இவர்களையும் துரத்துகின்றன. தன்வினை தன்னைச்சுடும் என்பது இதுதான் போலும்.

# சிறீலங்காவில் செய்தித் தணிக்கை நீக்கம்

(கொழும்பு)

வடக்கிலும் கிழக்கிலும் படையினர் அடைந்துவரும் தொடர்ச்சியான தோல்விகளையும் பாரிய இழப்புக்களையும் மூடி மறைப்பதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட உள்நாட்டுச் செய்தித் தணிக்கை கடந்த 8.10.96 செவ்வாய் முதல் நீக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா அரசாங்கம் இந்தச் செய்தித் தணிக்கையை பயன்படுத்தியே யாழ்ப்பாணக் குடாநாடு தொடர்ந்து தமது முழுமையான கட்டுப்பாட்டிலேயே இருப்பதாகவும், புலிகளின் முதுகெலும்பை தாம் முறித்துவிட்டதாகவும் தினசரி நூற்றுக் கணக்கான விடுதலை புலி உறுப்பினர்களை தமது படையினர் அழித்து வருவதாகவும் தென்பகுதியில் பிரச்சாரம் செய்து வந்தது. சிறீலங்காவிலுள்ள அனைத்து செய்தி ஊடகங்களும் அரசாங்கத்தின் இராணுவத் தகவல் பிரிவால் தயாரித்து வழங்கப்பட்ட யுத்த முனைச் செய்திகளையும் படங்களையுமே வெளியிட்டு வந்தன.

மாபெரும் முல்லைச் சமர் நடந்த போது கூட அரசாங்கம் இந்தச் செய்தித் தணிக்கையை வைத்தே உண்மை நிலையை மக்களுக்கு மூடி மறைத்திருந்தது. சமீபத்தில் நடைபெற்ற கிளிநொச்சித் தாக்குதலில் ஏற்பட்ட பாரிய இழப்புக்களை கூட அரசாங்கம் மூடி மறைத்து, அத்தாக்குதல் தமக்கு ஒரு பாரிய வெற்றி எனக் கூறி வந்தது.

தற்போது இந்தத் தணிக்கை எடுக்கப்பட்ட பின் முதல் வேலையாக முல்லைத்தீவு தாக்குதல் தொடர்பாக தம்மால் அக்காலத்தில் எழுதப்பட்டு அரசாங்கத்தால் தணிக்கை செய்யப்பட்ட கட்டுரைகளையும் ஆய்வுரைகளையும் கொழும்பு ஆங்கில சிங்கள பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு வெளியிட்டுள்ளன. அடுத்த வாரம் கிளிநொச்சி தாக்குதலில் அரச படைகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விபரங்களும் வெளியே வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, என்னதான் செய்தித் தணிக்கை நீக்கப்பட்டபோதிலும் யுத்தப் பகுதிகளுக்கு பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக சென்று செய்தி சேகரிக்கத் தடை இருக்கும் வரையில் முழுமையான உண்மை விபரங்கள் வெளியே வரப்போவதில்லை என்றும், அப்படி அந்த தடையும் நீக்கப்பட்டால் கூட சிங்களப் பேரினவாதத்தில் ஊறிப்போன கொழும்புப் பத்திரிகையாளர்கள் அங்குள்ள மக்களின் அவலங்கள், அவர்களது போராட்டத்தின் நியாயத் தன்மை பற்றியெல்லாம் எழுதப்போவதில்லை என்றும் தற்போது அரசாங்கத்துக்கும் தங்களுக்கும் இடையேயுள்ள பலப் பரீட்சையின் அடிப்படையிலேயே தணிக்கைக் காலச் செய்திகளை பேரினவாதக் கொழும்புப் பத்திரிகைகள் போட்டி போட்டுக்கொண்டு வெளியிட்டு வருகின்றன என்றும், மூன்று மாதத்திற்கு அரசாங்கம் இவர்களைக் கண்டுகொள்ளாவிட்டால் தணிக்கை இல்லாமலே அரசாங்கத்துக்குச் சார்பான வடக்கு கிழக்கின் உண்மை நிலைக்கு மாறான செய்திகளையே இவர்கள் வெளியிடுவார்கள் என்று கொழும்பிலுள்ள மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கொலக்கோஸ்ட் பாணியிலான வவுனியா திருமலை அகதிகள் ரயில்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஐரோப்பா எங்கும் நாசிகள் ஆக்கிரமிப்புச் செய்திருந்த இரண்டாம் உலகப் போர் காலப் பகுதியில் அப்பாவி யூத மக்களை வதை முகாம்களுக்கு நரக ரயில் மூலம் அனுப்பிய நாசிகளின் செயல் போல வவுனியாவில் தங்கியிருந்த தமிழ் மக்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்காக மூடி அடைக்கப்பட்ட ரயில் பெட்டிகளில் படையினர் திருமமலை அனுப்பியுள்ளனர்.

மூன்று பழைய ரயில் பெட்டிகளை தெரிவு செய்த படையினர் அதனுள் கொள்ளக் கூடிய மக்களின் தொகையை விட பல மடங்கான மக்களை துப்பாக்கி முனையில் மிரட்டி ஏற்றியுள்ளனர். காற்றோட்டம் ஏதுமற்ற நிலையில் இப் பெட்டிகள் காணப்பட்ட போதும் படையினர் ஈவிரக்கமின்றி ஜன்னல்களையும், கதவுகளையும் மூடி, பூட்டு போட்டு விட்டுத்தான் போக்குவரத்து நடைபெறுகின்றது. மக்கள் நெருக்கம் காரணமாக இப்பெட்டிகளில் வெப்பம் அதிகரிக்கவே குழந்தைகள் வீரிட்டழும் நிலையில் பெட்டிகள் பூட்டப்பட்ட நிலையில் இம் மக்கள் திருமலை வரை அடைக்கப்பட்டே கொண்டு செல்லப்படுகின்றனர். ஒரு நகரும் நரகமாக இப்பெட்டிகள் இருப்பதாக பிரயாணி ஒருவர் தெரிவித்துள்ளார். எந்த ஒரு தரிப்பிடத்திலும் இறங்க அனுமதிக்கப்படாத நிலையில் இறுதியில் திருமலையை அடைந்த இப் பிரயாணிகள் தற்போது உப்பு வெளியில் உள்ள கண்ணாடித் தொழிற்சாலையில் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# கிளிநொச்சி விஞ்ஞான நிலைய நூலகம் தீக்கிரையாகியது

சத்ஜய இராணுவ நடவடிக்கையின்போது பெறுமதியான ஆய்வு நூல்களைக் கொண்டிருந்த கிளிநொச்சி விஞ்ஞான நிலைய நூலகம் படையினரால் தீ வைத்துக் கொழுத்தப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் கூர்மதி நுட்பத்திற்கு அவர்களின் கல்வி அறிவே காரணம் என, சிறிலங்கா பேரினவாத அரசுகள் காலம் காலமாக தமிழர்களின் கல்வியினை நசுக்க நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர். இந்த வகையில் தமிழர்களின் அரிய பொக்கிசமான யாழ் நூலகம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் சிறில் மத்யூ தலைமையிலான சிங்களக் காடையரினால் தீவைத்து அழிக்கப்பட்டது தெரிந்ததே. தற்போதும் படையினர் இவ்வாறான செயல்களில் தமிழ் பிரதேசங்களில் ஈடுபட்டு வருகின்றனர். சத்ஜய நடவடிக்கையின்போது விஞ்ஞான நிலைய நூலகத்திற்குள் புகுந்த படைப் பிரிவொன்று அதனை தீயிட்டுக் கொழுத்தியுள்ளது. இந் நூலகத்துள் இருந்த நூல்கள் யாவும் பொது மக்களால் ஏற்கனவே பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டு விட்டன எனக் கூறப்பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதப் படுத்த முடியவில்லை.

# இந்தியக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படை அத்துமீறல்

தனுஷ்கோடிக்கும் கச்சதீவுக்கும் இடையில் உள்ள இந்தியக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையினர் அத்துமீறிப் பிரவேசித்து அட்டகாசம் புரிந்து வருவதாக தமிழ மீனவர்கள் தமிழக அரசிடம் புகார்செய்துள்ளனர்.

கடந்த வாரம் இராமேஸ்வரம் பாம்பனைச் சேர்ந்த மீனவர்கள், கூட்டமாகச் சேர்ந்து கச்சதீவுக்கு சமீபமாகவுள்ள இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த சிறீலங்காக் கடற்படையினர் அவர்களை நோக்கி முதலில் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதில் ஒரு மீனவர் காயமடைய ஏனையோர் கடலில் குதித்து தப்பித்துக் கொண்டனர்.

பின்னர் அந்த மீன்பிடி வள்ளங்கள் இருந்த பகுதியை சுற்றி வளைத்து தமிழக மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் வலைகளையும் சேதப்படுத்தியதோடு அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் கடலில் வீசியதுடன் கடலில் நீந்திக் கொண்டிருந்த மீனவர்களை சுட்டுவிடுவோம் எனவும் மிரட்டியதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

# வீர அஞ்சலி

## 90-ம் நாள் நினைவலைகளில்

தாயின் மடியில் மழலையாக: 27.05.1975



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தாயக மண்ணில் வித்தாக: 19.07.1996

# கரும்புலி மிதுபாலன்

## (வேதாரணியம் ஜெயகாந்தன் - சங்கானை)

முல்லைப் பெருஞ்சமரில் திருமலையில் இருந்து படையினருடன்
வந்த 'ரணவிரு' கப்பலை
மூழ்கடித்த கரும்புலி
மாவீரனே!
'விலைமதிப்பற்ற உயிர்த் தியாகத்தால் கிடைப்பதுதான் சுதந்திரம்'
என்ற உனது இறுதி "நெருப்பு வரிகள்"
நிச்சயம் எம் அன்னை மண் விடுதலை பெறும்!
அதில் உங்கள் கல்லறை நிமிர்ந்தெழும்!

*தகவல்:*
திருமதி. துரோணாச்சாரியார் (சகோதரி)
செல்வன் ஜெயதாசன் வேதாரணியம்
*(சகோதரர்)*

ஜேர்மனி

# சிறிலங்கா அரச விருந்தைப் புறக்கணித்த கிழக்குத் திமோர் நிதியமைச்சர்

(கொழும்பு)

வெளிநாட்டில் இருந்து இயங்கும் கிழக்குத் திமோர் நிழல் அரசாங்கத்தின் நிதியமைச்சர் ஜோவோ வொக்கா கடந்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

சிறிலங்காவின் ஆளும் பொதுஜன முன்னணி அரசாங்கம் ஜெயவர்த்தனபுரக் கோட்டையிலுள்ள பாராளுமன்றக் கட்டிடத்தில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.

அரசாங்கம் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவரை பாராளுமன்றக் கட்டிடத்திற்கு அழைத்துச் சென்ற போது அங்கு காவலுக்கு நின்ற பொலீசார் அவரை சோதனையிட்ட பின்பே உள்ளே அனுமதிக்க முடியுமெனத் தெரிவித்துள்ளார். ஆனால் வொக்சா அதற்கு மறுப்புத் தெரிவிக்க, பொலிசார் யாராக இருந்தாலும் சோதனை செய்த பின்பே உள்ளே அனுப்ப முடியுமென்று கண்டிப்பாகச் சொன்னார்கள்.

இதனால் கோபமடைந்த அவர் "என்னை ஏதோ வேண்டத்தகாத பொருளை எடுத்துச் செல்லும் குற்றவாளியைப் போல் நீங்கள் பரிசோதனை செய்வதானால் நான் உங்கள் பாராளுமன்றத்துக்கும் வரவில்லை; உங்கள் விருந்தும் எனக்கு வேண்டாம்" என்று கூறி விட்டுத் திரும்பிச் சென்று விட்டார்.

## வெளிவந்துவிட்டது



பாலம் பாலம் பாலம் பாலம்
பாலம் பாலம் பாலம் பாலம்
பாலம் பாலம் பாலம் பாலம்
பாலம் பாலம் பாலம் பாலம்
பாலம் பாலம் பாலம் பாலம்
பாலம் பாலம் பாலம் பாலம்
பாலம் பாலம் பாலம் பாலம்
பாலம் பாலம் பாலம் பாலம்
பாலம் பாலம் பாலம் பாலம்

## பிள்ளையாரடி மோதலில் 5 பொலிசார் பலி

கடந்த 09.10.96 புதன் கிழமை கிழக்கு மாகாணத்திலுள்ள வெலிக்கந்தைக்கும் பொலநறுவைக்கும் இடையிலிருக்கும் பிள்ளையாரடி என்ற இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காக் கடற்படைக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலில் 5 படையினர் கொல்லப்பட்டதாகவும் 3 ஊர்காவல் படையினர் காயமடைந்ததாகவும் சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### படையினரின்...

சைச் சேர்ந்த 307 பேர் விடுதலைப் புலிகளினால் சிறைப்பிடிக்கப் பட்டிருப்பதாகவும் அவர்களது விடுதலைக்காகவும் நலன் வேண்டியும் சிறி மஹாபோதி விகாரையில் விசேட பூசை ஒன்றை எதிர்வரும் 18ம் திகதி நடத்த விருப்பதாகவும் இக் கைதிகள் விடயத்தை தாம் ஐ.நாடுகள் சபைவரை கொண்டு செல்ல இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### அகதிகள் தொகை...

யுள்ளார்.

ஆனால் இக் குற்றச்சாட்டினை மறுத்த அரச அதிபர்கள் தமது புதிய புள்ளி விபரங்கள் சரியானவை எனவும் ஆனால் அரசு பழைய புள்ளி விபரங்களையே இன்னும் வைத்திருப்பது பிழையானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இரு தரப்பினரும் தொடர்ந்தும் வாதப்பிரதி வாதங்களை மேற்கொண்டதனால் இதற்கு முடிவு காணும் முகமாகவும் தற்போது வடக்கு கிழக்கில் இருக்கக் கூடிய உண்மையான அகதிகளின் எண்ணிக்கையை அறியும் பொருட்டு மூவரடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் யாழ் அரச அதிபர் கே.பத்மநாதனும், இடம் பெற்றுள்ளார். இக் குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே புதிய நிவாரணத் தொகுதிகள் அனுப்பி வைக்கப்படுமென்ற தீர்மானத்திற்கு ஏனைய அரச அதிபர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### வன்னிக்கு...

யில் அதிகரித்த சேவைகளை நோயாளருக்கு வழங்கவேண்டிய தற்போதைய நிலை மிகவும் இக்கட்டானது என்றார். தமது நிறுவனத்துக்கு மருந்துகள் மறுக்கப்பட்ட நிலையில் மடுவில் உள்ள தமது நிறுவன நிலையம் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், ஒக்சிஜன் இல்லாத காரணத்தால் ஒரு நோயாளி இறந்த சம்பவத்தையும் அவர் நினைவு கூர்ந்தார்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சோ அங்கு அனுப்பப்படும் மருந்துகள், விடுதலைப் புலிகளின் கைகளில் போய் சேர்கின்றன என்றும் தமது நிலையில் இருந்து தாம் இறங்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரயாண முகவர்...

ஜேர்மனி, சுவிட்சர்லாந்து ஊடாக ஆட்களை இந்தக் குழுவினர் கடத்தி வந்தனர் என்று இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பாரிசின் நான்கு புறநகர் பகுதிகளில் கலவரம் அடக்கும் படையினர் (CRS) நடத்திய திடீர் சோதனையில் அடிப்படை சுகாதார வசதிகளற்ற பல வீடுகளில் இவ்வாறு அழைத்துவரப்பட்டு தங்க வைக்கப் பட்டிருந்த பல சிறீலங்கா பிரஜைகள் கைது செய்யப் பட்டதாகவும் இவர்களிடமிருந்து போலியான பிரெஞ்சு வதிவிட அனுமதிப் பத்திரங்களும் கைப்பற்றப் பட்டதாக பிரான்ஸ் உள்நாட்டு அமைச்சு அசி செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழ்க் குழுக்களுக்கு...

அவரை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். பிற்பாடு ஈ.பி.டி.பி அலுவலகத்தை நோக்கி சிங்களவர்களும் முஸ்லீம்களும் இணைந்து கற்களாலும் போத்தல்களாலும் எறிந்து தாக்கியுள்ளனர். கிறனைட் வீச்சும் இடம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### யுத்தமின்றி...

கைப்பற்றப்பட்ட பின், கிளிநொச்சிக்கு கடல்நீரேரி ஊடான கடற்புலிகளின் பயணங்களை தடைசெய்ய பூநகரி முகாம் பயன்படும் என எதிர்பார்க்கப்பட்டாலும் அது சாத்தியப்படவில்லை. இந் நிலையில் கிளிநொச்சித் தாக்குதலும் ஆரம்பிக்கப்பட்ட வேளை, பாரிய ஆட் தட்டுப்பாட்டிற்கு இராணுவம் உள்ளானது.

வடக்கிலிருந்து படைகளை எடுக்கமுடியாத நிலையில், எதிர்வரும் மழை காலத்தில் 93ம் ஆண்டு போன்றதொரு தாக்குதலை பூநகரி மீது விடுதலைப் புலிகள் மீண்டும் நடத்தக்கூடும் என்பதாலும். அம் முகாமின் அதிகரித்த செலவுகளாலும் பாதுகாப்பு அமைச்சு அப் படைத் தளத்தை மூடி அங்கிருந்த படையினரை கிளிநொச்சிக்கு நகர்த்திக் கொண்டது.

இந் நிலையில் மீண்டும் பூநகரிப் பிரதேசம் விடுவிக்கப்பட்டதினால் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அங்கு விரிவு படுத்தப் பட்டுள்ளது. அங்கு கடற்புலிகளின் பாரிய முகாம் ஒன்று அமைக்கப் பட்டு வருவதாகவும், சுற்று வட்டாரத்தில் கண்ணி வெடிகளை புதைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அடுத்துவரும் மாதங்களில் யாழ் குடாவின் மீது தாக்குதல்களை அதிகரிக்கவிருக்கும் 'விடுதலைப் புலிகள் தமது கனரக ஆயுதங்களை பூநகரியிலேயே நிலைப்படுத்த உள்ளதாயும், குடாநாட்டுத் தாக்குதலுக்கான பிரதான தளமாக பூநகரியையே பயன்படுத்தவிருப்பதாயும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அழியாத நினைவுகள்
## 9ம் ஆண்டு நினைவாஞ்சலி





| | |
|---|---|
| **செல்லையா சின்னத்துரை** | **பிறேமா சின்னத்துரை** |
| (உயர்கல்வி அமைச்சு) | (வேம்படி மகளிர் கல்லூரி) |
| தாயின் மடியில்: 30.11.1924 | தாயின் மடியில் 30. 06. 1969 |

தாயக மண்ணில் 20.10.1987

*இது அழுகைக்கும் அப்பாற்பட்ட சோகம்.*
*நாங்கள் மனிதர்களாக வாழ முற்பட்டபோது*
*நிர்ப்பந்திக்கப்பட்ட மரணம்!*
*ஆண்டுகள் உதிர்கின்றன.*
*அமைதிதான் துளிர்க்கவில்லை*
*உறவினர் முறை அன்பிழந்தோம்*
*மேய்பவனில்லா மந்தைகளாய்*
*திசைகளெட்டும் சிதறிப்போனோம்.*
*உணர்வுகளை நாம் இழக்கவில்லை*
*உங்களையும் மறக்கவில்லை*
*நினைவுத் திரைகளில் நீர்*
*நித்தம் நின்று ஆடுகின்றீர்*
*எம் இருப்பை உறுதி செய்யும்*
*அமைதி வந்து சேருகையில்*
*ஊர்உறவாய் இணைந்திருந்து*
*உம் நினைவைப் போற்றிடுவோம்!*

தங்கள் உணர்வுகளுடன்; திருமதி பராசக்தி சின்னத்துரை.

உதயகுமார் சுகுணா, கிருபாகரன் அல்லி, வரதன் விபுலன், பாமா பத்மா, குருமாமா, பழனிமாமா, கௌரிமாமி, அம்மம்மா, சின்னம்மா, சித்தப்பா இராகுலன், உறவினர்கள் நண்பர்கள்.

தகவல்: சி.விபுலன் (டென்மார்க்)
97 250 973


கலை ஒளியின் **பாரிஸ் வந்தோம்** 20.10.1996

**வெளியீட்டு விழாவும்** - மெய்கண்டானின் வாணி விழா கலை நிகழ்வுகளும்

இசை விருந்து இளைய நிலா

நேரம்: மாலை 5 மணி
இடம்: அர்ச்சனா கலையரங்கம்
20, Passage Dubail, 75010 Paris, Entree 120, rue Fbg St.Martin
(Métro: Gare de L'Est, Sortie:- Rue Fg. St. Martin)

தங்கள் நல்வரவை வேண்டும்
கலைஒளி மன்றம்
பாரிஸ் (கிளை)

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

உங்கள் தேவையறிந்து எங்களின் சேவை

Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10
Fax: 01 42 59 35 00

K.T.C. Jewels
193, Rue du Fg. S'Denis,
75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 01 42 05 41 36



குமார்ஸ்

Kumars Jewels S.A.R.L.
80, Bld. Barbes,
75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 11 52
Fax: 01 42 59 35 00

# அகதிகள் தொகை இருட்டடிப்பு வடகிழக்கு அரச அதிபர்கள் கண்டனம்

வடக்குக் கிழக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து அடிப்படை வசதிகள் ஏது மற்ற நிலையில் அன்றாடம் இன்னல்களையும் இராணுவ மிரட்டல்களையும் அனுபவித்துவரும் தமிழ் அகதிகளுக்கு முறையான நிவாரணங்கள் ஏதும் வழங்காது அகதிகளின் தொகையை சர்வதேச ரீதியில் குறைத்துக் காட்ட முயலும் சிறீலங்காவின் செயலினை வட பகுதியை சேர்ந்த ஐந்து அரச அதிபர்களும் வட கிழக்கு எல்லைப்புற மாவட்டங்களை சேர்ந்த அரச அதிபர்களும் ஜனாதிபதி செயலகத்தில் நடாத்தப்பட்ட உயர்மட்ட மாநாட்டில் கண்டித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள் தங்கள் மாவட்டங்களில் இடம் பெயர்ந்தோரின் விபரங்களைத் தெரிவித்த போது அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எம்.என் ஜினைட் வடபகுதி அரச அதிபர்களின் புள்ளிவிபரம் சரியானதல்ல எனவும் அதில் அகதிகளின் எண்ணிக்கை உயர்வாக காட்டப்பட்டிருப்பதாக குற்றம் சுமத்தி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## வன்னிக்கு மருந்தனுப்ப மறுப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களில் 75 வீதத்தை சிறீலங்கா அரசாங்கம் வெட்டியுள்ளது.' அதே வேளை பிரெஞ்சு மருத்துவ உதவி நிறுவனமான MSF இனால் வழங்கப்பட்ட மருந்துகளும் அப் பகுதிகளுக்கு செல்லாமல் தடுக்கப்பட்டுள்ளது. MSF இன் ஒருங்கிணைப்பாளர் பிரான்சிஸ் ஸ்ஜன்சன், "அநேகமான வன்னிப்பகுதி வைத்திய சாலைகளில் அத்தியாவசிய மருந்துகள் இல்லாத நிலையில் சில வைத்தியசாலைகளில் இருக்கும் மருந்துத் தொகை கூட அடுத்த இரண்டு வாரங்களுக்கே போதுமானதாக உள்ளது. பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்த நிலை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## தமிழ் குழுக்களுக்கு வந்த சோதனை அலுவலகங்கள் மீது படையினர் பாய்ச்சல்

(கொழும்பு)

சிறீலங்கா அரசாங்கத்திற்கும் ஐந்து தமிழ் குழுக்களுக்குமிடையிலான முறுகல் நிலை தற்போது உச்சக் கட்டத்தையடைந்துள்ளது. துப்பாக்கிச் சூடு, பதில் தாக்குதல் என்று ஆரம்பித்து தமிழ் குழுக்களின் அலுவலகங்களுக்கும் சிறீலங்கா அரச படையினர் திடீர்ப் பாய்ச்சல் நடாத்தி சோதனையிடுமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

கடந்த 08.10.96 செவ்வாய்க்கிழமை திருக்கோணமலையில் இரண்டு பொலிஸ் உயர் அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அங்கிருந்த ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ இயக்கங்களின் அலுவலகங்கள் இராணுவத்தாலும் பொலிசாராலும் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதலுக்கு உள்ளாகின. இதன் அடுத்த கட்டமாக திருமலையில் திட்டமிட்டு குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் மற்ற அரசாங்கச் சார்பு முஸலீம்கள் உட்பட 800 பேரை அரசாங்கமே திரட்டி தமிழ் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய வேண்டுமென்று கோரி திருமலை நகரத்தில் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

ஊர்வலம் நடந்த அன்று மாலை திருமலையில் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை பொலிசார் சோதனை செய்ய முற்பட்ட [illegible] [illegible] ஈ.பி.டி.பி உறுப்பினர் சைக்கிளில் வந்தபோது

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## யுத்தமின்றி இரத்தமின்றி புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பூநகரித் தளம்

சிறீலங்கா அரசினால் பூநகரிப் பிரதேசம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் மூலம் யுத்தம் இன்றியே மேலும் ஒரு பிராந்தியம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் வந்துள்ளது.

1991ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 'வலம்புரி' என்னும் குறியீட்டுப் பெயருடன் காலஞ்சென்ற முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் ஆணைப்படி நடத்தப் பட்ட அத் தாக்குதல் மூலம் பூநகரி - சங்குப்பிட்டிப் பாதை மூடப்பட்டு சிறீலங்கா இராணுவம் பூநகரியில் தளம் ஒன்றை அமைத்தது. சிறீலங்கா இராணுவத்தின் பத்தாவது பிரிவின் தலைமையகத்தை கொண்ட இத் தளத்தில் கடற்படை, உலங்கு வானூர்தி தளம் போன்றவையும் இருந்தன.

இத் தளத்தின் மீது 1993ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி விடுதலைப் புலிகள் 'தவளைப் பாய்ச்சல்' என்னும் குறியீட்டுப் பெயருடன் தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலின்போது 754 இராணுவத்தினர் இறந்து ஏராளமான படையினர் காயமடைந்து மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. ஆரம்பத்தில் பல ஆயிரக்கணக்கான படைகளைக் கொண்டு இப் படைத்தளம் இயங்கினாலும் இறுதிக் கட்டத்தில் அங்கு 2500 படையினரே நிலைகொண்டிருந்தனர். இவ்வளவு படையினரையும் கனரக ஆட்டிலரிகளையும் கொண்டிருந்த இத் தளத்திற்கு விநியோகம் கடல் மார்க்கமாகவும், விமான மூலமாகவுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

யாழ் குடா இராணுவத்தால்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## படையினரின் விடுதலைக்காக புதிய அமைப்பு

முல்லைத்தீவு படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்ட பின் அங்கிருந்து நான்கு இராணுவத்தினர் மட்டும் தப்பிவந்துள்ளனர். மற்றையவர்களுக்கு என்ன நடந்தது என்பதை பாதுகாப்பு அமைச்சு இன்று வரை அறிவிக்காத நிலையில் அவர்களது நலன்களைப் பேண 'முல்லைத்தீவு குரல்' என்னும் பெயரில் புதிய அமைப்பு ஒன்றை படையினரின் உறவினர்கள் ஆரம்பித்துள்ளனர். இவ் அமைப்பின் செயலாளர், சிறிமேவன் கஸ்தூரி ஆராச்சியின் கணிப்பின்படி ஏழு அதிகாரிகள் உட்பட இராணுவ, கடற்படை, பொலி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## பிரயாண முகவர்களாக செயற்பட்ட 17 தமிழர்கள் பிரான்சில் கைது?

கொழும்பிலிருந்து பிரான்சுக்கும், கனடாவுக்கும் சட்டவிரோதமாக ஆட்களை அழைத்துவரும் தொழிலில் ஈடுபட்ட குழு ஒன்றை தாம் கைது செய்திருப்பதாக பிரான்சின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த எட்டு வருடங்களாக பாரிசின் புறநகர் பகுதிகளில் இருந்து கொண்டு கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு 8000 அமெரிக்க டொலர்களை (40 ஆயிரம் பிரெஞ்சு பிராங்குகளை வாங்கிக் கொண்டு சட்டவிரோதமான முறையில் போலந்து,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

தமிழ் வீடியோ, ஒடியோ கசட், கொம்பக் டிஸ்க் மற்றும் புடவை வகைகள், மளிகைச் சாமான்களுடன் கடல் உணவுகள், மரக்கறிகள் போன்ற உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

S.K.TRADING

Gasometer Street 31,
8005 Zurich,
Switzerland

Tel: 01-2724336
077-782201
Fax: 01-2732377

# கிழக்கில் அதிகரிக்கும் அரச பயங்கரவாதம்

கிழக்கில் சிறீலங்கா அரசின் பயங்கரவாதப் படைகள் ஒன்றுமறியாத அப்பாவித் தமிழ் மக்கள் மீது கடந்த சில நாட்களாக தமது கோரமான வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள். இதனால் பலர் கொல்லப்பட்டும், படுகாயமடைந்துமுள்ளனர். ஏராளமானோர் கைது செய்யப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி எமக்குக் கிடைத்த தகவல்கள் வருமாறு

**05.10.96**

**வாழைச்சேனைப்** பகுதியில் பேய்த்தாளை கிராமத்தில் தனது குடும்பத்திற்கு உணவு சமைப்பதற்காக விறகெடுக்கச் சென்ற மூன்று பிள்ளைகளின் தாயாரான சின்னத்துரை துளசிமலர் (40) என்பவரை மறைந்திருந்து இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர். இவரது சடலத்தைக் கூட பலத்த கெடுபிடிகளின் பின்னரே கணவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

**திருமலை** பிளாந்தன் துறையில் இரவு 10 மணியளவில் தனது வியாபார அலுவல் நிமித்தம் சென்று கொண்டிருந்த தமிழரொருவரை இராணுவம் சுட்டுக் கொன்ற பின்னர் அவரது சடலத்தை திருமலை வைத்தியசாலை சவக்கிடங்கில் போட்டுள்ளது.

**படுவான் கரைப்** பிரதேசத்தில் நடாத்த கண்ணி வெடிச் சம்பவத்தினைத் தொடர்ந்து அப்பகுதி மக்களை தகருக்குள் நுழையவிடாது தாக்கி அனுப்பியுள்ளது.

**மட்டக்களப்பு** விளாயகபுரத்தில் பாரிய தேடுதல் வேட்டையினை மேற்கொண்ட விசேட அதிரடிப்படை பொலிசார் ஏராளமானோரை ஆண் பெண் வயது வேறுபாடின்றி கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றது. பின்னர் கடுமையான சித்திரவதை காயங்களுடன் சித்திரா (18), பக்தியர் (50), மணியம் (48), சுதா (20) ஆகியோர் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**07.10.96**

**மட்டக்களப்பு விளாயக புரத்தில்** பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கேசத்யா என்ற எட்டு வயது சிறுமி படுகாயமடைந்து உயிருககு ஆபத்தான வைத்திய சாலையில் நிலையில் அனுமதிக்கப்படுள்ளார்.

**வாழைச்சேனைப்** பகுதியில் அரச மருத்துவ மனை மீது பொலிசார் துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். எவ்விதக் காரணமும் இன்றி நடாத்தப்பட்ட இக் காட்டுமிராண்டித் தாக்குதலில் நோயாளிகளும், வைத்தியர்களும் அச்சத்தினால் வைத்தியசாலையை விட்டு சிதறி ஓடியுள்ளனர்.

**08.10.96**

திருமலை நகரில் இரவு வேளையில் முக மூடியணிந்த அரச காடையர்கள் தமிழர்களது வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல்களை நடத்தியதனால் ஆசிரியர்களான கணவனும் மனைவியும் பின்னர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம் முகமூடி வெறியர்கள் பொலிசார் என ஊர்மக்கள் தெரிவித்துள்ளனர்.

**09.10.096**

**மட்டக்களப்பு கல்லடியில்** இராசதுரை சிவானந்தன் (22) என்பவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் 2-ம் வருட மாணவராவார். இவரது சொந்த இடம் யாழப்பாணம் சுதுமலையாகும்.

**திருக்கோயில்** பகுதியில் பொலிசார் மேற்கொண்ட சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் சுமார் ஐம்பது பேரளவில் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் அடையாள அட்டைகள் திரும்ப கொடுக்கப்படாமல் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

**திருமலை இந்துக் கல்லூரியில்** கடமைபுரியும் ஆசிரியர்களும் கல்விகற்கும் மாணவர்களும் படையினரால் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டுள்ளவர். காயமடைந்த நிலையில் பலர் திருமலை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஐ.தே. கட்சியினர் குடாநாட்டுக்குச் செல்லத் தயாரா ? - ரத்வத்தை

நாம் 'யுத்தத்தின் மூலம் சமாதானம்' என்ற கொள்கை மூலம் திட்டமிட்டபடி யாழப்பாணத்தில் இருந்தும் கிளிநொச்சியில் இருந்தும், புலிகளை விரட்டியடித்து அப்பகுதிகளை மீட்டுவிட்டோம். இன்றைக்கு நாட்டின் முழுப் பகுதியையுமே எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றோம். நாட்டின் எந்தப் பகுதிக்கும் எம்மால் பாதுகாப்பாகச் சென்று வர முடியும். ஐ.தே.கட்சியினருக்குத் துணிவிருந்தால் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் செல்லத் தயாரா? என்று சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை சவால் விட்டுள்ளார்.

கடந்தவாரம் பாராளுமன்றத்திலும் அதன் பின் கொழும்பில் பத்திரிகையாளர் மத்தியிலும் இந்தச் சவாலை விடுத்த ரத்வத்தை, எமது முயற்சிக்கு இப்போது பாரிய பலன் கிடைத்துள்ளது. நாம் புலிகளை எந்த இடத்திலும் தோற்கடிக்கக் கூடியவர்களாக உள்ளோம் என்று கூறியுள்ளார்.

# பன்னிரு வேங்கைகளின் 9ம் ஆண்டு நினைவு தமிழீழத்தில் அனுஷ்டிப்பு

இந்திய சிறீலங்கா அரசுகளின் கூட்டுச் சதியால் பலாலியிலுள்ள சிறீலங்கா இராணுவத்தின் தளத்தில் நஞ்சருந்தி வீரமரணமடைந்த லெப்டினட் கேர்ணல் குமரப்பா, லெப்டினன்ட் கேர்ணல் புலேந்திரன், ஆகியோர் உட்பட பன்னிரு வேங்கைகளின் 9 ஆம் ஆண்டு நினைவு உணர்வு பூர்வமாக இராணுவ ஆக்கிரமிப்பற்ற பிரதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களால் அலங்கார வளைவுகளும் நிறுவப்பட்டு அதில் வீரமரணமடைந்த இப் பன்னிரு வீரர்களினதும் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செய்யப்பட்டது. முல்லைத்தீவில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் திரு பரா பேசுகையில் போராட்டத்தின் இன்றைய காலகட்டத்தில் பொது மக்கள் மனம் தளராது விடுதலையை முன்னோக்கி நகரச் செய்வதே வீரமரணமடைந்த போராளிகளுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும் எனக் குறிப்பிட்டார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


# மறந்ததோ வையம் மறத் தமிழ் இனத்தை

## அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம்

## 30.10.1996 - 05.11.1996

*மாபெரும் மக்கள் இடம்பெயர்வின் ஓராண்டு நினைவுடன் எமது மக்களுக்காய் குரல் கொடுப்போம்*

*பொய்மைகள் அகன்று உண்மைகள் வாழ உயிர்த் துடிப்புடன் எழுந்திடுவோம்!!*

**அன்பான தமிழீழ மக்களே!**

- எமது மக்கள் மீது சிறீலங்கா அரசு சுமத்தும் சொல்லொணைத் துயரங்களை சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு.வரவேண்டாமா?
- எம் மக்களுக்கு எதிராகப் புரியும் இனப் படுகொலைக்காக சர்வதேச சமூகத்தின் முன் சிறீலங்கா அரசினை குற்றவாளிக் கூண்டின் முன் நிறுத்த வேண்டாமா? எமது மக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகள் சர்வதேச நிவாரண அமைப்புககள் ஊடாக நேரடியாகவே எமது மக்களுக்கு கிடைத்திட வழி செய்யவேண்டாமா?
- எமது மக்களின் துயரங்களை சர்வதேசமயப்படுத்த ஈழத் தமிழ் மக்கள் வரலாற்றில் மாபெரும் இடம்பெயர்வு நடந்த தினத்தின் [30-10-1995] ஓராண்டு நினைவு தினமாகிய 30-10-1996 இலிருந்து 05-11-1996 வரையிலான ஏழுநாட்களுக்கு அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம் ஒன்றினைப் பிரகடனப்படுத்துவோம்.

**இவ்வாரத்தினுள் எம்மக்களின் அவலம் நிறைந்த வாழ்வினையும் சிறீலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளையும் சர்வதேச சமூகத்தின் முன் வெளிக்கொணர்வதற்கான செயற்பாடுகளில் நாம் அனைவரும் இறங்குவோம்!**

சர்வதேச தமிழர் சம்மேளனம்
Inernational Federation of Tamils
17, Birchview Close, Yateley, Camberley
Surry GU 17 7 DL

# தணிக்கை நீக்கத்துக்குப் பின்

## கடற்படை - விமானப்படை பலப் பரீட்சை
## புலிகளின் ஆயுதக் கப்பல் தப்பியதாம்

இது நடந்தது கடந்த மே மாதம் 9 ஆம் திகதி மாலை 5.00 மணி சிறீலங்கா விமானப் படையின் கண்காணிப்பு விமானம் முல்லைத்தீவுக்கு 47 மைல்களுக்கு அப்பால் ஒரு பாரிய கப்பலொன்றை கண்டது. விமானம் கீழிறங்கியபோது கனரக துப்பாக்கிகளால் விடுதலை புலிகள் சுட்டனர். இதன்பின் விமானி உதவி கோரி செய்தி அனுப்பினார். இச் செய்திகள் அனுராதபுரத்தில் இருந்த புக்காரா பிரிவுக்கும் கிழக்கில் இருந்த கடற்படைப் பிரிவுக்கும் அனுப்பப்பட்டன. தளத்துக்கு விரைந்த புக்காராக்கள் தாக்குதலை ஆரம்பித்தன. புலிகள் தரப்பில் இருந்தும் பலத்த எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சில புலிகளின் பட்குகள் சேதமாக்கப்பட்டன. ஆனால் மூழ்கடிக்கப்படவில்லை. விமானப்படை தாம் ஒரு படகை மூழ்கடித்தாக கூறினாலும் விமானிகள் தாம் எந்த ஒரு படகையும் மூழ்கடிக்கவில்லை என்பதை ஒத்துக் கொண்டுள்ளனர்.

இதே வேளை இக் கடற் பகுதியில் எந்தவொரு கடற்படைக் கலமும் காணப்படவில்லை. அதாவது 60 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள திருமலைத் தளத்தில் இருந்து அதிவேகப் படகுகளும், பீரங்கிப் படகுகளும் வரவேண்டும். சரியாக 5.05 மாலை கடற்படைத் தலைமையகத்திற்கு கிழக்கு தளபதியிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அதன் போது நிலை விளக்கப்பட்டு விமானப்படை அவசர உதவி கேட்டதையும் கூறினார். அத்துடன் இக்கப்பலை அழிப்பதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க வேணடும் என்றும் கூறினார். ஆனால் தலைமையகத்தில் இருந்த சில உயர் அதிகாரிகளில் ஒருவர் கப்பலை விமானப்படை கண்காணித்ததால் விமானப்படையே முழுவதற்கும் பொறுப்பு. கடற்படை அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என தொலைபேசியில் கிழக்குத் தளபதி கூறினார். அத்துடன் கடற்படைப் படகுகள் யாழ் குடாவில் சேவையில் ஈடுபடுவதே முக்கியம். புலிகளின் கப்பலைத் தாக்குவதல்ல என்றும் கூறினார். ஆனால் கிழக்கு கடற்படை பொறுப்பதிகாரியோ பலமுறை எதிரியின் கப்பல் அழிக்கப்பட வேண்டும் என்று கோரியும் எந்தவித பதிலும் வரவில்லை. ஆனால் தனது கைகள் கட்டப்பட்ட நிலையில் படகுகளை அவரால் அனுப்ப முடியவில்லை.

இதேநேரம் முல்லைத்தீவுக்கு வெளியே புக்காராக்கள் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன. மாலை ஏழு மணியளவில் அரச பிரதிநிதியொருவர் ஜனாதிபதி மாளிகைக்கு தொடர்பு கொண்டு ஜனாதிபதியிடம் நிலைமை குறித்து விளக்கி கடற்படை இதில் பங்கு பற்றாததையும் கூறினார். பிரதி பாதுகாப்பு அமைச்சர் கொழும்பில் இல்லாத நிலையில் விசேட கூட்டமொன்றை கூட்டி கடற்படையின் முழுப்பிரிவினையும் திருகோணமலையில் இருந்து புறப்படக் கட்டளையிட்டார். 7.00 மணிக்கு சற்றுப் பின்பாக ஆறுக்கு மேற்பட்ட தாக்குதல் கலங்கள் புலிகளின் ஆயுதக் கப்பலை பிடிக்கப் புறப்பட்டன.

ஆனால் அது மிகவும் தாமதம் ஆக இரவாகியதால் இருட்டில் ஒன்றுமே தெரியாத நிலையில் நூற்றுக்கணக்கான தொன்கள் எடை கொண்ட ஆயுதங்களை இறக்கி விட்டு மறைந்து விட்டது.

அடுத்த நாள் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் மூன்று கடற்புலிகளின் படகுகளை விமானப்படை கண்டதாகவும் ஒன்றை மூழ்கடித்து விட்டதாகவும் கூறியது. கப்பல் பற்றி மூச்சு விடவில்லை.

## சத்ஜெய III இராணுவ நடவடிக்கையில் வீரமரணமடைந்த மாவீரர் பெயர் விபரம்

**திகதி 26.09.96**

செம்பியன்/சுபேந்திரன் - (ஆறுமுகம் பாஸ்கரன், உருத்திரபுரம் கிளிநொச்சி)

**திகதி 29.09.96**

எழில்குமரன் - (துரைராசா கந்தசாமி யாழ்ப்பாணம்)
சொல்வல்லவன்/வேணு - (சிவசம்பு விக்கினராஜா, யாழப்பாணம்)
ஜெயசுதன் - (சண்முகராசா சுதாகரன், ரத்தினபுரம் கிளிநொச்சி)
தமிழ்மாறன்/அழகன் - (தியாகராஜா சத்தியநாயகம், யாழ்ப்பாணம்)
வில்லவன் - (வேலுப்பிள்ளை செல்வன், யாழப்பாணம்)
மாயவன் - (சிவலிங்கம் சதீஸ்குமார், பரந்தன்)
தூயவன் - (யோகராசா விஜயகுமார்,திருமலை)
திருமாறன் - (பரஞ்சோதிநாதன், அருட்செல்வம், யாழ்ப்பாணம்)

**திகதி 30.09.96**

பிரியன் - (தேவேந்திரன் கமலரூபன், அச்செழு யாழ்ப்பாணம்)
சித்தார்த்தன் - ( குணபாலன் அன்பழகன், மூதூர் திருக்கோணமலை)
விஜயகாந்தன் - (கிருஸ்ணபிள்ளை காண்டீபன், களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு)
கிரிஜா/கலைவாணி - (சின்னத்துரை நளினி, யாழ்ப்பாணம்)
யசோ/மலரவன் - (கந்தையா ஜீவரட்ணம், வட்டுக்கோட்டை த.மு உருத்திரபுரம்)
பிறைசூடி - (வேலாயுதம் ஆறுமுகம்,மட்டக்களப்பு)
குணாளன்/நித்தியரூபன் - (சிவதாஸ் பாலச்சந்திரன், பருத்தித்துறை)

**திகதி 01.10.96**

சங்கீதா - (நாகலிங்கம் சசிகலா, சங்கானை)
மறைவாணன் / மருதவாணன் - (பூபாலசிங்கம் தெல்லிப்பளை)
தமிழ்ராசன் / சூசையன் - (பாக்கியராஜா ஜெகதீஸ்வரன் மட்டக்களப்பு)
வதனகுமார் - (சின்னத்துரை உதயகுமார் மட்டக்களப்பு)
தயாளினி - (அரியநாயகசிங்கம் கோமதி மயிலிட்டி)

**திகதி 07.10.96**

ராமன் - பழனி பாக்கியன் அஜித்குமார், உடுப்பிட்டி (24.09.96 அன்று கிளிநொச்சியில் காயமடைந்தவர்)

# யானையால் வந்த பீதி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள காரைதீவுக் கிராமம் சமீபத்தில் மருதமுனையில் நடந்த முஸ்லீம் தமிழ் பிரச்சனைக்குப் பின் அண்மையில தான் ஓரளவுக்கு பதட்டம் தணிந்த நிலைக்குத் திரும்பபிக் கொண்டு இருந்தபோது நள்ளிரவு வேளையில் அந்தக் கிராமத்துள் புகுந்த காட்டு யானை ஒன்று அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

கடந்த 09.10.96 புதன்கிழமையன்று நள்ளிரவு காரைதீவு மக்கள் ஆழந்த நித்திரையில் இருந்தபோது மரங்கள் முறிக்கப்படும் பாரிய சத்தம் கேட்டதும் தங்கள் கிராமத்துக்கு ஆபத்து வந்து விட்டதெனப் பயந்து போய் அலறியடித்துக்கொண்டு வெளிவந்து பார்த்தபோது ஒரு பெரிய காட்டு யானை அதன் குட்டியுடன் ஊருக்குள் வந்திருந்தது தெரியவந்தது. அவர்கள் யானையை விரட்டுவதற்காக பலத்த கூச்சல் போட மற்றப் பகுதியில் இருந்தவர்கள் முஸ்லீம் தமிழ் கலவரத்தால் ஏற்பட்ட கூச்சல் தான் அது என்று நினைத்து பீதியடைய ஆரம்பித்தனர். சிலர் யானை வந்திருக்கின்றது என்ற செய்தியை அறிந்தும் அதை நம்பத் தயாராக இருக்கவில்லை. ஏனெனில் பல கிலோமீட்டர் தூரத்திலுள்ள காட்டிலிருந்து அவர்களது கிராமத்துக்கு யானை ஒன்று வந்தது இதுவே முதல் தடவையாகும்.

இறுதியில் 4 வீடுகளின் மதில்களையும் ஏராளமான மரங்களையும் நாசம் செய்து விட்டு யானை தன் குட்டியுடன் சென்று விட்டது.


## தொலை பேசிக் கட்டண உயர்வினால் சிரமப்படுபவர்களுக்கு ஒரு நற்செய்தி

Call Back எனும் புதிய தொலை பேசித் திட்டத்தில் (Dial International Telecom) நீங்கள் இணைந்து கொள்ளுவதன் மூலம் உங்கள் தொலை பேசிக் கட்டணத்தை குறைத்துக் கொள்ளலாம்.

இத் திட்டத்தினால் பெறக்கூடிய பலன்கள்

1. உங்கள் மாதாந்த தொலைபேசிச் செலவு சராசரி 60 வீதத்தினால் குறைவடைகின்றது.
2. நீங்கள் தொலைபேசியில் தொடர்புகொள்ளும்போது பிறர் உங்கள் தொலை பேசியை ஒட்டுக் கேட்பதற்கான வாய்ப்பு இதில் இல்லை.
3. மாதாந்த வாடகை எதுவுமில்லை. நீங்கள் கதைப்பதற்கான அலகிற்கான கட்டணத்தை செலுத்தினால் மட்டும் போதுமானது.
4. Handy Telephone உடன் தொடர்புகொள்ளும் போது ஏற்படும் செலவு சராசரி தொலைபேசிக் கட்டணத்தை விட மிகக்குறைவாக இருக்கும்.

நாடுகளுக்கான தொலை பேசிக் கட்டணவிகிதம் மிகக் குறைவானது. உதாரணத்திற்கு ஒரு நிமிடத்திற்கான தொலைபேசிக் கட்டணம்

| | |
|---|---|
| இலங்கை | 1.90 DM |
| இந்தியா | 1.70 DM |
| கனடா | 0.70 DM (70PF) |
| அவுஸ்திரேலியா | 0.80 (80PF) |
| சிங்கப்பூர் | 1.10 DM |

இத் திட்டத்தைப் பற்றிய மேலதிக விளக்கங்களைப் பெற தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
Kamal Rummel
Pappelweg. 1
70839 Gerlinge, Germany
Tel: 07156- 28613 or 07156- 28641 / 0171- 421 7014
Fax: 07156-28642
(ADV)



செல் நகரில் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளது!

SUTHAA'S

ALIMENTATION GENERAL



31, RUE AUGUSTE MEUNIER,
77500 CHELLES
(செல் மாமூத், சிறீ முருகன் ஆலயத்துக்கு அண்மையில்)

TEL: & FAX: 01 64 21 78 64

- மளிகைப் பொருட்கள்
- மரக்கறி வகைகள்
- வார-மாத பத்திரிகைகள், சஞ்சிகைகள்,
- தரமான வீடியோ படங்கள், பாடல்கள்,
- ஓடியோ, சீ.டிக்கள்

அனைத்தும்
மிக.. மிக...
மலிவு விலையில்



(ADV)

# வரவு நான்கு ரூபா செலவு பத்து ரூபா சிறீலங்காவின் அடுத்தாண்டு நிதி நிலை

(கொழும்பு)

சிறீலங்காவில் அடுத்த ஆண்டுக்கான வரவை விட செலவு என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. கடந்த வாரம் சிறீலங்கா பாராளுமன்றத்தில் 1997 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தின் ஒதுங்கீட்டுப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டபோது இது தெரிய வந்தது.

மேற்படி வரவு செலவுத்திட்டத்தில் 97 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு 9 ஆயிரத்து 758 கோடியே 16 இலட்சத்து 26 ஆயிரம் ரூபா என்றும், செலவு 19 ஆயிரத்து 899 கோடியே 16 இலட்சத்து 26 ஆயிரம் ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தமாகத் துண்டு விழும் தொகை 10 ஆயிரத்து 141 கோடி ரூபாவாகும். இது மொத்த தேசிய வருமானத்தின் அளவை விட அதிகமாகும்.

அடுத்த வருட்டம் பாதுகாப்புச் செலவுச் செலவினத்துக்காக 4400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 6000 கோடி ரூபாவை தாண்டலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. கடந்த 96 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்காக 2800 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அது இன்று 5000 கோடி ரூபாவையும் தாண்டி விட்டது. இந்த நிலையில் 97 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கப்பட்டுள்ள 4400 கோடி ரூபாவே பாதுகாப்புச் செலவினம், அரசாங்கம் புலிகளுடன் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்து பேச்சுவார்த்தைக்குச் செல்லாவிட்டால் எட்டாயிரம் கோடி ரூபாவை தாண்டினால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று பொருளாதார ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள்.

கடந்த வாரம் இந்த உத்தேச நிதி ஒதுக்கீட்டு சட்டமூலப் பிரேரணை தொடர்பாக பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் உரையாற்றிய பிரதிநிதிய மைச்சர் பீரிஸ் துண்டு விழும் தொகை ஈடு செய்வதற்கு உதவி வழங்கும் நாடுகளிலிருந்து கூடுதலான உதவிகளைப் பெறுவதற்கும் கூடுதலான வெளிநாட்டு முதலீடுகளை வரவழைப்பதற்கும் தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுவதாக கூறியுள்ளார்.

# கொழும்பில் ஊடுருவிய தற்கொலைப் போராளி

## பொலிசார் நடாத்திய கெடுபிடி நாடகம்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டிப்' பிரதேசத்துக்குள் தற்கொலைப் போராளி ஒருவர் ஊடுருவி விட்டதாகக் கூறிக் கொண்டு கடந்த 08.10.96 செவ்வாய்க்கிழமை காலை சிறீலங்காப் பொலிசார் மிகப் பெரிய கெடுபிடி நாடகம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

திடீரென சம்பவ தினத்தன்று கொள்ளுப்பிட்டி நகரத்தை ஆங்காங்கே வீதித் தடைகள் அமைத்து சுற்றி வளைத்த பொலிசாரும் இராணுவத்தினரும் அப் பகுதியால் சென்ற அனைத்து ' வாகனங்களையும் நிறுத்தி அவற்றிலிருந்த தமிழர்களையெல்லாம் இறக்கி அவர்களை கடும் சோதனைக்கு உள்ளாக்கினர்.

பின்பு அப்பகுதியில் இருந்து கொண்டு உள்ளே புகுந்து அங்கே இருந்தவர்களை எல்லாம் உருட்டி, மிரட்டி விசாரித்ததோடு அவர்களது வீடுகளிலிருந்த பெறுமதிமிக்க உடமைகளையெல்லாம் சேதப்படுத்தியதுடன் சிலவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர். சில இடங்களில் சோதனை என்ற பெயரில் இளம் பெண்கள் மீது பாலியல் ரீதியான சேட்டைகளையும் புரிந்துள்ளனர்.

இறுதியில் புலிகள் என்று கூறிக் கொண்டு தமது பாதுகாப்பு சோதனை நடவடிக்கையை நியாயப்படுத்த மூன்று பெண்கள் உட்பட 13 பேரை கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

# புலிகள் வசமுள்ள படையினரை விடுவிக்க யாரும் எம்முடன் பேசவில்லை

## - செஞ்சிலுவைச் சங்கம் -

விடுதலைப் புலிகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ள படையினரை விடுவிப்பது தொடர்பாக அரசாங்கத் தரப்பில் இருந்தோ, புலிகள் தரப்பில் இருந்தோ யாரும் தம்முடன் தொடர்பு கொள்ளவில்லை என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சிறீலங்கா பிரதிநிதி கொழும்பில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளால் 46 படையினர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரென்றும் அரசாங்கம் பிடித்து வைத்துள்ள மூவரை விடுதலை செய்தால் தம்மிடமுள்ள 22 படையினரை விடுவிக்க தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்ததாகவும் கைதியாக உள்ள இராணுவ உயர் அதிகாரி ஒருவர் எதிரக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா மூலம் அரசாங்கத்திற்கு தெரிவித்ததாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக கொழும்புப் பத்திரிகையாளர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது தடுப்புக் காவல் கைதிகளைப் பரிமாறுவதில் இரு தரப்பில் எவராவது ஒருவர் எமது உதவியை நாடினாலும் அது தொடர்பாக எமது கடமையை நிறைவேற்றுவோம் எனத் தெரிவித்த அவர்கள் தடுப்புக் காவலில் உள்ளவர்கள் உரியமுறையில் கவனிக்கப்படுகின்றார்களா என்பதை அவதானிக்கவே நாம் மாதந்தோறும் அவர்களைச் சென்று பார்வையிட்டு வருகின்றோம். கடந்த செப்டம்பர் மாதக் கடைசியில் வன்னி மாவட்டத்தின் தென் பகுதியில் அவர்களைச் சென்று கடைசியாகச் சந்தித்தோம். அவர்கள் பற்றிய விபரங்களை அவர்களது பெற்றோர்களுக்குத் தெரிவித்துள்ளோம் என்றும் கூறியுள்ளார்.

வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கள வைபவங்களுக்கும், ஊர்து யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு"



நித்தி Tel: 43 03 07 08 / 48 05 02 14 / 49 23 97 32
பிரயாண வசதி கருதி: 07 34 80 51



# பூநகரி முகாம் மூடப்பட்டது ஏன்?

**கொழும்பிலிருந்து தமிழரசன்**



சிறீலங்கா அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தை முறிவடைய முக்கிய காரணியாக இருந்தது பூநகரி இராணுவ முகாம். கடந்த வாரம் சொல்லாமல், கொள்ளாமல் மிகவும் இரகசியமாக இம் முகாமை சிறீலங்கா அரசாங்கம் மூடிக் கொண்டது. இந்த பாரிய இராணுவ முகாம் மூடப்பட்டது நாட்டு மக்களை பெரும் வியப்பில் ஆழ்த்தி இருக்கிறது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை பலி கொடுத்தும் கூட தமிழீழ விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப் பட்ட பூநகரி முகாமை மீண்டும் புனர் நிர்மாணம் செய்து இயங்க வைக்க வேண்டிய சூழலில் இருந்த இந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முகாம் பாதுகாப்பு விமர்சகர்களைக் தாக்குதல் ஒன்றினை மேற்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் பாதையைக் திறப்பதற்கு வசதியாக பூநகரி இராணுவ முகாமை அகற்ற வேண்டும் எனவும், அப்போது தான் தமிழ் மக்கள் சுதந்திரமாக பிரயாவாதிகளும், விமர்சகர்களும் கருத்து தெரிவிக்கின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும், அமெரிக்காவும்

போவதாக தெரிவித்து வந்தது. ஆனால் பதவிக்கு வந்த பின்னர் இதைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை. கட்டட நிர்மாண வேலைகள் முன்னைய ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தைவிட மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறன. நாற்பத்தியாறு (46) ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டுவரும் இந்த தகவல் பரிமாற்று நிலையத்தின் அமைப்பு, முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்து வருகிறது.

இந்த தகவல் நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருப்பதற்காக அமெரிக்கா, இப்போது சிறீலங்கா அரசுக்கு மறைமுகமாக உதவிகளைச் செய்து வருகிறது. கடந்த இரண்டு வாரகாலத்தில் நான்கு கபினெட் அமைச்சர்கள் அமெரிக்காவுக்கு சென்று பல்வேறு விடயங்கள் பற்றி பேச்சு வார்த்தைகளை நடத்தி உள்ளனர். நிதி அரசியல் விவகார அமைச்சரும், பிரதி நீதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கைத்தொழில் அமைச்சர் சீ.வி. குணரட்ணா, வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ண, விவசாய, வனவள அமைச்சர்

# கிளிநொச்சி மீது தாக்குதல் நடாத்த தயாராகி வரும் புலிகள்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



ணம் செய்ய முடியும் எனவும் புலிகள் அரசாங்கத்தை வலியுறுத்தினார்கள். ஆனால் இவை அனைத்துமே 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' இருந்தது. சில வேளையில் பூநகரி இராணுவ முகாம் மூடப்பட்டிருந்தால் இன்றைய பாரிய இழப்புக்களை சிறீலங்கா அரசாங்கம் சந்தித்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. நாட்டில் சமாதானம் ஏற்பட்டிருந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என கொழும்பில் தமிழ் அரசியல்

மிகவும் ஐக்கியமாக செயல்பட ஆரம்பித்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதற்கு அமெரிக்காவிடம் இருந்து நவீன ஆயுதங்களை பெறுவதிலும், சர்வதேச ரீதியில் புலிகளின் செல்வாக்கை மழுங்கடிக்கவும் அமெரிக்காவின் துணையை அரசு நாடி இருக்கிறது. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வரும் முன்னர் சிலாபம் இரணவிலவில் அமைக்கப்பட்டு வரும் வொய்ஸ் ஒப் அமெரிக்கா தகவல் நிலையத்தை மூடிவிடப்

டிஎப்ஜயரட்ணா ஆகிய அமைச்சர்களே அமெரிக்கா சென்றவர்களாவார்கள். இந்த அமைச்சர்களின் உள்நோக்கம் என்னவென்பது மர்மமாக இருப்பதாக தீவிர இடதுசாரி அரசியல்வாதிகள் சந்தேகிக்கின்றனர். அமெரிக்காவுடன் சோஸலிசக் கொள்கையுடைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் திடீர் உறவு குறித்து அண்டை நாடான இந்தியா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தி இருக்கிறது. பூநகரி மூடப்பட்டதில் பல காரணங்கள் உள்ளன.

1. பரந்தனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சத்ஜய மூன்றாம் கட்ட இராணுவ நடவடிக்கை, யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த படையினரை கொண்டு வந்தே நடத்தப்பட்டது. அப் படையினர் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்ற கட்டாயதேவை ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் யாழ்ப்பாணக்குடா நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கை மேலோங்கி வருகிறது.

2. இராணுவத்தில் கடுமையான ஆட் தட்டுப்பாடு நிலவி வருகிறது. யாழ்ப்பாண குடா நாட்டில் கூட பல இராணுவ முகாங்கள் மூடப்பட்டுள்ளன.

3. கிளிநொச்சி மீது பாரிய கிடைத்துள்ளன. அது மட்டுமன்றி கிளிநொச்சி மீது தாக்குதல் நடத்தப் போவதாக தமிழீழ விடுதலைப் புலிகளும் வன்னியில் அறிவித்துள்ளார்கள்.

4. இன்றைய இராணுவ ஆள் பற்றாக்குறை, புலிகளின் தாக்குல் முஸ்தீபுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே இராணுவ தலைமையகம், பூநகரி இராணுவ முகாமை மூடிவிட்டது என இராணுவ விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

பூநகரி முகாம் மூடப்பட்டு அங்கிருந்த இராணுவத்தினர் கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதுடன் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தமும் செய்து கொண்டது.


யாழ்ப்பாணத்திற்கு தரைப்




உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
கல்விச் சேவை நடாத்தும்
கணனி வகுப்புகள்
Neugasse 116, 8005 Zürich
பிரதி ஞாயிறு தோறும் காலை
9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை

படிப்பிக்கும் பாடங்கள்:
Introduction to Computer, Dos & Windows 3.1x
BASIC Language
W indows 95
W indows NT
dBASE III Plus for DOS
dBASE IV for DOS
dBASE V for W in
V isual Basic
DELPHI
CLARION for DOS and W indows
C language
LISP language

புதிய வகுப்புகளுக்கான பாடங்கள்:
Mastring Windows 95 and Office Administration
W indows 95
Camparing Systems
W inWord 7.0
W ord BASIC
ACCESS 7.0
EXCEL 7.0
POWER Point 7.0
Macro W riting



தொடர்புகளுக்கு: மக்கள் கடை, சூரிச்
தொலைபேசி: 01/271 73 74

# குடாநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு அகதிகளாக மக்கள் செல்வது தொடர்கிறது

சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள குடாநாட்டுப் பகுதியில் திறந்த வெளிச்சிறை போன்ற அமைப்புக்குள் வாழவிரும்பாத மக்கள் அங்கிருந்து கடல் மார்க்கமாகத் தமிழ்நாட்டுக்குத் தப்பிச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

குடாநாட்டுக்குள் நாளுக்கு நாள் இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்து வருவதால் குறிப்பாக இளவயதினர் அதிகளவில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போதல், இளம் பெண்கள் படையினரின் பாலியல் வன்முறைக்கு உள்ளாதல் முதலான நடவடிக்கைகளாலும் அச்சமும் பீதியுமுற்ற மக்கள் அங்கிருந்து தப்பி தமிழகத்திற்கு அகதிகளாகச் செல்வதற்கு முயன்று வருகின்றனர்.

கடந்த வாரம் இவ்வாறு வெற்றிலைக்கேணிப் பகுதியில் இருந்து தமிழகத்திற்குச் சென்ற படகொன்று சிறீலங்காக் கடற்படையினரால் விரட்டிச் சென்று கைப்பற்றப்பட்டது. அதில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக 13 பேர் இருந்ததாகவும் கச்சதீவுக்கு கிழக்கேயுள்ள கடற்பகுதியில் வைத்துக் கைப்பற்றப்பட்ட இந்தப் படகும் அதில் இருந்தவர்களும் மன்னார் கடற்படைத் தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலக செய்திக் குறிப்புத் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க தமிழகத்திற்கு அகதிகள் செல்வதைத் தடுக்க இந்தியக் கடற்படையும் சிறீலங்காக் கடற்படையும் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை பாக்கு நீரிணை மற்றும் மற்றும் மன்னார் குடாப் பகுதியில் மேற்கொண்டுள்ள போதிலும் கடந்த வாரம் குடாநாட்டிலிருந்தும் வன்னிப் பகுதியில் இருந்தும் 375-க்கும் அதிகமான அகதிகள் தமிழகத்திற்கு வந்ததாக இராமேஸ்வரம் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மாண்டவர் மீண்டார் தெற்கில் சம்பவம்

கடந்த செப்டம்பர் மாதம் 27-ம் திகதி குடாநாட்டில் நடந்த ஒரு மோதலில் எட்டியாந்தோட்டைச் சேர்ந்த சுசுத என்ற இராணுவச் சிப்பாய் இறந்து விட்டதாக அவரது பெற்றோருக்குத் தெரிவிக்கப்பட்டது.

28ம் திகதி மாலை விசேட இராணுவக் குழுவொன்று சுசுதவின் சடலத்தை எட்டியாந்தோட்டைக்குக் கொண்டு சென்று அவரின் பெற்றோரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றது. அதனைத் தொடர்ந்து அவர்களது வீடிருந்த பகுதி வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டு துக்கம் கொண்டாடப்பட்டது. இறந்த சுசுதவின் உடலைப் பார்க்கவென ஏராளமான மக்களும் அங்கு வந்து சென்றனர். இவ்வாறு வீடே துக்கமயமாக இருந்தவேளை 28ம் திகதி நள்ளிரவில் இன்னொரு விசேட இராணுவக் குழு அங்கு வந்து தாங்கள் கொண்டுவந்து தந்த உடல் சுசுதவினுடையதல்லவென்றும் சடலம் அடையாளம் காணமுடியாதபடி சிதைந்து விட்டதால் இந்தத் தவறு நடந்து விட்டதாகவும் கூறி அந்தச் சடலத்தை திரும்பப் பெற்றதோடு இறந்ததாக கூறப்பட்ட சுசுதவையும் சக்கர நாற்காலியில் அங்கு இறக்கி விட்டுச் சென்றனர்.

# நாங்கள் யாழ்ப்பாணம் செல்லத் தயார்; 41 ஐ.தே.க எம்பிக்கள் அறிவிப்பு

(கொழும்பு)

ஐ.தே.கட்சியினர் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் செல்லத் தயாரா என்று ரத்வத்தை எழுப்பிய சவாலுக்கு 41 ஐ.தே.கட்சி எம்பிக்கள் தாம் செல்லத் தயார் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஐ.தே.க பொதுச் செயலாளர் காமினி அத்துக் கோறள கொழும்பில் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவிக்கையில் எமது கட்சியைச் சேர்ந்த 41 பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் செல்லத் தயாராக உள்ளனர். அரசாங்கம் அதற்கு முன் பத்திரிகையாளர் குழுவொன்றை யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் செல்ல அனுமதிப்பதோடு அவர்கள் அங்கு இராணுவ முகாம்களையும் இராணுவத்தினர் காட்டும் இடங்களையும் மட்டும் படமெடுக்கவும் அவர்கள் குறிப்பிடும் நபர்களுடன் மட்டும் உரையாடவும் செய்விக்காமல், அவர்கள் சுதந்திரமாக எங்கும் சென்று எல்லாத்தரப்பு மக்களையும் யாழ் குடாநாட்டினதும் கிளிநொச்சிப் பிரதேசத்தினதும் உண்மை நிலையை தெரிந்து கொண்டு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக எழுதி வெளியிடுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

அவ்வாறு அதைச் செய்வதற்கு பத்திரிகையாளர்களுக்கு அமைச்சர் ரத்வத்தை அனுமதி கொடுத்தால் தமது கட்சி உறுப்பினர்கள் அதன் பின் அவரின் சவாலை ஏற்றுக் கொண்டு அங்கு செல்லத் தயாராக இருக்கின்றனர் என்று கூறியுள்ளார்.

# மட்டக்களப்பில் பொலிஸ் ரோந்து மீது தாக்குதல் ஐவர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையாரடி கிராமத்தில் அமைந்திருக்கும் பொலிஸ் நிலையத்திலிருந்து வீதித் தடைகளை அகற்றப் புறப்பட்ட அணியொன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

கடந்த 9 ஆம் திகதி விடுதலைப் புலிகளினால் வைக்கப்பட்ட வீதித்தடைகளை அகற்றவென புறப்பட்ட இந்த பொலிஸ் அணி வெலிக்கந்த கட்வத்தமடுவ வீதியால் சென்று கொண்டிருந்த போது வீதியின் இருமருங்கிலும் காத்திருந்த விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது. தாக்குதல் ஆரம்பித்த சில நிமிட நேரத்திலேயே பொலிஸ் அணி தனது ரோந்துக் கட்டுப்பாட்டினையும் வானொலித் தொடர்புகளையும் இழந்தது.

மேலும் இத் தாக்குதலினை எதிர்கொள்ள முடியாத பொலிசார் பின்வாங்கிச் செல்கையில் ஐவர் கொல்லப்பட இருவர் படுகாயப்படுத்தப்பட்டனர். காயமடைந்தவர்களையும் இறந்தவர்களையும் தூக்கிக் கொண்டு பீதியடைந்த பொலிசார் ஓடித் தப்பினர். ஆயுத தளபாடங்களை கைப்பற்றிய விடுதலைப் புலிகள் இழப்பெதுவும் இன்றி தளம் திரும்பினர்.

இதில் ஐந்து பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர். ஏனையோர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.



# கிளிநொச்சி யுத்தமும் அதன் பின்னணியும் — ஒரு ஆய்வு

பிரேம் டி. சோமசேகரம்

22.09.1996 ஞாயிற்றுக்கிழமை, கிளிநொச்சியை கைப்பற்றும் நோக்குடன் சிறீலங்கா இராணுவத்தினர் பரந்தனில் இருந்து நகர ஆரம்பித்தனர். சத்ஜய III [உண்மைவெற்றி] எனப் பெயரிடப்பட்ட இந் நடவடிக்கையில் முன்னைய இரு சத்ஜய நடவடிக்கைகள் போலல்லாமல் நன்கு திட்டமிடப்பட்டு 20 ஆயிரம் படையினரும் மற்றும் பெருமளவு படைக் கலன்களும் பயன்படுத்தப் படுகின்றன.

இந் நடவடிக்கைக்கு காரணமாக கொழும்பு — யாழ்ப்பாண தரைவழிப் பாதையின் முக்கியத்துவத்தை வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கு சிறீலங்கா அரசு வலியுறுத்துகின்ற அதேவேளை இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா இந் நடவடிக்கைக்கு காரணம் அதிக அளவில் புலிகளைக் கொல்வது என்கிறார்.

கொழும்பு – யாழ் தரைவழிப் பாதை திறப்பதையும் பின் அதைப் பேணுவதையும் நீண்டகாலப் பார்வையில் இயலாத காரியம் என்றே கூற வேண்டும். அதேவேளை இந் நடவடிக்கையானது தென்னிலங்கையில், முல்லைத்தீவு இராணுவத் தோல்விக்கு பின் நிலவும் அவநம்பிக்கையை துடைத்தெறியவும், சிறீலங்கா இராணுவம் ஒரு வெல்லும் சக்தி என்பதை நிரூபிக்கவுமே ஆரம்பிக்கப் பட்டதாக கூறவேண்டும்.

எது எப்படி இருந்த போதிலும், இந் நடவடிக்கைக்கு மிக முக்கிய காரணமாக விடுதலைப் புலிகளால் முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட இரு ஆட்டிலரிகளை வெளிகொணர்ந்து, அழிப்பதற்கான முயற்சியையும் கூறவேண்டும்.

புலிகளால் முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட, நீண்ட தூரம் செல்லக் கூடிய இரு 122 மி.மீ ஆட்டிலரிகள் Howitzer எனப்படும், குறிப்பாக தரைப்படை மேல் தாக்கப் பயன்படும் வகையைச் சேர்ந்தவை. நடுத்தர வகையைச் சேர்ந்த இவ்விரு ஆட்டிலரிகளும் இவற்றிற்கு பயன்படுத்தப்படும் சுமார் ஆயிரம் எறிகணைகளும் புலிகளின் கைகளில் இருக்கும் பட்சத்தில் தகுந்த நேரங்களில் இவை சிறப்பாக பயன்படுத்தப்பட்டு சிறீலங்கா இராணுவத்தினருக்கு பெரும் பின்னடைவை கொடுக்கும் என்பது இராணுவ உயரதிகாரிகளுக்கு நன்கு தெரிந்த விடயம். ஆகவே புலிகளிடமுள்ள இவ் ஆட்டிலரிகளை சத்ஜய III நடவடிக்கை மூலம் வெளிக்கொணர்ந்து அழித்து விடத் திட்டமிட்டார்கள். அதாவது இராணுவ உயர் பீடம் புலிகள் இவற்றை நிச்சயமாக பயன்படுத்துவார்கள் என்றே கணக்கிட்டதாக சொல்லலாம்.

ஏனெனில் புலிகள் ஆட்டிலெறிகளை பயன்படுத்தும் பட்சத்தில் எதிர் பார்த்து காத்திருக்கின்ற படையினரால் அவை சுலபமாக அழிக்கப்பட்டிருக்கும். ஆட்டிலெறிகள் அநேகமாக தரைப் படையினருக்கு ஆதரவு வழங்கவே பயன்படுவதால் பாதுகாப்பு வலயங்களுக்கு உள்ளேயே நிறுத்தப் பட்டிருக்கும். மிகத் திறமையான ஆட்டிலெறியாளர் ஒருவரால் எறிகணை வரும் சத்தம் மற்றும் விழுந்து வெடித்த இடம் என்பவற்றை அவதானித்து ஆட்டிலரி உள்ள இடத்தை உசிதமாகக் கூறமுடியும். இதை விட அவ் ஆட்டிலரியைப் பற்றிய விபரமும் தெரிந்திருக்கும் பட்சத்தில் இவ் விடயம் இன்னும் இலகுவானதாக இருக்கும். மேலும் பல நவீன கருவிகளை பயன்படுத்தும் வேளையில் மிகவும் துல்லியமான விபரங்களை தரமுடியும். இவ் விபரங்கள் கைவசம் இருக்கும் பட்சத்தில் எறிகணை விழுந்து வெடித்த தூரத்தில் இருந்து ஆட்டிலரி உள்ள அனுமான தூரத்தை ஆரையாகக் கொண்டு ஒரு வட்டம் வரையப்பட்டு அந்த வட்டம் காட்டும் பிரதேசத்தில் வான் படையினரால் தேடுதல் நடத்தப்படும். சாதாரணமாக ஆட்டிலரிகள் பல தொன்கள் எடையுள்ளதால் அவற்றை இழுத்துச் செல்ல வாகனங்கள் பயன்படுத்தப்படும். இருந்த போதிலும் பூகோளத் தன்மையை பொறுத்து வட்டப் பிரதேசத்தைக் கடந்து செல்ல சற்றே தாமதமாகும்.

***ஆட்டிலரி நிலை கணித்தல்:***

வட்டம் தேடும் பிரதேசம்




உதாரணமாக 10Km தூரத்தில் இருந்து எறிகணை ஏவப்படும்பொழுது:

(r) ஆரை $= 10Km$

பரப்பளவு $= \pi r^2$

$= \pi (10)^2$

$= 100\pi$

$= 314 \ Km^2$

அல்லது

$= 314285 \ m^2$

சிறீலங்கா வான்படையை பொறுத்த வரையில் அவர்களிடம் சக்தி வாய்ந்த MI24 HIND வகை உலங்கு வானூர்திகள் உள்ளன. உலகமெங்கும் பரவலாக பயன்படுத்தப்பட்டு, உலகத்தின் தலை சிறந்த சண்டையிடும் உலங்குவானூர்திகளில் ஒன்றாக விளங்கும் MI24 சுமார் 1500 கிலோ கிராம் நிறையுள்ள பல் வகை ஆயுதங்களை ஏற்றியபடி மணிக்கு 365 கிலோ மீட்டர்கள் வேகத்தில் செல்லக்கூடியது. இவை தேடி அழிப்பு நடவடிக்கைகளுக்கு ரேடார், இன்பாறெட் கருவி போன்ற கருவிகளை பயன்படுத்துகின்றன.

வட்டப் பிரதேசத்திற்குள் தேடுதலைத் தொடங்கும் உலங்கு வானூர்திகள் ஆட்டிலரிகளைக் கண்டு பிடிக்கும் பட்சத்தில் நவீன ATGM ஏவுகணைகள் மற்றும் 57 மி.மீ சிறிய ரக ராக்கட்டுகளை பயன்படுத்தி ஆட்டிலரிகளை சுலபமாக அழித்து விடும். தேடுதலின்போது எந்தவிதமான தகவல்களும் கிடைக்காத பட்சத்தில் வட்டம் சுருக்கப்பட்டு, ஆட்டிலரிகள் மறைத்து வைத்திருக்கக்கூடிய சாத்தியமான இடங்கள் கிபிர் ரக யுத்த விமானங்களால் குண்டுகள், ஏவுகணைகள் மற்றும் எரிகுண்டுகள் என்பன பயன்படுத்தி நாசமாக்கப்படும். இஸ்ரேலிய தயாரிப்பான கிபிர் விமானங்கள் 6085 கிலோகிராம் எடையுள்ள நவீன எறிகணைகள், ராக்கட்டுகள், குண்டுகள், இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் எரிகுண்டு போன்றவற்றை ஏற்றியபடி மணிக்கு 1389 கி.மீ வேகத்தில் செல்லக்கூடியன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


ஆனால் இந்த தந்திரத்தை முன்னரே ஊகித்திருந்த புலிகள், ஆட்டிலரிகளை கிளிநொச்சி யுத்தத்தில் பயன்படுத்தாததையும், சில நாட்கள் யுத்தத்தின் பின் அவர்கள் [புலிகள்] இன்னமும் கைப்பற்றிய ஆட்டிலரிகளை பயன்படுத்தவில்லை என்ற இராணுவ பேச்சாளர் சரத் முனசிங்காவின் ஆதங்கமான பேச்சையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இனி கிளிநொச்சி யுத்தத்தினை பார்க்கும் போது;

22.09.1996 **ஞாயிறு,** பரந்தன் வடக்கிலிருந்து அரச படையினர் கிளிநொச்சி நோக்கி டாங்கிகள் மற்றும் கனரக வாகனங்கள் சகிதம் முன்னேற ஆரம்பிக்கின்றனர். இவர்களுக்கு ஆதரவாக ஆட்டிலரிகள் கிளிநொச்சி நகரையும் சூழ உள்ள இடங்களையும் எறிகணை வீசித்தாக்க, உலங்கு வானூர்திகளும், விமானங்களும் ராக்கட், மற்றும் குண்டுத்தாக்குதல்களை மேற் கொள்கின்றன. இவ்வகைத் தாக்குதல்களை எதிர் பார்த்திருந்த புலிகளும் நன்கமைக்கப்பட்ட அரண்கள், பதுங்கு குழிகள் என்பவற்றிலிருந்து எதிர்த்தாக்குதல்களை நடாத்துகின்றனர். குறிப்பாக புலிகளின் விஞ்ஞான ஆய்வுப் பகுதியால் உள்ளூரில் செய்யப்பட்ட மோட்டார்கள் பரவலாக பெருமளவில் பயன்படுத்தப் படுகின்றன.

24.09.1996 **செவ்வாய்:** தென் மேற்கு திசையில் பிறிதொரு இராணுவ அணி கிளிநொச்சி நோக்கிய முன்னேற்றத்தை ஆரம்பிக்கின்றது. இப்பொழுது சரித்திரப்புகழ் வாய்ந்த 'வீ' வடிவ வியூகத்தில் [இடுக்கித் தாக்குதல் வியூகம்] படைகள் நடத்தப்படுகின்றன. புலிகள் இரு அணியில் முன்னேறும் படையினருடன் போரைத் தொடர்கின்றார்கள்.

V முனைத் தாக்குதல்:





26.09..96 வியாழன். அதிகாலை 5 மணியளவில் இரு அணிகளாக V வடிவத்தில் முன்னேறும் படையினர் மேல், புலிகள் ஒரே நேரத்தில் ஊடுருவி எதிர்த் தாக்குதல் நடத்துகின்றார்கள்.

வலிகாமத்தைக் கைப்பற்றுவதன் முதற்கட்டமாக நடாத்தப்பட்ட "இடிமுழக்கம்" நடவடிக்கையின் போது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஊடுருவி எதிர்த் தாக்குதல் ஒன்று முறியடிக்கப்பட்டு 172 புலிகள் கொல்லப்பட்டதன் பின் இவ் வகையான ஊடுருவி எதிர்த்தாக்குதல் மேற் கொள்ளப்படுவதில் புலிகள் மிகுந்த அவதானம் காட்டி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது அளம்பிலிலும் சிலாவத்தையிலும் தரையிறங்கிய படையினருடனான மோதலில் இவ் வகையான நடவடிக்கைகள் எதனையும் புலிகள் சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும் மேற்கொள்ளவில்லை என்பது இங்கே குறிப்பிடத் தக்கது.

ஆகவே நீண்ட காலத்தின் பின் நடாத்தப்பட்ட இவ் ஊடுருவி எதிர்த் தாக்குதல் மிக நுட்பமாக திட்டமிடப் பட்ட ஒன்றாகவே கருத வேண்டும்.

**புலிகளின் எதிர்த் தாக்குதல்:**




முன்னேறும் நடவடிக்கையின் போது பெரும்பாலும் டாங்கிகளே படையினருக்கு தற்காலிக அரண்களாக இருக்கும். இதைத் தவிர பதுங்கு குழிகளும் தற்காலிக காப்பரண்களும் பாதுகாப்பு வலய எல்லையை ஒட்டி அமைந்திருக்கும். கடுமையான மோட்டார்த் தாக்குதலின் பின் பாதுகாப்பு எல்லைகளை தகர்த்து புலிகள் உள்ளே நுழைய கடும் சமர் மூள்கின்றது. நேருக்கு நேர் சண்டைகளும் இடம் பெறுகின்றன. இத் தாக்குதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல்களாக சத்ஜய III நடவடிக்கையை தடுத்து நிறுத்துமுகமாகவே நடாத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே கடும் சமரின் பின் புலிகள் தங்கள் நிலைகளுக்குத் திரும்புகின்றார்கள்.

ஒரு எதிர்த் தாக்குதல் புலிகளால் மேற் கொள்ளப்பட்டதாகவும் ஆனால் அதை வெற்றிகரமாக முறித்து விட்டதாகவும் இராணுவத் தலைமைப் பீடம் கூற, ஒரு இராணுவ உயர் அதிகாரியோ ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திடம் இழப்புக்கள் அதிகம் என ஒத்துக் கொள்ள, வேறு வழியின்றி 75 படையினரும், 450 புலிகளும் இறந்ததாக கூறுகின்றது. மேலும் 1000 வரையிலான புலிகள் இந் நடவடிக்கையில் பங்குபற்றியதாகவும் கூறுகின்றது.

இதை அவதானமாகப் பார்த்து ஆராய்ந்து யுத்த பரிமாணத்தை மற்றைய போக்குகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் புலிகள் 1000 வீரர்களை இதில் பயன்படுத்தினார்கள் என்பதை பெரிது படுத்திக் காட்டப் பட்ட ஒன்றாகவே கருத வேண்டும். ஏனெனில் சிறிய சமவெளியான நிலப்பரப்பொன்றினைத் தாக்க இவ் வகையில் பெருந்தொகையில் செல்லும் போது இழப்புக்கள் அதிகமாக ஏற்படும் என்பது வரலாறு அறிந்த உண்மை. அத்துடன் பெருமளவு வீரர்கள் இப்படியான தாக்குதல்களில் ஈடுபட்டு பின் தமது நிலைகளுக்கு திரும்பும் சமயத்தில் எதிரிப்படையினரின் ஆட்டிலரி மற்றும் விமானப் படைகளுக்கு இலகுவாகப் பலியாகி விடும் அபாயமும் உண்டு. ஆகவே தாக்குதலில் ஈடுபட்ட புலிகளின் தொகை 100 முதல் 300 வரையே இருக்க வேண்டும்.

காயமடைந்த இறந்த படையினர் களத்திலிருந்து அகற்றப்பட்டு புதிதாக படையினர் கொண்டு வரப்பட்டு கிளிநொச்சி நோக்கிய முன்னேற்றம் தொடர்கின்றது.

**28.09.96 வெள்ளி.** அரச படையினரால் தெற்கு நோக்கிய மூன்றாம் முனை திறக்கப்படுகின்றது. போரை முடிவுக்குக் கொண்டு வரும் விதத்தில் தந்திரமாக உருவாக்கப்பட்ட இவ் வியூகத்தின் தன்மையைப் புரிந்து கொண்ட புலிகள் மூன்று முனைகளையும் தடுத்து நிறுத்தி அதிரடித் தாக்குதல்களை மேற் கொண்டவாறு பின்வாங்க ஆரம்பிக்கின்றனர்.


ஏனெனில் புலிகள் யுத்தத்தை தொடரும் பட்சத்தில்

i) மூன்று முனைகளிலும் ஆள் மற்றும் ஆயுத பலம் கூடிய சிறீலங்காப் படையினருடனான மோதலில் பெருந்தொகைப் புலிகளை ஈடுபடுத்தி ஒரு மரபு வழிப் போரை நடாத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

ii) மூன்று முனைகளிலும் போரிடும் புலிகளுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிகளை அதிகரித்து அவற்றிலும் பெருமளவு புலிகளை ஈடுபடுத்த வேண்டி வரும்.

iii) காயமுற்ற இறந்த புலிகளை களத்திலிருந்து அகற்றும் பணியிலும் அதிகமானோர் ஈடுபடவேண்டி வரும்.

**மும்முனைத் தாக்குதல்கள்:**




இந் நிலையில் மூன்று முனைகளிலும் இறந்த காயமுற்ற அரச படையினருக்குப் பதிலாக புதிதாகப் படையினர் நிரப்பப்பட்டு சமரைத் தொடரும் வேளை அதே அளவு வீரர்களை ஆட்பலம் குறைந்த புலிகள் அமைப்பு ஈடுபடுத்த வேண்டிய நிலை உருவாகும். அது மட்டுமல்லாமல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் குழுவினரும் காயமடைந்தோரை இறந்தோரை அகற்றும் குழுவினரும் எறிகணை மழை, உலங்குவானூர்தித் தாக்குதல்கள் மற்றும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் என்பனவற்றிற்கிடையே வேலையைத் தொடரும் பட்சத்தில் அதிக உயிரிழப்புக்கள் ஏற்படும். ஆகவே தான் புலிகள் தங்கள் பக்கம் உயிரிழப்புக்களை குறைக்கும் வண்ணமாகவே பின் வாங்கியுள்ளனர் என்றே கருத வேண்டும். ஆனாலும் புலிகளின் சிறப்பான கெரில்லாத் தாக்குதல்கள் கிளிநொச்சி நகரினிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பரவலாகத் தொடர்ந்து நடாத்தப்படுகின்றதை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

கிளிநொச்சி நகரை அரச படையினரால் கைப்பற்ற முடிந்த போதும் அதற்காகக் கொடுக்கப்பட்ட விலை அதிகமானது என்பதில் சந்தேகமில்லை. பல நூற்றுக்கணக்கான படையினர் இறந்த அதே வேளை 1000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)